1110
1110
2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 4
செந்தமிழ் மாதசஞ்சிகை
இதழ் 8

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1352 ரபீஉல் ஆகிர் மீ 1933 ஆகஸ்டு மீ

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 AUG 1933
MADRAS

உள்ளடக்கம்

1. ஸூரயே அபஸ் ... 281
2. நாயக வாக்கியம் ... 285
3. யவ்முந்நபி விழா ... 286
4. ஐரோப்பிய நாகரீகம் ... 287
5. இஸ்லாத்தின் இணையற்றஜோதி ... [illegible]
6. சன்மார்க்கம் நாகரீகத்துக்கு முரணானதா? ... 298
7. காதியானிப் பிரசாரத்திற்குத்தடை ... 303
8. மத உரிமை பாதிக்கப்பட்டதா? ... 307
9. வெற்றியா? தோல்வியா? விளம்புவீரே! ... 309
10. முஸ்லிம்களின் முன்னேற்றமும், அதற்குக் காரணமும் ... 311
11. ஐரோப்பா மதத்தைவிட்டா முன்னேற்றமடைந்தது? ... 313
12. இஸ்லாம் உலகத்துக்கோர் பேரருளாம் ... 315
13. திருவருள் தூது ... 319

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு ...	,,	4 0 0
தனிப் பிரதி ...	,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 AUG 1933
MADRAS

حفاظة الاسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 4	ஹிஜ்ரி 1352 ரபீஉல்ஆகிர் மீ 1933 ௵ ஆகஸ்டு மீ	இதழ் 8

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக்கொண்டு (இதனை ஆரம்பிக்கிறேம்.)

ஸூரயே அபஸ்

1. (முஹம்மத்) கடுகடுத்து (முகத்தைத்) திருப்பிக்கொண்டார்.

2. அவரிடம் குருடர் வந்ததற்காக.

3. மேலும் அவர் பரிசுத்தராகக்கூடுமென்பதை எது உமக்கு அறிவிக்கும்?

4. அல்லது உபதேசத்தைக் கேட்டால் அது அவருக்கு பிரயோஜனம் கொடுக்குமென்று,

5. (ஆனல் உம்மை) லக்ஷியம் செய்யாதவனைப்பற்றியோ வெனில்,

6. நீர் அவன் பக்கமே முன்னேக்குகிறீர்.

7. மேலும் அவன் தன்னைப் பரிசுத்தம் செய்துகொள்ளாவிடின் உம்மீது என்ன தோஷமிருக்கிறது?

8. மேலும் உம்மிடம் ஓடி வருபவரோ,

9. மேலும் அவர் (அல்லாஹ்வுக்கு) பயந்தவராய்,

10. நீர் அவரைவிட்டும் பராக்காயிருக்கிறீர்.

11. (காரியம்) அவ்வாறன்று. நிச்சயமாக இஃது ஓர் உபதேசமாக யிருக்கிறது.

12. ஆதலின் நாடுகிறவன் அதை மனனஞ் செய்யட்டும்.

13. சங்கையான ஆகமங்களில் (இருக்கும் நிலைமையில்)

14. உயர்த்தியாக்கப்பட்டவை, பரிசுத்தமாக்கப்பட்டவை (யாக இருக்கும் நிலைமையில்)

15. எழுதுகிறவர்களின் கரங்களில் (இருக்கும் நிலைமையில்)

16. (அவர்கள்) சங்கைவான்கள், நல்லொழுக்கமுள்ளவர்கள்.

17. மானிடன் நாசமாகக்கடவன்! என்ன நன்றிகெட்டவனாக யிருக்கின்றான்?

18. அவனை எந்த வஸ்துவினால் (ஆண்டவன்) படைத்தான்?

19. (ஒரு சொட்டு) இந்திரியத்தினால் அவனைப் படைத்தான், பிறகு அவனை தகுதியுள்ளவனாக ஆக்கினான்.

20. பிறகு அவனுக்காக வழியை இலேசாக்கினான்.

21. பிறகு அவனை மரிக்கச்செய்து பின்னர்ப் புதைக் குழியில் வைக்கச் செய்கிறான்.

22. பிறகு நாடும்போது அவனை உயிர்ப்பித்து எழுப்புவான்.

23. (மானிடன்) அவ்வாறு செய்யலாகாது. ஆண்டவன் ஏவியதை அவன் செய்துமுடிக்கவில்லை.

24. அப்படியானால் மனிதன் தன் ஆகாரத்தின் பக்கம் நோட்டமிட்டுப் பார்க்கட்டும்.

25. நிச்சயமாக நாம் (மேலிருந்து) தண்ணீரை அதிகமாக சொரியச் செய்தோம்.

26. பிறகு நாம் பூமியை பிளப்பாக பிளந்தோம்.

27. பிறகு நாம் அதில் தான்யத்தை முளைக்கச் செய்தோம்,

28. மேலும் கோடி முந்தரியையும், காய் கிழங்கையும்,

29. இன்னும் ஜைத்தூன் மரத்தையும், பேரீச்ச மரத்தையும்,

30. இன்னும் அடர்த்தியான தோட்டங்களையும்,

31. இன்னும் கனிவர்க்கத்தையும், தீனிகளையும்,

32. உங்களுக்காகவும், உங்கள் ஆடு மாடு ஒட்டகங்களுக்காகவும் பிரயோசனமாகும் பொருட்டு உண்டாக்கினோம்,

33. ஆகவே பயங்கரமான சப்தம் வரும் போது,

34. மனிதன் தன்னுடைய சகோதரனை விட்டு வெருண்டோடும்படியான நாள்,

35. இன்னும் தன்னுடைய மாதாவையும் பிதாவையும்

36. இன்னும் தன்னுடைய மனைவியையும் மக்களையும் (விட்டு ஓடும்படியான நாள்)

37. அவர்களுள் ஒவ்வொரு மனிதனுக்கும் அந்நாளில் இதரர்களிடம் தேவைப்படாத ஒரு நிலைமை ஏற்பட்டுவிடும்.

38. அந்நாளில் (அநேக) முகங்கள் பிரகாசமாயிருக்கும்.

39. சிரித்தனவாகவும் மலர்ச்சியுடையதாகவும்,

40. இன்னும் (பல) முகங்கள் அந்நாளில், அதன்பேரில் புழுதி படிந்திருக்கும்.

41. (இன்னும்) கரிய நிறம் (முகத்தை) மூடிக்கொண்டிருக்கும்.

42. இவர்கள் தாம் நிராகரிப்பவர்களான தீயவர்களாயிருக்கும்.

[அதாவது முஹம்மத் (ஸல்.) தம்மிடம் குருடர் வந்தக்கால் கடுகடுத்ததோடில்லாது முகத்தையும் திருப்பிக்கொண்டார். அக்குருடர் உபதேசத்தைக் கேட்டால் ஒருக்கால் பரிசுத்தராக ஆய்விடக் கூடுமென்பது இவருக்குத் தெரியாதா? மேலும் எவர்கள் இவரின் கட்டளையை அலக்ஷியஞ்செய்து நடக்கின்றார்களோ அவர்களுக்கு நேர்வழி காண்பிக்க முயற்சிக்கின்றார்; அவர்களை நேர்வழிக்குக் கொண்டுவர இவர் கடமைப்பட்டில்லை என்பது இவருக்குத் தெரியாதோ? அவர் ஒருக்காலும் இவ்வாறு செய்யலாகாது. இவ்விஷயம் ஓர் உபதேசமாக யிருப்பதால் இதன்மீது விருப்பங்கொள்பவன் இதனை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளட்டும். மானிடன் என்ன இவ்வாறு நன்றிகெட்டவனாகயிருக்கின்றான்? அல்லாஹ்தஆலா மானிடனை ஒரு துளி இந்திரியத்திலிருந்து படைத்து அவனுக்கு வன்மையைக் கொடுத்து நேரான பாதையை காண்பித்துக் கொடுத்த உபகாரத்தை மறந்து நன்றி கெட்டவனாய் ஆய்விட்டதால், அவன் நாசமாகப் போகக் கடவான். அல்லாஹ்தஆலா அவனை மரிக்கச்செய்து பின்னர் கப்ரில் வைத்து பிறகு தான் நாடியபொழுது எழுப்புவான் என்பதை அவன் மறந்திருப்பதால்தான், அல்லாஹ்தஆலா ஏவியவைகளைச் செய்யாதிருக்கிறானே? இதுவன்றி மானிடன் தன் ஆகாரத்தின் பக்கல் கவனத்தைச் செலுத்தி, அல்லாஹ்தஆலா மழையைச் சொரியச்செய்து பூமியைப் பிளக்க வைத்துத் தானியத்தை முளைக்கும்படி செய்து கொடிமுந்திரியையும் காய்கறி கிழங்குகளையும் ஜைத்தூன் மரத்தையும், பேரீச்சம் மரத்தையும் அடர்த்தியான தோட்டங்களையும் பழவர்க்கத்தையும் தீனியையும் மானிடர்களுக்காகவும் ஆடுமாடு ஒட்டகங்களுக்குப் பிரயோசனந்தரும் விதத்திலும் உண்டுபண்ணுகிறான் என்பதை நோட்டமிட்டுப் பார்க்கட்டும்! கடைசியில் மானிடன்மீது பயங்கரமான சப்தம் ஏற்

OFFICE OF ... OF BOOKS
25 AUG 1933

படக்கூடிய (மறுமை) நாள் வரும் அதுபொழுது மானிடன் தன் சகோதரன் மாதா, பிதா, மனைவிமக்கள் முதலியவர்களை விட்டு வெருண்டோடுவான். அந்நாளில் அநேக முகங்கள் பிரகாசமானதாகவும், அநேக முகங்கள் மலர்ந்த சிரிப்புடையதாகவும் இருக்கும். பல வேறுமுகங்கள் புழுதி நிறைந்து கரிய நிறமுடையதாகக் காணப்படும். இம்முகத்தையுடையவர்கள்தான் தீய பாவிகளாகும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளட்டும் என்பதே.]

இத்திரு அத்தியாயம் மக்கீயாம். எப்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கடுகடுத்து முகத்தைத் திருப்பிக் கொண்டதற்காக இவ்வத்தியாயம் இறங்கியதால் இஃது 'ஸூரயே அபஸ்' முகம் கடுகடுத்ததின் அத்தியாயம் என்னும் திருப்பெயருடன் விளங்கி வருகிறது. அதாவது, எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் ஒரு நாளன்று மக்கமா நகரின்கண் மஸ்ஜிதஹறுமில் வீற்றிருக்குங்கால் அவர்களது சமீபத்தில் குரைஷ் தலைவர்களான உத்பா, ரபீஆ, ஷைபா, அபூஜஹல், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.), அப்துல் முத்தலியின் குமாரர் முதலியவர்களும் சமுகங் கொடுத்திருந்தார்கள். அதுபொழுது திருவருள் தூதர் (ஸல்.) அவர்கள் அன்னோருக்கு இஸ்லாத்தின் மேன்மை, விக்கிரக வணக்கத்தின் கெடுதி முதலியவைகளை எடுத்து விளக்கிக்கொண்டு, தங்களது முழுகவனத்தையும் அன்னோர்பால் செலுத்திக் கொண்டிருந்தார்கள். இந்நிலைமையில் 'இப்னு உம்ம மக்தூம்' என்று அழைக்கப்படும் அப்துல்லாஹ்பின் ஹூரைஷ் என்பவர் அங்குவந்தார். அவர் குருடராகயிருப்பதால் கூட்டத்தின் நோக்கத்தையும் சமய சந்தர்ப்பத்தையும் கவனியாதுபலதையும் கூறமுற்பட்டு தங்கள் நோக்கத்திற்கும் இஸ்லாமியப் பிரசாரத்திற்கும் ஏதாகிலும் இடையூறு விளைவித்து விடுவாரென எம்பெருமானார் (ஸல்.) கருதினார்கள். அதேபோன்று அக் குருடர் சபை கூடியிருப்பதின் நோக்கத்தைத் தெரிந்து கொள்ளாது நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது சமீபம் வந்து உட்கார்ந்ததும், அல்லாஹ்வின் ரசூலே எனக்கு குர்ஆன்ஷரீபின் சில அத்தியாயங்களைக் கற்பித்துக் கொடுப்பதற்காக என் மீது தங்கள் கவனத்தைச் செலுத்துங்கள்; யான் வெகு பிரயாசையோடு தங்களிடம் வந்திருக்கிறேன் எனக் கூறினார். எம்பெருமானார் ஏகத்துவத்தூதர் (ஸல்.) அவர்கள், குரைஷ் தலைவர்கள் பக்கல் தங்கள் கவனத்தைச் செலுத்தியிருந்ததால், அவரை சற்றுநேரம் தாமதிக்கும்படி கூறிவிட்டு தங்கள்சேவையில்பராக்காயிருந்தார்கள். அக்குருடர் சற்றுநேரம் தாமதித்திருந்தபின் மறுபடியும் அவ்வாறே கூற முற்பட்டார். இதுபொழுதும் சற்றுநேரம் தாமதிக்கும்படி நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறிவிட்டு, தங்கள் காரியத்தில் பராக்குற்றார்கள். அக்குருடர் அதன்பின் பன்முறையும் அவ்வாறே கூறிக்கொண்டிருந்ததால், குரைஷ் தலைவர்கள் மனக்கவலை அடைந்தார்கள். இதனைக் கண்டு எம்பெருமானார் ஏகத்துவத் தூதர் (ஸல்.) அவர்களின்முகாரவிந்தத்தில் கோபத்தின் அறிகுறி தோன்றலாயிற்று; தங்கள் பார்வையை அக்குருடர் பக்கத்திலிருந்து திருப்பி குரைஷ் தலைவர்கள் பக்கல் முன்னோக்கினார்கள். அதுபொழுது இவ்வத்தியாயம் இறங்கிற்று. ஹஸ்ரத் ஜீப்ரயீல் (அலை.) அவர்கள் இவ்வத்தியாயத்தை ஓதிக்காண்பிக்கும்போது எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் அளவற்றகவலையடைந்தார்கள்; அவர்களது முகம் மஞ்சனித்துப் போய்விட்டது. ஆனால் "கல்லா இன்னஹா தத்கிரத்துன்' காரியம் அவ்வாறன்று நிச்சயமாக இது ஓர் உபதேசமாகயிருக்கிறது என்னும் வாக்கியத்தை ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் ஓதியபோது, எம்பெருமானார் (ஸல்.) அவர்களது வதனத்தில் சந்தோஷ அறிகுறி தோன்றி, அல்லாஹதஆலா தங்கள்மீது கோபங் கொள்ளவில்லை; உணர்ச்சி உண்டுபண்ணுவதற்கு இவ்வத்தியாயத்தை இறக்கி வைத்தான் என்பதைத் தெரிந்துகொண்டு நிம்மதியுற்றார்கள். அதற்குப் பின் தயாளசீலர் சற்குண நாதர் (ஸல்.) அவர்கள் அக்குருடரின் இல்லமேகி அவருக்குச் சமாதானஞ்சொல்லி அழைத்து வந்து தங்கள் துப்பட்டியை விரித்து அதன்மீது அமரச் செய்தார்கள். பிறகு அக்குருடர் திருசபைகளுக்கு விஜயஞ் செய்து விடுவாரானால், அவருக்கு மேதை மரியாதைகள் செய்து அன்போடு அவர் பக்கல் முன்னோக்குவார்கள்.

அல்லாஹ்தஆலா தனக்கு உகப்பான அடியார்களில், சிரேஷ்டமானவர்களை, மானிடர்களுக்கு நேர்வழி காண்பிப்பதற்காகத் தெரிந்தெடுத்துக் கொள்கிறான். ஏதாகிலுமொருக்கால் அவர்களில் மானிட சுபாவத்தின் காரணத்தால் தவறுகள் ஏற்பட்டு, தங்கள் மன விருப்பப்படி ஏதாகிலுமொரு காரியம் அவர்களின்று நிகழ்ந்துவிடுமாயின் உடனே உணர்ச்சி வர்த்தி அக்காரியத்தை விட்டு தவிழ்ந்துகொள்ளும்படி செய்வது அல்லாஹ்தஆலாவின் வழக்கம். அத்தன்மைபோல் அல்லாஹ்தஆலா எம்பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு இவ்வத்தியாயத்தின்மூலம் உணர்ச்சி வர்த்தி வைத்தான் என்பதை நன்கு தெரிந்துகொள்கிறோம்.

எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், வியாதியஸ்தர்களின் நிலைமையைக் கண்டு கடிசான வியாதியால் பீடிக்கப்பட்டிருப்பவர்கள் பக்கல் தங்கள் கவனத்தைச் செலுத்தி அவர்களுக்கு ஔடதம்கொடுத்து அன்னோரின் பிணியை நீக்குவதற்கு முயற்சித்தார்கள். அல்லாஹ்தஆலா ஒவ்வொரு காரியத்தின் முடிவைப் பார்க்கிறவனாகயிருப்பதால், எந்த வியாதி சொஸ்தமாகும், எந்த மனிதனில் சொஸ்த மேற்படுவதற்குள்ள அம்சமிருக்கின்றது என்பதை எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் ஆராய்ந்து பாராது, ஔடதம் செய்யமுடியாத வியாதியஸ்தன் பக்கல் எதற்காக இவ்வாறு முன்னோக்கிக் கொண்டிருக்கிறார்கள்; அவ்வியாதியஸ்தன் மரணமாய் விடுவதுகொண்டு அவர்கள் மீது யாதொரு பொறுப்புங் கிடையாதென இதன் 7-வது வாக்கியத்தின்மூலம் "அவன் தன்னைப் பரிசுத்தஞ் செய்துகொள்ளாவிடின் உம்மீது என்ன தோஷமிருக்கிறதென்று" கேள்க்கிறான். அதாவது, அந்தக்காபிர்கள் சன்மார்க்கத்தைத் தெரிந்துகொண்டு குப்ரியத்தை விட்டொழித்து நேர்வழிக்கு வராவிடில் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் மீது யாதொரு தோஷமுங் கிடையாது; விஷயத்தைத் தெரிவித்துவிட வேண்டியதுதான் அவர்களது சேவையாகும்; அதுவன்றி நேர்வழியின் பக்கல் கொணர்ந்து சேர்த்து விடுவது அவர்களின் சேவையாக மாட்டாது என அறிவிக்கின்றான். எனவே சன்மார்க்கத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் அவிழ்க்கைபூண்டு ஆண்டவனை பயந்தவராக நேர்வழிபெறும் நோக்கத்தோடு உம்மிடம் வரும் உம்மமக்தூம்போலொற்றவர்களின் பக்கல் நீர் அன்போடு முன்னோக்கவேண்டியதிருக்க, அதற்கு மாற்றமாய் அவரை விட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டு வழிகேடர்களின் பக்கல் முன்னோக்கிக்கொண்டிருக்கின்றீர். இவ்வாறு ஒருக்காலும்செய்யலாகாது என அறிவிக்கிறான்.

எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களினது சன்னிதானத்தில் குரைஷ் குலத்தின் மூர்க்க குணம்படைத்த மாபெரும் வம்பர்கள் வீற்றிருக்குங்கால், உம்ம மக்தூம் என்னும் குருடர் அங்குவந்து, பெருமானார் (ஸல்.) அவர்களது உபதேசத்தில் குறுக்கிட்டபொழுது, அவர் பக்கல் முன்னோக்குவதால் மூர்க்க குணமுடைய குறைஷியர்கள் மனவருத்தமுற்று நேர்வழி பெறாது சென்று விடுவார்களென்று எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கருதியதால், அவர்கள் அவ்வாறு கருதலாகாதென அல்லாஹ்த ஆலா அறிவித்து விட்டு, அம்மூர்க்கர்களை நோக்கி, மானிடர்களுக்கு நாம் சுவாத்தியம் ஐசுவரியம், புத்திர பாக்கியம் முதலியவைகளை அளித்தது நமக்கு நன்றி பாராட்டுவதற்காகவும், அவைகள் நம்மால் அளிக்கப்பட்டுள்ள நன்கொடை என்று உணர்ந்துக் கொள்ளுவதற்காகவுமேயாம். இதுவன்றி மூர்க்ககுணம் பூண்டு, தன்னால் அனுப்பப்பட்ட தூதர்களின் வார்த்தைக்கு செவிசாய்க்காது, தன்னை பயபக்தியோடு வணங்கிக்கொண்டிருக்கும் நல்லடியார்களை தாழ்மையான பார்வையைக் கொண்டு நோக்கி, உபதேசம் புரியும் இடத்தில் அவர்களுடன் கூடியிருப்பதையும் அவர்களுடன் சேர்ந்து வணக்கம் புரிவதையும் வெறுத்திருப்பதற்காகவல்லவென்பதை மானிடன் அறிந்துகொள்ளல் அத்தியா அவசியமாகும். இதனை நன்கு தெரிந்தொழுகாததால்தான் மானிடன் நன்றி கெட்டவனாய் விட்டான், அவனை ஒரு துளி இந்திரியத்திலிருந்து படைத்து பிறகு ஒழுங்குபடுத்திவைத்ததை அவன் உற்றுணர்ந்து பாராது மூர்க்ககுணம் படைத்தவனாகயிருப்பது எதற்காகவென்று கேட்கின்றான்.

(தொடரும்)

நாயக வாக்கியம்.

"என்னிடம் 'உஹத்' மலையளவு தங்கமிருந்தபோதிலும் அதில் கோஞ்சங்கூட வைத்துக்கொள்ளாது மூன்று தினங்களுக்குள் ஆண்டவனது பாதையில் செலவு செய்துவிட வேண்டுமென்பது எனது விருப்பமாகும். ஆனால் கடன்பட்டிருந்தால் அதனை நிறைவேற்றுவதற்காக வைத்துக்கொள்ளலாம்" என எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

அதாவது, எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸம்) அவர்கள்பால் எவ்வளவு ஐசுவரியங்கள் வந்தபோதிலும் அவை யாவற்றையும் அதேநேரத்தில் தேவை யுற்றார், பாத்தியஸ்தர் முதலானோருக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிடுவார்கள். அதில் ஏதாகிலும் மீதமிருக்குமாகில், அதற்குடையாருக்குக் கொடுத்துவிடும்வரை எம்பெருமானார் (ஸல்) அவர்கள் நிம்மதியடையமாட்டார்கள்.

மேலே கூறப்பட்டுள்ள ஹதீதால், உலோபித்தனம்செய்வது பெரும் கெடுதி என்பதையும், அல்லாஹ்தஆலா எவ்வளவு ஐசுவரியங்களைக் கொடுத்திருக்கிறானோ அதற்குத் தக்கவாறு அவன் பாதையில் செலவிட வேண்டுமென்பதையும், தம்மிடமுள்ள யாவற்றையும் செலவுசெய்து விட்டு பிறர் கையை எதிர்பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கலாகாதென்பதையும், தம்மீது கடமையாக்கப்பட்டுள்ள ஜகாத்தையும் நிறைவேற்றாது உலோபித்தனம் செய்துகொண்டிருக்கலாகாதென்பதையும் நன்கு தெரிந்துகொள்கிறோம். சுருங்கக் கூறுமிடத்து, அல்லாஹ்தஆலா எவ்விஷயத்திலும் நடுத்தரமாகயிருப்பதையே விரும்புகின்றானாதலின், முழுதும் உலோபித்தன முடையவனாக ஆய்விடாமலும் தம்மிடமுள்ள யாவற்றையும் செலவு செய்துவிட்டு மனசஞ்சல மடைந்தவனாக உட்கார்ந்திருக்கலாகாதெனவும் அறிவிக்கின்றான்.

தவிர, மானிடன் கடனாளியாகயிருப்பானாகில், முதன் முதலாக தன் கடனைத் தீர்த்துக் கொள்வதற்காக பிரயாசை எடுத்துக் கொள்ள வேண்டியது அத்தியா அவசியமாகும். ஸதக்கா கொடுப்பது, நலவான பாதையிற் செலவிடுவது இவைகளைப் பார்க்கினும் கடனை நிறைவேற்ற முயற்சிப்பது தான் முதன்மையாகும் என்பதை மேலே கூறப்பட்டுள்ள ஹதீதால் நன்கு தெரிந்து கொள்கிறோம். ஆனால் நம்முடைய நிலைமையோ இதற்கு நேர்மாற்றமானதாகயிருக்கிறது. ஒரு சாதாரண செலவிற்குங்கூட கடன் வாங்குகின்றோம். அந்தக் கடனும் சாதாரண கடனாகயில்லாது வட்டிக் கடனாகயிருக்கிறது. சில அறியாத மாக்கள் கத்னா, விவாகம் முதலியவைகளிலுள்ள அனாச்சார சடங்குகளை நிறைவேற்றுவதற்காகவும், சன்மார்க்கத்தில் விலக்கப்பட்ட ஷிர்க் பித்அத்தான காரியங்கள் புரிவதற்காகவும் வட்டிக்கு ரூபாய் வாங்கி அச்சடங்குகளை நிறைவேற்றுகின்றார்கள். இஃது இழிவான விஷயமல்லவா? ஆனால் இதனை அறியாத மாக்கள் மட்டுந்தான் செய்து வருகின்றார்களென்று கருதி விடலாகாது. தங்களை கனவான்களென்று மதித்துக் கொண்டிருக்கும் பெரியார்களுங்கூட இவ்வியாதியில் சிக்குண்டுழலாமலிருக்கவில்லை. அதிலும் எவ்வகையிலும் கடன் வாங்கியாகிலும் பழக்க வழக்கத்தை நிறைவேற்றிவைக்க வேண்டுமென்று கூறும் சில பெரியார் எனப்படுவோரும் நம்மிலில்லாதிருக்கவில்லை காலச் சக்கரம் வெகு தீபரமாக சுழன்று கொண்டு வரும் இக்காலத்திலும் நம்மனோர் விழிப்புறாது மூடத்தனத்திலேயே மயங்கிக் கிடப்பது பெரும் விந்தைக்குறியதல்லவா? இவ்வாறு நாம் அனாச்சாரங்களை நிறைவேற்றுவதிலும் ஷிர்க் பித்அத்தான காரியங்கள் புரிவதிலும் நமது ஐசுவரியங்களைச் செலவு செய்வதுமன்றி வட்டிக்குக் கடன் வாங்கி மென்மேலும் அதனை நிறைவேற்றுவதில் ஈடுபடுவோமாகில் நாம் முன்னேற்றமடைவது எங்ஙனம்? சீர்திருத்தம் பெறுவது எப்பொழுது? இவைகளை எல்லாம் விட்டொழித்து முஸ்லிம்கள் முன்னேற்றமடையுங் காலந்தான் சாலச் சிறந்த காலமாகுமென்பதை நன்கு தெரிந்துகொள்வோமாக.



யவ்முந்நபி விழா

எம்பெருமானார் திருவருள் தூதர் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் இப்பூ உலகின்கண் திருஜனனமான ரபீஉல் அவ்வல்மீ 12-ந் திகதியை கண்ணியமிக்கதோர் புண்ணிய நந் நாளாகக் கருதி இப்பூபரப்பின்கண் வதியும் மானிட கோடிகள் யாவரும் அம்மாதம் ஆரம்பமானவுடன் பள்ளிவாசல்களிலும் தம்தம் இல்லங்களிலும் மௌலிது ஷரீப்கள் ஓதியும் ஏழை மக்களுக்கு அன்னமளித்தும் மிகபக்தியோடு அத்திருதினத்தை வெகு நந்நாளாகக் கொண்டாடி வருகின்றனர். ஆனால் காலத்தின் போக்கையுண்ணி இக் கொண்டாட்டத்தைப் புதிய முறையில் அமைத்து அதனை அகில உலக இயக்கமாகச் செய்து விடவேண்டுமென்று லாகூர் மௌலானா அப்துல் மஜீது சாஹிப்கர்ஷீ அவர்கள் பஹீரதப் பிரயாசை கொண்டு, ஐந்தாண்டுகளுக்குமுன் எம்பெருமானார் (ஸல்.) அவர்களது தூய்மை வாய்ந்த வாழ்க்கைச் சரிதையை யாவரும் நன்கு தெரிந்துகொள்ளுமாறு உர்தூவில் சரிதைநூல் தயாரித்து அதனை பற்பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கும்படிசெய்து உலகமுழுவதிலும் இவ்வியக்கம்பரவி முஸ்லிம், முஸ்லிம் அல்லாதார் யாவரும் எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் வாழ்க்கைச் சரிதையை உண்மையான முறையில் தெரிந்துகொள்வதற்கு தக்க ஏற்பாடு செய்தார்கள். அதன்பின் நாளுக்கு நாள் இவ்வியக்கம் வலுவடைந்து இற்றைக்கு பற்பல தேசாதிபதிகளும் ஷெய்குல் இஸ்லாம்களும் நீதி இலாக்கா மந்திரிகளும் மற்றும் ஏனையோரும் ஆதரித்து அன்புடன் வரவேற்கும் மாபெரும் கீர்த்திவாய்ந்த இயக்கமாக இலங்கா நிற்கின்றது.

எனவே, இவ்வாண்டில் உலகின் பற்பல பாகங்களாகிய அரேபியா, அமெரிக்கா, ஐரோப்பா, சைனா, மலாயா, சிலோன், இந்தியா முதலிய இடங்களில் இவ்விழாக் கொண்டாடப்பட்டிருக்கும் தோரணையை நன்குணர்ந்து பார்ப்போமாகில், இவ்வியக்கம் அகிலத்தவர்களின் மனதை எவ்வாறு கவர்ந்து கொண்டிருக்கிறதென்பதை நன்கு தெரிந்து கொள்வோம்.

நம் தென்னாட்டைப் பொருத்த மட்டில் நாம் அரும்பிரயாசையோடு பத்திரிகை வாய்லாகவும் விளம்பர மூலமாகவும் இவ் வியக்க சம்பந்தமாக தக்க பிரசாரஞ் செய்து வருவதன் பயனாய் நாளுக்கு நாள் இவ்வியக்கம் மிக்க அபிவிர்த்தியடைந்து ஆங்காங்கு தக்க முறையில் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ் வாண்டில் நம் சங்க சார்பாக 'திருவருள் தூது' என்னும் நூல் 30,000 வரை, தயாரிக்கப்பட்டு ஜாவா, சைனா, மலாயா, பர்மா, சிலோன் முதலிய தேசங்களுக்கும் தென்னாட்டிலுள்ள சிற்றூர் முதல் பெரும் பட்டணம் வரை ஒவ்வொரு இடங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. அதனை ஆங்காங்கு நடைபெற்றுள்ள மகா நாடுகளில் வாசித்துக் காட்டப்பட்டு இந்து முஸ்லிம் கிருஸ்தவர் முதலான யாவருக்கும் தாளாரமாய் வினியோகிக்கப்பட்டதின் பயனாய், எம்பெருமானார் திருவருள் தூதர் (ஸல்) அவர்கள் உலகிற்கு எத்திவைத்த திருத்தூதுகளை உலகினர் யாவரும் நன்கு தெரிந்து கொள்ளுவதற்குள்ள தக்க வசதி ஏற்பட்டு விட்டதைக் கண்டு நாம் மிக நன்றியுள்ளவர்களாகயிருக்கிறோம். இவ்வியக்கம் தக்க முறையில் நீடூழி வோங்க ஏகவல்ல நாயன் தக்க உதவிபுரிவானாக.

ஐரோப்பிய நாகரீகம்

ஐரோப்பிய வர்க்கத்தாரில் மதுவருந்தல் என்னும் பழக்கம் நாளுக்கு நாள் அதி கரித்து வருவதன் காரணத்தைத் தெரிந்து கொள்வதற்காக சென்ற சில நாளைக்குமுன் லண்டன்மா நகரிலுள்ள 'பைபிள் ஹவ்ஸ்' வில் லண்டன் பிஷப்பின் தலைமையின் கீழ் ஓர் மகாநாடு கூடிற்று. அதில் மேஜர் ரெசர் டோர்கட் என்பார் அதுசம்பந்தமாய் சாக்ஷி யம் கொடுத்ததின் முக்கிய பாகம் வருமாறு:

மகா யுத்தத்திற்குமுன் பைத்துல் முகத்த வில் லைசென்ஸ் பெற்ற சாராயக் கடைகள் 25 இருந்தது. இதுகாலை 400வரை இருந்து வருகிறது. இதுவன்றி தேசம் முழுவதிலும் 970 கடைகளிருக்கின்றன. சாராயம் தயா ரிப்பதற்காக மூன்று தொழிற்சாலைகள் பிரத்தியேகமாய் திறந்து வைக்கப்பட்டிருப் பதுடன் வெளிதேசங்களிலிருந்தும் அபரி மிதமான சாராயங்கள் இறக்குமதியாய்க் கொண்டிருக்கின்றது. இதுவன்றி குற்றம் புரிவோர் அபரிமிதமாய்க் காணப்படுகின் றார்கள்; பற்பல சண்டை சச்சரவுகளும் மோட்டார்விபத்துகளும் ஏற்பட்டுக்கொண் டேயிருக்கின்றன; துர்ச்செய்கை புரியும் மாதுக்கள் அபரிமிதமாய் எங்கும் காணப் படுகின்றனர்; யுத்தத்திற்குமுன் யாரும்மது வருந்தக் கூடாதென்னும் சட்டமிடப்பட்டி ருந்தது. இதுபொழுது அவ்விடத்தில் பிரிட்டிஷ் ஆக்ஷி ஏற்பட்டது முதல் தேசத் தின் அபிவிர்த்தியைக் கருதி அடிமைகள், அபின், ஆயுதம் முதலியவைகளின் விற்பனை கள் தடை செய்யப்பட்டுப் போயும் சாராய விற்பனைக்கு யாதொரு தடையும் ஏற்பட வில்லை (மான்ஜெஸ்டர் கார்டியன்)

சோதிரர்காள்! இவ்வாறு ஆங்கிலேயரே சாக்ஷியம் பகர்ந்த பின்னருங்கூடவா மே னாட்டு நாகரீகத்தின்மீது மோகங்கொண்டு அதனை சிலாக்கியமாகக் காண்கின்றீர்கள்!

சூது விளையாடல்

சூது விளையாடுதலை விசாரணை புரிவதற் காக நியமிக்கப்பெற்ற கமிஷன்முன் போ லீஸ் ஆபீஸராகிய கர்னல் கூக் என்பார் சாக்ஷியங் கூறுவதற்கிடையில் குறிப்பிட்ட தாவது:—

சகல விளையாட்டுகளிலும் சூது சம்பந்தப பட்டேயிருக்கின்றது; அதனைத் தடை செய்வதற்கு யாதொரு மார்க்கமும் தோன்ற வில்லை; விளையாட்டில் ஈடுபடுவதனென் னும் வியாதியானது ஜுரத்தைப் போன்று ஒவ்வொரு சங்கங்களையும் பீடித்து நிற் கின்றது.—(டெய்லி எக்ஸ்பிரஸ்)

விவாக விலக்கு செய்யும் முறை

ஐரோப்பிய மாதுக்கள், அமெரிக்க மாதுக் கள் முதலானோர் கீழே குறிப்பிடப்படும் காரணங்களுக்காக நியாய ஸ்தலங்களுக்குச் சென்று விவாக விலக்குப் பெறுகின்றார்கள்.

(1) புருடன் பருமனாகயிருப்பதாக

(2) புருடன் வயிறு பெருத்தவனாக யிருப் பதாக.

(3) புருடன் துயில்புரியும்போது கொரட் டை கொள்வதற்காக

(4) புருடன் அதிகமாக தன்மீது விருப் பம் கொள்பவனாக யிருப்பதற்காக.

அரைநேரத்திற்காக விவாகம்

நியூயார்க்கில் அரைநேரத்திற்காக மட்டில் விவாகம் புரிந்துகொள்ளும் வழக்கம் அனுஷ் டிக்கப்பட்டு வருகிறது. அதாவது, தம்பதி கள் இருவருக்கிடையே ஒரு நேரத்தைக் குறிப்பிட்டுக்கொண்டு அதில் புருடன் பெண் சாதியாக ஒன்றுகூடி வாழ்க்கை நடத்துகின் றார்கள். அதற்குப்பின் இருவரும் சுயேச்சை பெற்றவர்களாகி விடுவதால், அவர்களில் ஒரு வர் புரியும் காரியத்தில் மற்றவருக்கு எவ் வித சம்பந்தமுமில்லாது போய்விடுகிறது. அதுபொழுது ஒவ்வொருவரும் தம் யுக்தப் படி நடந்துகொள்கின்றனர்.

பப்ளிக் ரஸ்தாக்களில் வழிப்பறிக்கொள்ளை

இங்கிலாந்தின் கியாதி வாய்ந்த பத்திரிகை யான மான்செஸ்டர் கார்டியனின் நீண்ட தோர் வியாசத்தின் ஆரம்பத்திலுள்ள சில வரிகளாவன:—

இங்கிலாந்தின் வீதிகளில் இராக்காலங் களில் பிரயாணஞ் செய்வது நாளுக்கு நாள்

அபாயகரமானதாகவே யிருந்து வருகிறது. இது சம்பந்தமான விஷயங்களின் நிகழ்ச்சியானது அதிகரித்துக் கொண்டே போகிறது எனவே தனியாகச் செல்லும் மோட்டாரும் வழிமறித்து கொள்ளையிடப்படுகிறது.

நவீன நூதன சீர்திருத்த முறை

தையற் தொழிற்சாலையின் தலைவரென்று பிரக்யாதி பெற்று விளங்கும் மிஸ்டர் எப். வி. எக்ஸ். என்பார் 'டர்பேரிஸ் ஸேம்பர் ஆப் டிரேட்'னுடைய கூட்டத்தில் கூறியதாவது :—

மகா யுத்தத்திற்குமுன் தைக்கப்பட்டதில் ஐந்துவிதமான உடுப்புகளையும் ஆறு மாதிரியான கால் ஜோடுகளையும். எங்கள் தொழிற்சாலையில் வைத்திருந்தோம். அவைகளை பெண்கள் மிக்க அன்போடு வாங்கிச் செல்பவர்களாக இருந்தார்கள். இதுகாலை எங்கள் தொழிற்சாலையில் 30 விதமான உடுப்புக்களும் 130 வகையான கால் ஜோடுகளும் தயாராக வைக்கப்பட்டிருந்தும் மாதுக்களின் மனம் அதில் திருப்தியடையாது புதிய புதியவிதமாக தயார் செய்வதற்கே ஆர்டர் செய்கின்றார்கள்.

அழகிய மாதுக்களின் தற்கொலை

பாரிஸ் நகரிலுள்ள அழகு பொருந்திய மாதுக்கள் தற்கொலை புரிந்துகொள்வதற்காக ஒரு சட்ட திட்டம் பொருந்திய (கிளப்) சங்கத்தை ஸ்தாபித்திருக்கின்றார்கள். அதில் 39 வயதிற்கு அதிகப்பட்டுள்ள எந்த மாதும் மெம்பராக முடியாது; எந்த மெம்பராகிலும் மூன்று மாதத்திற்குள் தற்கொலை புரிந்துகொள்ளாவிடில் அச்சங்கத்தின் மெம்பர் பதவியைவிட்டு நீக்கப்படுவாள். அச்சங்கம் பாரிஸ் நகரிலுள்ள வளம்பொருந்திய ஓர் இடத்தில் மிக அருமையாக அமைக்கப்பட்டிருக்கின்றது. அதில் ஒவ்வொரு வாரத்திலும் ஒவ்வொரு அழகிய மாது தற்கொலை புரிந்துகொள்கின்றாள்.

மாதர்களிடம் தகாத முறையில் நடந்துகொள்ளல்

பெண்சாதி, பிள்ளைகளுக்கு சாப்பாட்டிற்குக் கொடுக்காத காரணத்தால் இங்கிலாந்தில் ஒவ்வொரு ஆண்டிலும் சற்றேறக் குறைய இரண்டு லட்சம் நபர்கள் வரை கோர்ட்டுக்குக் கொண்டுவரப்பட்டு ஆயிரக் கணக்கானோர் தண்டனை அடைகின்றார்கள்.

—(லார்டு இஸ்னல் ஹவ்ஸ் ஆப் லார்டில் செய்த பிரசங்கம்)

இவ்வாறான நிலைமையில் ஆங்கிலேயர்களிடமிருந்து நம்மனோர் எவ்வாறான சீர்திருத்தத்தைக் கற்றுக்கொள்ளப் போகிறார்களென்பதுதான் புலனாகாமலிருக்கின்றது? இவ்வாறு மேனாட்டாரின் நாகரீக முன்னேற்றமிருக்கும் நிலைமையில் அவர்களின் செயல்களைப் பின்பற்றுவதில்தான் முன்னேற்றமடையும் மார்க்கமிருக்கிறதென்று கருதுபவர்களின் மதியைக் கண்டுதான் நாம் வியப்படைய வேண்டியதிருக்கிறது. அல்லாஹுத ஆலா அன்னோருக்கு நேர்மையான அறிவைக் கொடுத்து உண்மையை—சத்தியத்தைப் பின்பற்றி நடக்கும்படி செய்வானாகவும்.

இஸ்லாத்தின் இணையற்ற ஜோதி.

ஹாங்காங் பாதிரியின் விஷமக் கூற்றுக்கு ஆப்பு

(ஹாபிஸ் முஹம்மது பஜ்லுற்றஹ்மான் சாஹிப் அன்ஸாரீ (மீரட்.) அவர்கள் வரைவது)

பரிசுத்த தன்மை பொருந்தியநந்தீனுல் இஸ்லாத்தைக் குறித்து வேண்டுமென்றே உண்மையை மறைத்தும் விஷயத்தை திரித்தும் கிறிஸ்துவப்பாதிரிமார்கள் விஷமப்பிரசாரம் செய்துவருவதை நாம் அடிக்கடி கண்டித்து வருகிறோம். பொய்ப் பேசுவதில் இக்கோஷ்டியினர் கைதேர்ந்த சாமர்த்தியவான்களாகக் காணப்படுகின்றனர். உண்மையைக் கூறுமிடத்து "கடவுளைப் பெருமைப் படுத்தி வைக்க பொய்பேசுவதே *" ஸெயின்டுபா

* ரோமர்கள் 7-வது அத்தியாயத்தில் ஸெயின்டுபாலே இதை ஒப்புக்கொள்கிறார்.

லின் ஆத்மார்த்த வெற்றியெனக் கருதப்பட்டு வந்தது. ஆகவே, அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பதையே கிறிஸ்துவர்கள் பெருமையாகக் கொள்கிறார்கள் போலும்.

இற்றைக்கு இஸ்லாத்தின் ஜோதி மேல் நாடுகளில் ஊடுருவிப் பாய்ந்து வருவதைக் கிறிஸ்துவப் பாதிரிகள் கண்டு பிரமித்துப் போய் விட்டுள்ளனர். பொய்க்கோட்டை கட்டிவந்த காலமெல்லாம் மலையேறிவிட்டதென்பதையும், இனி இஸ்லாத்தைக் குறித்து ஆகாயப் புழுகுகளை ஜோடிக்க முடியாதென்பதையும் கிறிஸ்துவப் பாதிரிகள் கண்டு கொண்டார்கள். பகுத்தறிவு ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் ஏக தெய்வக்கொள்கை இன்றைக்கு மேனாட்டாரிடையே வேரூன்றி வருகையில் கிறிஸ்துவர்களும், கிறிஸ்துவப் பாதிரிமார்களும் திரித்துவக்கொள்கையைக் காப்பாற்ற அல்லும் பகலும் போர் தொடர வேண்டி யிருக்கிறது. கிறிஸ்துவப் பாதிரிமார்கள் கூறும் ஒவ்வொரு கொள்கையையும் விஞ்ஞான சாஸ்திர பரீட்சைக்குட்படுத்தி தர்க்க சாஸ்திர நீதிக்குக் கட்டுப்பட்ட வகையில் ருசுப்படுத்தி வைக்கும்படி கிறிஸ்துவர்கள் இன்றைக்கு தங்கள் குருமார்களையும் பாதிரிமார்களையும் வேண்டுகின்றனர். கிறிஸ்துவர்களின் இக் கோரிக்கையை திருப்தி செய்ய முடியாமல் திண்டாடும் பாதிரிமார்கள், இஸ்லாத்தை தப்புந்தவறுமாக வியாக்கியானம் செய்யவும், தவறான முறையில் இஸ்லாத்தின் கொள்கைகளைப் புரட்டிக் கூறவும், இஸ்லாத்தைக் கேவலப்படுத்திக் காட்டவும் முற்பட்டுள்ளனர். ஆகவே, கிறிஸ்துவப் பாதிரிமார்களில் இத்தகையோர் மலிந்து கிடக்கின்றனர். மார்கோலியத் அல்லது ஜ்வீமர் போன்றவர்கள் இஸ்லாத்தின்மீது துவேஷமாகவும் இஸ்லாத்தைக் கேவலப் படுத்தியும், மாதந் தவறாமல் வியாசங்கள் வெளியிட்டு வருவதைக் காணலாம். இதே போன்ற விஷமத்தன்மை பொருந்திய வியாசமொன்று ஹாங்காங்கு பாதிரி யொருவரால் எழுதப்பட்டு 1932 அக்டோபர் 23-ந் தேதியன்று "ஹாங்காங்கு ஸண்டே ஹெரால்டு" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. "கொடூர அராபிய வீரன், நேர்த்தியான கொள்கைகளை விட்டுச் சென்றான்" என்பதாக அப்பாதிரி தம்முடைய வியாசத்திற்கு தலையங்கம் கொடுத்துள்ளார். அவ்வியாசம் ஆரம்பமுதல் கடைசிவரை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் வாழ்க்கை சம்பந்தமான அண்டப்புழுகுகள் நிறைந்ததாகவே இருக்கிறது. இஸ்லாத்தின்மீது கெட்டெண்ணமும் துர்நோக்கமுங் கொண்டே இவ்வியாசத்தைப் பாதிரி எழுதி யிருக்கிறாரென்பதிலையமில்லை. "இஸ்லாம் வாளால் பரத்தப்பட்டது" "இஸ்லாம் பலதார மணத்தை ஆதரிக்கும் மார்க்கம்" என்பதாக பாதிரியார் பழைய பல்லவியே பாடுகின்றார். இவைகளுக்கெல்லாம் முஸ்லிம் அறிஞர்கள் அப்போதைக்கப்போது தக்க வாயாப்புக் கொடுத்து, இத்தகைய கதைகளுக்கு இஸ்லாத்தில் எவ்வித ஆதாரமுங் கிடையாதென மறுத்துக் கூறியிருந்தும் அப்பாதிரி இதுபொழுதும் அதனைக்குறித்து குறைகூற முன்வந்திருப்பது விந்தைக்குறியதே. ஆனால் இப்பாதிரியின் கூற்றுகளுக்கு மறுப்புகள் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருப்பினும் இப்பொழுதும் அவரது புழுகுகளை ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு அப் புழுகுகளின் உண்மைத் தோற்றத்தை விளக்கிவைக்கிறேன்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் சரித்திரப் பூர்வமான ருசு நிறையப்பெற்றவர்கள்

"இதரப் பெரிய மார்க்கப் போதகர்களைப் போன்று இவரது பால்யத்தைக் குறித்து நமக்கொன்றும் தெரியவில்லை" என்பதாக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைக் குறித்து இப்பாதிரி தமது வியாசத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இந்தப் புழுகை இவ்வளவு தைரியமாக இவர் கூற முன்வந்துள்ளதுதான் ஆச்சரியமாக இருக்கின்றது. ஹஜரத் ஈஸா (அலை.) அவர்களுடைய பால்யம், இல்லை அவர்கள் வயதடைந்திருந்த காலம் இவைகளைக் குறித்து பைபிளில் ஒன்றும் கூறப்பட்டில்லாததையும், ஏதோ அவர்களுக்குத் தெரிகிற சில விஷயங்களும் நேர்முகமாகத் தெரியாமல் பிறர் மூலம் தெரிவதையும் இவர் நமூனாவாக வைத்துக்கொண்டார் போலும். எனவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களையும் இப்பாதிரி அதே தோரணையில் நமக்கு விளக்கிவைக்க முயற்சிக்கிறாரென்பது தெற்றெனப் புலனாகின்றது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடைய பிறப்புமுதல்

வபாத்து வரை அவர்களது வாழ்நாள் சம்பந்தமான ஒவ்வொரு சிறிய பெரிய சம்பவங்கள் யாவும் ஜாக்கிரதையாக காப்பாற்றி வைக்கப்பட்டு பரம்பரை பரம்பரையாக சரித்திராசிரியர்களால் நமக்கு தெரிவித்து வைக்கப்பட்டுள்ளது. "இதர நபிமார்களுடைய சரிதைகள் சம்பந்தமாக எவ்வித விவரமும் தெரியாமல் மறைந்து கிடப்பதே போன்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடைய சரிதையும் மறைந்து கிடக்காமல் ஒவ்வொரு சிறிய விவரமும் அவர்களது காலத்தில் வசித்தவர்களாலேயே விவரமாகவும் தெளிவாகவும் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றது" என்பதாக முஹம்மத் மார்மடியூக் பிக்தால் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடைய வாழ்க்கை சம்பந்தமாக நமக்குக் கிடைத்துள்ள அளவற்ற விவரங்களே, நாயகம் (ஸல்.) அவர்களை இதர நபிமார்களைவிட சிறந்து விளங்கச் செய்கின்றது.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும், கதீஜா நாயகியின் செல்வமும்

"கதீஜா நாயகி அவர்களின் செல்வத்தின் பலத்தைக்கொண்டு நாயகம் (ஸல்.) அவர்கள் ஒரு பிரதம வியாபாரியின் பதவியைப் பெற்றார்கள்" என்பதாக பாதிரி குறிப்பிடுகின்றார்.

கிறிஸ்துவப் பாதிரியார் ஒரு நூதன விஷயத்தைக் கண்டு விட்டுள்ளாரென்றே கூற வேண்டி யிருக்கிறது. ஏனெனில், நாயகம் (ஸல்.) அவர்களுக்கு கதீஜா நாயகி (ரலி.) அவர்களுடன் திருமணம் முடிந்ததும், நாயகம் (ஸல்.) அவர்களது வர்த்தக வாழ்க்கை முடிவடைந்து விட்டது என்பதாகவே சரித்திரம் சாட்சியம் பகருகின்றது. திருமணத்திற்குப்பின் நாயகம் (ஸல்.) அவர்கள் ஆண்டவனை வணங்குவதில் காலம் கழித்தார்களேயன்றி வியாபாரத்திற்காக வெளியில் சென்றார்களில்லை. கதீஜா நாயகி (ரலி.) பெரும் செல்வியென்ப துண்மையே. இவர் தமது செல்வம் முழுதையும் ஏற்றுக்கொள்ளும்படிக் கேட்டபோது, நாயகம் (ஸல்.) அவர்கள் அதனை மறுத்துவிட்டார்கள். "நானே தங்களுக்குரியவளாக இருக்கும் போது என் செல்வமும் தங்களுடையது தானே என்பதாக கதீஜா நாயகி (ரலி.) அவர்கள் வற்புறுத்தியபோது, நாயகம் (ஸல்.) அவர்கள் அச்செல்வத்தை ஏற்றுக் கொண்டார்கள். அச்செல்வத்தை ஆடை, ஆபரணங்கள், ஆனந்த மாளிகைகள், வாகனங்கள் வாங்குவதில் செலவழிக்காது அதன் பெரும்பகுதியை ஏழை எளியவர்கட்குப் பகர்ந்து கொடுத்துவிட்டார்கள். அதன் பின் கல்யாணத்திற்குமுன் தாங்கள் எவ்வாறு ஏழையாக இருந்தார்களோ அதே அந்தஸ்தில்தான் பிறகும் வாழ்ந்து வந்தார்கள்.

என்னே! அவர்களின் சிறந்த லட்சியம்? உலகின் திரண்ட செல்வத்தைக்கண்ட பின்னரும், ஆண்டவன் வழிப்பாட்டை விடவுமில்லை, தங்களுடைய உயரிய லட்சியங்களை அசட்டை செய்யவுமில்லை.

கதீஜாநாயகி அவர்கள் இஸ்லாத்தை தழுவுதல்

ஹாங்காங்கு பாதிரி கூறுகிறார். "அவர் (நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்) ஏமாற்றுங் குணம் படைத்தவராகயிருந்தமையால் முதல் முதலாக தம் கொள்கைக்கு தமது இல்லாளைத் திருப்பி வைத்து விட்டார்."

இப்பாதிரி என்ன கூறுகிறாரென்பதே விளங்கவில்லை. இவர்மாட்டு இதைவிடவேறு என்னதான் எதிர்பார்க்க முடியும்? நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது குணத்தையும் கொள்கையையும் 15-வருஷகாலமாக நன்குணர்ந்திருந்ததின் பயனாகவே கதீஜாநாயகி (ரலி.) அவர்கள் முதல் முதலாக இஸ்லாத்தைத் தழுவினார்களேயன்றி வேறில்லை. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது போதனைகளும் லட்சியங்களும் ஒருவரை ஏமாற்றி விடக்கூடியதாகயிருந்திருப்பின், இவர்களை பால்யம் முதல் நன்கறிந்தவர்கள் இஸ்லாத்தைத் தழுவியவர்களுள் முதன்மையான கோஷ்டியில் இருந்திருக்க மாட்டார்கள். ஆகவே, இஸ்லாத்தை முதல்முதலாக தழுவியவர்கள் இவர்களை நன்கறிந்தவர்கள்; பால்யம் முதல் இவர்களது குணாதிசயங்களைத் தெரிந்தவர்கள் என்னும் விஷயம் சரித்திரப் பூர்வமாக ருசுவாகி யுள்ளது.

இஸ்லாத்தைத் தழுவியவர்களின் விஸ்வாசம்

அபிஸினியா சென்று குடியேறிய முஸ்லிம்களைக் குறித்து எழுதுகையில், அபிஸினி

யாவுக்கு ஓடிப்போய் விட்டவர்கள் என்று பொருள் தரக்கூடிய "fled" (பிளெட்) என்ற ஆங்கிலப் பதத்தை உபயோகித்துள்ளார். அபிஸினியா சென்றவர்கள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை விட்டு விட்டு ஓடிப்போய் விட்டார்களென்ற அர்த்தத்தில் இப்பதத்தை இவர் உபயோகித்திருப்பாராயின் இதைவிட பொய்க்கூற்று வேறொன்றும் இருக்க முடியாது. இஸ்லாத்தைத் தழுவியவர்களின் விஸ்வாசம் நிகரற்ற விஸ்வாசமாகும். நபிகள் நாயகம்(ஸல்.)அவர்களைப் பின்பற்றியவர்கள் அவர்கள்பால் காட்டிய அன்பு, விஸ்வாசம், பக்தி முதலியவற்றைப்போல் வேறெந்த மார்க்கத் தலைவர்களுக்கும் அவரைப் பின்பற்றியவர்கள் காட்டியுள்ளார்களென்று ருசுப்பிக்க முடியாது. "எல்லா நபிமார்களிலும், மார்க்கத் தலைவர்கள் எல்லோரிலும் நபிகள்நாயகம்(ஸல்.) அவர்கள் ஒருவர்தான் முழுவெற்றிப் பெற்றவர்கள்" என்பதாக "என்ஸைகிளோபீடியா" என்ற ஆங்கில நூல் அத்தாட்சி பகருகின்றது. முஸ்லிம்கள் கொடூரமாகவும் குரூரமாகவும் நடத்தப்பட்ட சந்தர்ப்பங்களில்கூட நாயகம் (ஸல்.) அவர்களைவிட்டு விலகாமல் அவர்களுடனே விஸ்வாசமாக நின்றார்கள். தவிர, முஸ்லிம்கள் இதர நாடுகளுக்குக் குடியேறியது நாயகம் (ஸல்.) அவர்களுடைய கட்டளையின் மீதேயொழிய தாங்கள் சுயமாக வெளி நாடுகளுக்குப் புறப்படவில்லை. இந்நிலைமையில் "ஓடிவிட்டார்கள்" என்னும் பதத்தை உபயோகித்திருப்பது தவறாகுமென்பதையும் உண்மைக்கு மாறானதென்பதையும் இனியேனும் பாதிரியார் அறிந்துகொள்வாரா?

பலதாரமணமும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் பல மனைவிமார்களும்

ஹாங்காங்கு பாதிரியார் கூறுகிறார்:—
"கதீஜாநாயகியின் ஆயுள்காலத்தில் முஹம்மத்(ஸல்.) வேறு மனைவியை விவாகம்செய்துகொண்டது கிடையாது. ஆனால் கதீஜாநாயகியவர்கள் இறந்த மூன்று மாதங்களுக்குள் முஹம்மத்(ஸல்.) இரு மனைவிமார்களை விவாகஞ் செய்துகொண்டார். அதன் பின்னர் மனைவிமார்களின் தொகை அதிகரித்துக் கொண்டே சென்றது. கடைசியாக பத்து மனைவிமார்களையும் இரு வைப்புகளையும் இவர் கொண்டிருந்தார். முஹம்மத் (ஸல்.) பலதார மணத்தைத் தடுக்கவில்லை. பலதார மணத்திற்கு ஆதரவளித்தார். ஆனால் ஒரு மனிதன் நான்கு மனைவிமார்களுக் கதிகம் விவாகம் செய்துகொள்ளக் கூடாதெனக் கூறிவிட்டு தாம் மட்டும் இக்கட்டுப்பாட்டிற்கு அடங்கியிருந்தது கிடையாது."

இஸ்லாத்தைத் திரித்துக் கூறுவதையும், இஸ்லாத்தின் மீது வீண் புரட்டுகளையும் துவேஷத்தையும் சுமத்துவதையும்விட சிறந்த அலுவல் வேறெதுவுங் கிடையாதென்பதாக ஆதிகாலத்தில் கிறிஸ்தவர்கள் கருதி இருந்தார்கள். கிறிஸ்தவர்கள் திரித்து துவேஷமாகக் கூறிய எல்லா விஷயங்களிலும் "பலதாரமணக்" கொள்கையும், "இஸ்லாம் வாளால் பரத்தப்பட்ட" தென்பதுமே பலமாக வற்புறுத்திக் கூறப்பட்டு வந்துள்ளது. இவ்விரு பிரசினைகளின் உண்மையை விளக்கி முஸ்லிம்கள் பல நூல்கள் எழுதியிருக்கின்றனர். ஆகவே, கிறிஸ்தவர்களின் கூற்று தவறானதென்பதை முஸ்லிம் நூலாசிரியர்கள் நிரூபித்துள்ளனர். ஆனால் கிறிஸ்துவப் பாதிரிமார்கள் இவைகளையெல்லாம் தெரிந்தும் தெரியாதவர்களே போன்று பழைய கதைகளையே திரும்பத் திரும்பக் கூறி வருகின்றனர். இதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கு கிறிஸ்தவர்களால் சாத்தியப்படவில்லை போலும். கிறிஸ்தவர்கள் மதமாறிவிடாது காப்பாற்ற வேண்டியது பாதிரிமார்களின் பொறுப்பிலிருந்து வருகின்றது. இக்காரணம்பற்றி கிறிஸ்துவப் பாதிரிமார்கள் தங்களுடைய அலுவலைச் செய்ய கேவல முறையைக் கைக்கொள்ளவும் பின்வாங்குவது கிடையாது.

பலதார மணக்கொள்கையை முதல் முதலாக இஸ்லாம் மார்க்கம் போதித்ததாகக் கூறுவது தவறாகும். இஸ்லாம் தோன்றுவதற்கு முன்னமேயே பலதார மணம் ஒரு வகையில் எல்லா நாடுகளிலும் கையாளப்பட்டு வந்துள்ளது. ஹிந்துக்கள், பாரசீகர்கள், பேபிலோன்வாசிகள், பாலஸ்தீன்வாசிகள், இஸ்ரவேலர்கள் முதலிய எல்லோராலும் பலதாரமணம் கையாளப்பட்டு வந்துள்ளது.

ஹஸ்ரத்மூஸா (அலை.) அவர்களும், ஹஸ்ரத் தாவூத் (அலை.) அவர்களும் ஒரு மனைவிக்குமேல் விவாகம் செய்துகொண்டிருக்

தார்கள். ஹஸ்ரத் ஈஸா(அலை.) அவர்கள் காலத்தில் கிறிஸ்தவர்கள் பல மனைவிமார்களை விவாகம் செய்தும் அதனை அவர்கள் ஆக்ஷேபித்தது கிடையாது. ஜன சமூக வாழ்க்கை சம்பந்தமாக பல சீர்திருத்தங்களை ஹஸ்ரத் ஈஸா(அலை.) அவர்கள் போதித்தார்களாயினும் பலதார மணத்தைக் கண்டித்து ஒரு வார்த்தையும் சொல்லியது கிடையாது. இந்நிலைமையில் முஸ்லிம்கள் பலதார மணக்கொள்கையை முதல் முதலில் ஆரம்பித்தார்களென்றுக் கூறுவதுபோன்ற பொய் வேறெதுவும் இருக்க முடியாது.

முஹம்மத்(ஸல்.) அவர்கள் உலகைச் சீர்திருத்த ஆரம்பித்தபொழுது அரேபியாவிலும், அரேபியாவைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் பலதார மணம் மிக்க கேவல முறையில் கையாளப்பட்டு வந்துள்ளதைக் கண்டார்கள். எனவே, ஒரு மனிதன் விவாகம் செய்து கொள்ளக்கூடிய மனைவிமார்களுடைய தொகைக்கு எல்லை இருந்தது கிடையாது; ஸ்திரீகளின் கற்பு என்பது ஒன்றுண்டென்பதாக மதிக்கப்பட்டது கிடையாது; சன்மார்க்க ஒழுக்கமென்பது இன்னதென்றுங் கூடத் தெரியாது. இத்தகைய கேவல நிலைமையிலிருந்து மக்களை சீர்திருத்துவது சுலபமான விஷயமல்ல. ஆகவே, மானிடனுடைய வாழ்க்கையில் கைக்கொண்டு நடப்பதற்கு சாத்தியமான முறையிலும் வகையிலும் சீர்திருத்தங்கள் செய்துவைப்பதே நபிகள் நாயகம்(ஸல்.) அவர்களின் நோக்கமாக இருந்தது.

பலதாரமணக் கொள்கை தீமையானதென பலர் கருதுகின்றனர். ஆனால் இஸ்லாம் மார்க்கம் வைத்துள்ள நிபந்தனைகளின் கீழ் பலதாரமணம் அனுஷ்டிக்கப்படுவது மனித வாழ்க்கையின் பல தீமைகளைத் தடுப்பதற்கு சிறந்த மார்க்கமாகக் காணப்படுகின்றது. "ஸெமிடிக் ரிலிஜன்ஸ்" என்பதாக புரொபஸர் டி. எம். கே., டி. ஒ., டி. டி. ஒரு நூல் எழுதியிருக்கிறார். அதில் அவர் குறிப்பிடுவதாவது: கிறிஸ்தவர்கள் வெறுக்கும் பலதாரமணக் கொள்கை எல்லா ஸ்திரீகளுக்கும் குடும்ப வாழ்க்கையில் பாதுகாப்பைக் கொடுக்கின்றது; ஐரோப்பிய நாட்டினர்களிடையே காணப்படும் கேவல ஒழுக்கம் முஸ்லிம் ஸ்திரீகளினிடையே காணப்படுவது கிடையாது என்பதே.

கிறிஸ்தவர்களைக் கேவல ஒழுக்க முறைகளிலிருந்து காப்பாற்ற ஹாங்காங்கு பாதிரியார் என்ன வழி கண்டுபிடித்துள்ளார்?

பலதார மணத்தை இஸ்லாம் மார்க்கம் வற்புறுத்தி வைக்கவில்லை; அவசியச் சந்தர்ப்பங்களில் இஸ்லாம் மார்க்கம் பலதார மணத்தை அனுமதிக்கின்றது; ஒரு மனைவியைவிட அதிகமாக அனுமதிக்கும் ஆயத்து திருக்குர்ஆனில் ஒன்றேயொன்றுதானுளது.

"அவர்களிடம் நேர்மையாக நடந்துகொள்ள முடியாதென நீங்கள் கருதுவீர்களாயின், பின்னர் உங்களுக்குப் பிடித்தமுள்ள ஸ்திரீயை விவாகம் செய்துகொள்ளுங்கள். இரண்டு, மூன்று, நான்குவரை. அவர்களிடையே நேர்மையாக நடந்துகொள்ள முடியாதென நீங்கள் கருதுவீர்களாயின் பிறகு நீங்கள் ஒரு ஸ்திரீயைமட்டும் விவாகம் செய்துகொள்ளுங்கள். நேர்வழியைவிட்டு நீங்கள் பிறழாமலிருப்பதற்கு இதுதான் சரியான முறையாகும்"-(திருக்குர்ஆன் 4-3)

மேலே கூறப்பட்ட ஆயத்து 'உஹத்' யுத்தத்திற்குப்பின் இறங்கிய ஆயத்தாகும். உஹத் சண்டைக்குப்பின் பல ஸ்திரீகள் விதவைகளானார்கள்; பல குழந்தைகள் அனாதைகளானார்கள். மேல் நாட்டில் ஐரோப்பா யுத்தத்திற்குப்பின் நிலைமை எவ்வளவு கேவலப்பட்டிருந்ததோ அதைவிடக் கேவலமான நிலைமை உஹத் சண்டைக்குப்பின் அரேபியாவில் ஏற்பட்டிருந்தது. கணவர்களை இழந்துவிட்ட ஸ்திரீகளும், தகப்பன்மார்களை இழந்துவிட்ட குழந்தைகளும் காக்கப்பட்டு ஒழுக்கம் தவறாமல் பாதுகாக்கப்படுவதற்கு பலதார மணம் தடுக்க முடியாத அவசியத் தேவையாக ஏற்பட்டுவிட்டது.

பலதாரமணம் அனுமதிக்கப்பட்டிருப்பினும் ஏகதார மணமே போற்றப்பட்டுள்ளதென்பது மேலே கூறப்பட்டுள்ள ஆயத்துகளிலிருந்து நன்கு புலனாகும். மனைவிமார்களுக்கிடையே நேர்மையாக நடக்க முடியாதெனின் ஒரு தாரமே கட்டிக்கொள்ளும்படியாகக் கட்டளையிடப்பட்டிருக்கிறோம்.

"மனைவிமார்களுக்கிடையே நீதி செய்ய நீங்கள் ஆசைப்படினும் அது உங்கள் சக்திக்குட்பட்ட காரியமல்ல."

(திருக்குர்ஆன் 4—129)

மேலே கொடுக்கப்பட்டுள்ள ஆயத்துகளைப் படித்த பின்னரேனும் இஸ்லாம் மார்க்கம் பலதாரமணக் கொள்கையை ஸ்தாபிக்கவில்லை யென்பதையும், அவசியச் சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்பட்ட ஒருமுறை யென்பதையும் இனியேனும் இஸ்லாத்தை வீணே தாக்குகிறவர்கள் சிந்தித்துக்கொள்வார்களாக. முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களை மேலாகப் பார்த்தவர்களுக்குங்கூட, முஸ்லிம்களில் வெகு சிலர்தான் ஒரு மனைவியை விட அதிகமாக விவாகஞ் செய்துகொண்டிருக்கிறார்களென்பது நன்கு புலனாகும்.

நாயகம்(ஸல்.) அவர்களின் பல பிராட்டிமார்கள்

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் பல பிராட்டிமார்களையொட்டி கிறிஸ்துவப் பாதிரிமார்கள் பலவிதக் கட்டுக்கதைகளை கட்டி விட்டுள்ளனர். கிறிஸ்துவ நூலாசிரியர், நம் திருத்தூதராம் நபிகள் திலகம்(ஸல்.)அவர்களை எவ்வளவு கேவலப்படுத்திக் கூறமுடியுமோ அவ்வளவுகேவலப்படுத்திக் கூறியிருக்கிறார்கள். நபிகள்பிரான்(ஸல்.) அவர்கள் காம இச்சைக் காரணமாக பலதாரங்களைக் கட்டினார்களெனக் கூறுகிறவர்களுக்கு ஒரு வார்த்தைக் கூற விரும்புகிறேன் : திருநபியவர்கள் (ஸல்.) வாழ்க்கை, பசியும்பட்டினியும் நிறைந்ததாகவே இருந்தது. இந்நிலைமையில் காம இச்சைகளதிகரிப்பதற்கு சந்தர்ப்பமேகிடையாது. நாயகம் (ஸல்.) அவர்களின் முதல் பிராட்டியார் கதீஜா நாயகியார் இவர் ஒரு விதவை. இவருடைய விவாகத்தின்போது இவருக்கு வயது 40. நாயகம் (ஸல்.) அவர்களுக்கு அப்போது வயது 25. கதீஜா நாயகி இறக்கும்போது அவருக்கு வயது 52. இந்நிலைமையில் நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களுடைய சிறந்த பருவத்தை கதீஜா நாயகியுடன் கழித்துள்ளார்கள். காம இச்சை நிறைந்தவர்களெனின் கதீஜா நாயகி இருக்கும்போதே வேறு மனைவியை நாயகம்(ஸல்.) அவர்கள் மணந்திருக்க மாட்டார்களா? ஆனால் அச்சமயம் நாயகம் (ஸல்.) அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. ஆகவே, காம இச்சை காரணமாக பல மனைவிமார்களை நாயகம் (ஸல்.) அவர்கள் கொண்டார்களெனக் கூறுவது அறியாமையேயாகும். ஆனால் நாயகம் (ஸல்.) அவர்கள் பலதாரங்களை மணந்ததன் உண்மையை ஆராய்வோம் :—

கதீஜா நாயகியவர்கள் காலமான பின்னர் இனியொருவரும் நாயகம்(ஸல்.) அவர்களுக்குப் பெண் கொடுக்கமாட்டார்களென்பதாக இஸ்லாத்தின் விரோதிகள் கூறினார்கள். இக் கதையைப் பொய்ப்படுத்தி வைக்கஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்கள் தங்களுடைய குமாரத்தி ஹஜ்ரத் ஆயிஷா (ரலி.) அவர்களை நாயகமவர்களுக்கு விவாகம் செய்துகொடுத்தார்கள்.

ஆயிஷா நாயகியவர்களை மணந்ததற்குப் பின்புதான் நாயகம் (ஸல்.) அவர்கள் பல தாரங்களை மணந்தார்கள். அவர்களெல்லோரும் விதவைகள். யுத்தங்களின் காரணமாக விதவைகளாகி திக்கற்றுப் போனவர்களையும், சண்டையில் பிடிக்கப்பட்டவர்களையுமேதான் நாயகம் (ஸல்.) அவர்கள் மணந்து கொண்டார்கள்.

ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்களின் மருமகர் பத்ரு சண்டையில் இறந்துபோகவே, அவர்களது குமாரத்தியான ஹஜ்ரத் ஹப்ஸா விதவையானார். ஹஜ்ரத் ஹப்ஸா கோபக் குணமுடையவராதலால் இவரை மணக்க ஒருவரும் இணங்கவில்லை. "முரட்டு சுபாவமுடைய ஸ்திரீயுங்கூட சாந்தகுணமுள்ள கணவனால் சீர்படுவாள்" என்பதை உலகிற்கு ருசுப்பிப்பதற்காக நாயகம் (ஸல்.) அவர்கள் ஹஜ்ரத் ஹப்ஸாவை கல்யாணம் செய்து கொண்டார்கள். ஹஜ்ரத் ஜைனப் தங்களுடைய மாமி மகள். இம் மாதுவை தங்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான ஜைதுக்கு விவாகம் செய்து கொடுத்தார்கள். தாம் உயர் வகுப்பில் பிறந்தவரென்பதாக ஹஜ்ரத் ஜைனப் கொண்டிருந்த அகங்கார எண்ணத்தின் காரணமாக அவ்விவாகம் சந்தோஷகரமான வாழ்க்கையாக இருக்கவில்லை. ஆனதுபற்றி ஜைத் தம் மனைவியை தலாக் கொடுத்துவிட்டார். ஹஜ்ரத் ஜைனப் பின் வாழ்க்கைக்கு வேறு வழியில்லாமற் போகவே, நாயகம் (ஸல்.) அவர்கள் ஹஜ்ரத் ஜைனபை விவாகஞ் செய்துகொண்டார்கள்.

அராபியர்களின் பல கூட்டங்களிடையே ஒற்றுமை யுண்டாக்கவும், பல வகுப்பினர்களை இஸ்லாத்தில்சேர்க்கவும் நாயகம் (ஸல்.) அவர்கள் யூத ஜாதியைச் சேர்ந்த ஸபிய்யாவையும், உம்முஹபீபாவையும், ஸௌதாவையும் மணந்துகொண்டார்கள். உம்மு ஸல்மா

வின் கணவர் இஸ்லாத்தின் விரோதிகளால் கொல்லப்பட்டுப்போகவே அவரையும் அவர் குழந்தைகளையும் காப்பாற்றுவதற்காக உம்முஸல்மாவை நாயகம் (ஸல்.) அவர்கள் விவாகம் செய்துகொண்டார்கள்.

ஹஜ்ரத் ஜுவைரிய்யா யுத்தத்தில் பிடிக்கப்பட்டு கொண்டு வரப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். அவருடைய இரைஞ்சுதலுக்காக நாயகம் (ஸல்.) அவர்கள் அவரை மணந்துகொண்டார்கள். நாயகம் (ஸல்.) அவர்கள் இவரை விடுதலை செய்ததும் யுத்தத்தில் பிடிபட்ட கைதிகளை யெல்லாம் இதரர்களும் விடுதலை செய்து அவரவர்களுக்கு சுயேச்சையும் கொடுத்து விட்டார்கள். ஆகவே, நாயகம் (ஸல்.) அவர்களுடைய விவாகங்களெல்லாம் அராபியக் கூட்டங்கள் பலவற்றை ஒன்றுபடுத்தி ஐக்கியப்படுத்திவைக்க ஆதரவாக நின்றன. தவிர, நாயகம் (ஸல்.) அவர்கள் மணந்த பிராட்டிமார்களில் ஹஜ்ரத் ஆயிஷாவைத் தவிர இதரர்களெல்லாரும் வயதடைந்த விதவைகளாக இருந்ததே காம இச்சைகாரணமாக விவாகங்கள் செய்து கொள்ளவில்லை என்பதை ருசுப்பிக்கின்றது.

நாயகம் (ஸல்.) அவர்கள் இரு வைப்புகளை வைத்திருந்ததாகப் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார். இதைப்போன்ற அபாண்டப் புழுகு வேறொன்றும் இருக்க முடியாது. நாயகம் (ஸல்.) அவர்கள் எல்லோரையும் முறைப்படி விவாகம் செய்துகொண்டார்களே யன்றி ஒருவரையும் வைப்பாகக் கொண்டிருந்தது கிடையாது.

நாயகம் (ஸல்.) அவர்கள் இதரர்களுக்கு மட்டும் நான்கு மனைவிகள் நிர்ணயித்துவிட்டு தாங்கள் மட்டும் அதைவிட அதிகமாகச் செய்துகொண்டதாகப் பாதிரி பழி சுமத்துகிறார். அல்லாஹ்வின் கட்டளையாகிய மேலே கூறியுள்ள ஆயத்து இறங்கியபோது, நாயகம் (ஸல்.) அவர்கள் ஒன்பது மனைவிமார்களை உடையவர்களா யிருந்தார்கள். உடனே தங்கள் மனைவிமார்களைத் தலாக்குக் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் அவரவர்கள் இஷ்டம்போல் நடந்துகொள்ளலா மென்றும் நாயகம் (ஸல்.) அவர்கள் அறிவித்து விட்டார்கள். ஒருவரேனும் தலாக்பெற இணங்கவில்லை. மேலும் அப்படியே தலாக் கொடுக்கப்பட்டிருந்தாலும் அம்மாதுக்கள் முஸ்லிம்களின் தாய்மார்களாதலின் அவர்களை யாரும் விவாகஞ் செய்துகொள்ள முடியாது போய் விடும்; அதனால் அவர்கள் நிர்க்கதிக்கு ஆளாயிருப்பார்கள்; அவர்களின் கதி அதோகதி ஆய்விடுமன்றோ? அதனால் அக்கட்டளை வருவதற்கு முன்னுள்ள தாரங்கள் யாவற்றையும் அப்படியே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள்.

பாதிரியார் இவ்விதமான அண்டப்புழுகுகளையும் அபவாதங்களையும் எழுதி காலத்தைப் போக்குவதற்குப் பதிலாக கிறிஸ்துவர்களைச் சீர்திருத்தி ஒழுங்கு படுத்துவதில் காலத்தைச் செலவழித்தால் நலமாக இருக்கும். மேல் நாடுகளில் பலதார மணம் என்று சொல்லாமல் பலதாரம் வெகு கேவலமானவும் இழிவானவுமாகிய முறையில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. தன் கண்ணில் இருக்கும் தூண் புலப்படாது பிறர் கண்ணிலுள்ள துரும்பைப் போக்க பாதிரியார் ஓலமிட்டழுகிறார். என்னே இவரின் விபரீதப் போக்கு!

இஸ்லாத்தைப் பரத்த நாயகம் (ஸல்.) அவர்கள் வாளை உபயோகித்தார்களா?

ஹாங்காங்கு பாதிரி தமது பொய்க்கூற்றுக் களிடையே பின்வருமாறு எழுதியுள்ளார்:— "நபிகள் நாயகம் (ஸல்.) மக்கமா நகரைவிட்டுச் சென்ற பின்னர் இஸ்லாத்தின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்களைக் கொடுமையாகவும் கடூரமாகவும் நடத்தினரென்பதை நாம் தெரிந்துகொள்கிறோம். இவரது கூட்டத்தினர் அதிகப்பட்டதும் இவர் இதரர்களைத் தாக்குவதிலும், பொருள்களைக் கொள்ளையிடுவதிலும் ஈடுபட்டார். சொத்தில் ஐந்திலொரு பாகத்தைத் தமக்கெடுத்துக் கொண்டு பாக்கியுள்ளதை இதரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார்; இதரர்களை வாளைக் கொண்டுதான் இஸ்லாத்தில் சேர்த்தார்; இவர் ஈவு, இரக்கம் காட்டியது கிடையாது; மக்கத்திலுள்ளவர்களைத் தாக்கியும், யூத நகரங்களைத் தாக்கியும், கிறிஸ்துவர்களைத் தாக்கியும், இவரது முயற்சிகளில் வெற்றியடைந்தார்."

இஸ்லாத்தைப் பரத்துவதற்காக வாளாயுதம் உபயோகப்படுத்தப்பட்டதாக கிறிஸ்துவப் பாதிரிமார்கள் இடைவிடாது பல்லாண்டுகளாகக் கூறிப் பொய்ப்பிரசாரஞ் செய்து வருகின்றனர். அரசியல் காரணங்

களுக்காகச் சிலரும், மார்க்க சம்பந்தமான காரியங்களுக்காச் சிலரும் இவ்விதம் பொய்ப் பிரசாரம் செய்துவருகின்றனர். ஆகவே, ஹாங்காங்கு பாதிரியின் இவ்விஷமப் பிரசாரம் இத்தகைய பொய்க்கூற்றைச் சேர்ந்த தென்பதிலையமில்லை.

இஸ்லாம் மார்க்கம் முதல் முதலில் மக்கமா நகரில்தான் பிரசாரம் செய்யப்பட்டது. அங்கு நாயகம் (ஸல்.) அவர்களுக்கும் அவர்களது சஹாக்களுக்கும் நேர்ந்த துன்பங்களும், செய்யப்பட்ட கொடுமை கொடூரங்களும் சொல்லத் தரமன்று; எழுதியும் மாளாது. அச்சமயம் அவர்கள் காட்டிய சகிப்புத் தன்மையைப்போல் உலகில் வேறெவரும் வேறெச்சமயத்திலும் காட்டியது கிடையாதென்பதை உலக சரித்திரம் எண்பித்துக்கொண் டிருக்கிறது.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் மதீனமா நகருக்கு ஹிஜ்ரத் செய்த பின்னருங் கூட காபிர்கள் அவர்களைச் சுகமாக இருக்கவிடவில்லை; குரைஷிகள் வந்து தாக்கினார்கள்; ஒரு வருஷத்திற்குள் மூன்று யுத்தங்கள் நடந்தன; முதல் சண்டை மதீனாவிலிருந்து சுமார் 30 மைல் தூரத்திலும் மக்கமா நகரிலிருந்து 220 மைல் தூரத்திலுமுள்ள 'பத்ர்' என்னுமிடத்தில் நடை பெற்றது. அந்த யுத்தத்தில் குரைஷிகளின் சேனை 1000 பேர் கொண்டதாக இருந்தது; முஸ்லிம்களின் சேனையிலோ வெனின் 313 பேர் தானிருந்தார்கள். அப்படியிருந்தும் முஸ்லிம்களே வெற்றியடைந்தார்கள்; எதிரிகள் தோல்விடைந்து தங்கள் சோதிரர்களை கைதிகளாக விட்டு விட்டு ஒட்டம்பிடித்துவிட்டனர். முஸ்லிம்கள் அக்கைதிகளை அன்புடனும் பட்சத்துடனும் நடத்திய மாதிரி உலகில் வேறெவர்களும் தங்களிடம் அகப்பட்டுக்கொண்ட விரோதிகளை அவ்வளவு பட்சமாகவும் அன்பாகவும் நடத்தியது கிடையாது.

முஸ்அபிப்னு உமைர் (ரலி.) அவர்கள் தங்களிடம் அகப்பட்ட கைதியாகிய அப்துல் அஜீஸ் என்பவருக்கு ரொட்டி கொடுத்து, தாங்கள் பேரீச்சம்பழம் சாப்பிட்டார்கள். ரொட்டியில் ஒரு பகுதியை உட்கொள்ளும்படியாக கைதி வற்புறுத்தியும் கேளாது கைதிக்கு ரொட்டி கொடுத்துவிட்டு தாங்கள் பேரீச்சம்பழம் சாப்பிட்டு வந்தார்கள். எனவே, இன்னோர் கைதிகளை தயாளமாக நடத்தியதேபோல் வேறு யாராகிலும் நடத்தியதாக திருஷ்டாந்தம் காட்ட முடியுமா?

'பத்ரு' சண்டையில் தோல்வியடைந்த குரைஷியர்கள் மிக்க ரோஷத்துடன் 5000 பேர்களைத் திரட்டிக்கொண்டு வந்து மதீனமா நகரைத் தாக்கினார்கள். அதுபொழுது முஸ்லிம்கள் 700 பேர்கள் மட்டுமே இருந்தனர். மதீனமா நகரிலிருந்து 2 மைலும், மக்கமாநகரிலிருந்து 240 மைலும் தூரத்திலுள்ள 'உஹத்' என்னுமிடத்தில் யுத்தம் நடந்தது. அதுசமயமும் முஸ்லிம்கள் வீர பராக்கிரமத்துடன் போர் புரிந்ததால் குரைஷிகள் தோல்வியுற்று புறம்காட்டி யோடினர்.

குரைஷியர்கள் முன்னிலும் அதிக கோபமடைந்து தங்களுக்குச் சாதகமாக பல கூட்டத்தினர்களையும் அழைத்துக் கொண்டு 24,000 பேர்கள் ஹிஜ்ரீ 5-ஆம் ஆண்டில் மதீனமாநகரையே தாக்கி முற்றுகையிட்டனர். அவ்வாறு சில வாரங்கள் முற்றுகையிட்டிருந்துவிட்டு சீதோஷ்ணகாரணமாக அவர்கள் தாங்களாகவே பின்னடைந்தனர்.

யுத்தங்கள் நடந்த ஸ்தலத்தை கவனிக்கும்போது மதீனமாநகரின் வாசற்படியண்டை அச்சண்டைகள் நடைபெற்றன வென்றும், குரைஷியர்கள் பல நூற்றுக் கணக்கான மைல்களைக் கடந்து வலிய சண்டைக்கு வந்தார்களென்றும் நன்கு தெரிய வருகின்றது. எனவே, அந்த யுத்தங்கள் தற்காப்புடையதாக இருந்ததேயொழிய வலிய வீண் வம்புச்சண்டையாக யிருக்கவில்லை என்பது இப்பாதிரியாருக்குத் தெரியாது போனதேனோ? தவிர, நாயகம் (ஸல்.) அவர்கள ஒரு சொட்டு இரத்தமும் சிந்தாமல் மக்கமா நகரை தங்கள் கைவசப் படுத்திய போது மக்கா வாசிகளின் கொடூரங்களையெல்லாம் சிறிதும் மனதிற் கொள்ளாமல் எல்லோரையும் மன்னித்து விட்டதைக்கண்ட மக்காவாசிகள் பெரிதும் ஆச்சரியமடைந்தார்கள் என்பதாக டாக்டர் கே. என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஒரு சமயத்திலும் கொடூரத்தைக் கைக்கொண்டது கிடையாதென்பதையும், எதிரிகளிடத்தும்

நாயகம் (ஸல்.) அவர்கள் சகிப்புத் தன்மை, தாராளக்கொள்கை காட்டியதையும் பாராட்டி மிஸ்டர் "லேன்பூல்" தமது நூலில் எழுதியுள்ளார்.

இஸ்லாத்தில் இதரர்களைச் சேர்ப்பதில் கொடூர முறைகள் கையாளப்பட்டதாக பாதிரி கூறுகிறார். ஆனால் அவரைப்போன்ற கிறிஸ்துவப் பாதிரியான ரெவரண்டு டிலாஸே ஒலியாரே டி. டி. "இஸ்லாம் ஐட் தி கிராஸ் ரோட்ஸ்" என்னும் நூலில் வாள் முனையைக் காட்டி பயமுறுத்தி இஸ்லாத்தில் சேர்த்ததாகக் கூறப்படுவதுபோன்ற கேவலப் பொய்க்கூற்றெதுவும் இருக்க முடியாது என்பதாக எழுதியுள்ளார். இதைப்பார்த்த பின்னரேனும் ஹாங்காங்கு பாதிரியாருக்குப் புத்தி வருமா?

நாயகம் (ஸல்.) அவர்கள் புரிந்த யுத்தங்களெல்லாம் தற்காப்பு யுத்தங்களே யொழிய வேறில்லை என்பது தெற்றெனப் புலனாகின்ற தன்றோ?

பனூஜஜுவைமா கூட்டத்தினருக்கு இஸ்லாத்தைப் போதிக்க ஹஸ்ரத் காலித் (ரலி.) யை நாயகம் (ஸல்.) அவர்கள் அனுப்பி வைத்தார்கள். அவர்கள் அங்கு வாளாயுதம் உபயோகித்த செய்தியை எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கேள்விப்பட்டதும் திடுக்கிட்டுப்போய் உடனே இருகரங்களையும் வானின் பக்கல் உயர்த்தி "ஏ ஆண்டவனே! காலித்தின் இச்செய்கைக்கு யான் எவ்விதத்திலும் பொறுப்பாளியல்ல" வென்று கூறினார்கள். உடனே நாயகம் (ஸல்.) அவர்கள் ஹஜ்ரத் அலி (ரலி.)யை அவ்விடத்திற்கு அனுப்பி மனிதர்களுடையவும், மிருகங்களுடையவும் சிந்தப்பட்ட இரத்தத்திற்கு ஈடு செய்யும்படியாக உத்திரவு செய்தார்கள். எனவே, இஸ்லாத்தைப் பரத்துவதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் சண்டை செய்யவில்லையென்பதற்கு இவைகளே போதிய சான்றாக நின்றிலங்குகின்றது. தவிர நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அரேபியா முழுவதற்கும் எஜமானராக இருக்கும் காலத்தில் 'எமன்' தேசத்தைச் சேர்ந்த நஜ்ரானின் கிறிஸ்துவர்கள் ஒரு தூதுவக் கூட்டத்தை அனுப்பி வைத்தார்கள். இவர்களுக்கு அச்சமயம் கொடுக்கப்பட்ட உரிமைப் பத்திரம் (Charter) சகிப்புத்தன்மை, பட்சம், அன்பு, தாராளக் கொள்கை முதலியன நிறைந்ததாக யிருந்தது. இதற்கு நிகராக வேறெந்த கிறிஸ்துவ அரசாங்கங்களாலும் கொடுக்கப்பட்டதாகக் காட்ட முடியாது.

நாயகம் (ஸல்.) அவர்களுடைய காலத்தில் மட்டுமல்ல அவர்களுக்குப் பின்னருங்கூட இஸ்லாத்தைப் பரத்துவதற்கு வாளாயுதம் உபயோகிக்கப்பட்டது கிடையாதென்பதை ருசுப்பித்துக் காட்ட முடியும்.

கிறிஸ்துவ மார்க்கத்தைப் பரத்துவதற்கு பிலிபைன் தீவுகளிலும் இதர இடங்களிலும் கிறிஸ்துவர்கள் கையாண்டு வந்த கொடூர முறைகளை, துப்பாக்கி பயமுறுத்தல் முறைகளை முஸ்லிம்கள் எச்சமயத்திலும் எந்நாட்டிலும் கையாண்டது கிடையாது.

இஸ்லாத்தின் உண்மை வாள், அதன் உயரிய லட்சியங்களும், சிறந்த கொள்கைகளுமாகும். ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா கண்டங்களில் இஸ்லாம் இவ்வாளாயுதத்தைக்கொண்டே பரவிற்று. இவ்வாளாயுதந்தான் இன்றைக்கும் மேனாட்டினரை இஸ்லாத்தின் பக்கல் ஈர்த்துக்கொண்டு வருகிறது. எனவே, மேனாட்டில் பலர் இஸ்லாத்தைத் தழுவி வருவது ஹாங்காங்கு பாதிரி கண்களுக்கு புலப்படுவதில்லையா? இன்றைக்கு எந்த வாளாயுதப் பிரசாரம் மேனாட்டில் நடக்கிறது?

கொள்ளையில் ஐந்திலொருபங்கு

கொள்ளை முதலில் ஐந்திலொரு பாகம் முஹம்மத் (ஸல்.) அவர்களுக்குச் சேர்க்கப்பட்டதென கூறுகிறார். யுத்தங்களில் கிடைப்பதில் ஐந்திலொரு பாகம் பைதுல்மாலுக்கு (பொது கஜானாவுக்கு)ச் சேர்க்கப்பட்டு வந்தது. நாயகம் (ஸல்.) அவர்கள் அதிலிருந்து வெகு சொற்பமே எடுத்துக் கொள்ளுவார்கள். அவர்கள் எளிய வாழ்க்கை நடத்தினார்களேயல்லாமல் செல்வம் திரட்டிக்கொண்டு மாடமாளிகைகளில் வசிக்கவில்லை. ஆகவே, சாதாரண வாழ்க்கைதான் நடத்திவந்தார்கள். தங்கள் வீட்டுக் காரியங்களுக்குப் பணியாள் வைக்காமல் தாங்களே கவனித்து வந்தார்கள். தாங்களே பால் கறப்பார்கள்; தாங்களே ஜோடுகளைச் செப்பனிடுவார்கள்; தாங்களே துணிகளைத் தைத்துக்கொள்வார்கள். இத்தகைய எளிய வாழ்க்கை நடத்தி

பவர்கள்மீது, ஐந்திலொரு பாகம் எடுத்துக் கொண்டதாக பாதிரி பழிசுமத்தத் துணிந்தது, இஸ்லாத்தின்மீதும், இஸ்லாத்தின் ஸ்தாபகரான நபிகள் நாயகம் (ஸல்.) மீதும் இவருக்குள்ள பொறாமையையும், துவேஷத்தையும் நன்கு விளக்குகின்றது என்று கூறுவதைத்தவிர வேறொன்றும் கூறுவதற்கில்லை.

ஹஜ்ரத் இப்ராஹீம் அவர்கள் வபாத்து

"நபிகள் நாயகம் (ஸல்.) தனது ஒரே குமாரரான ஹஜ்ரத் இப்ராஹீம் வபாத்தானதும் தமது வேலையை மேல்நடத்திக்கொண்டு சென்றிருக்கக்கூடிய ஒரே ஆண்மகவும் இறந்துபோனதைக் குறித்து பெரிதும் துக்கித்தார்" என்பதாக பாதிரி எழுதியுள்ளார். இவருடைய இக்கூற்று பொருத்தமற்ற கூற்றேயாகும். ஏனெனின், நாயகம் (ஸல்.) அவர்களுடைய அலுவலை மேற்கொண்டு நடத்திச்செல்ல ஹஜ்ரத் அபூபக்ர் (ரலி.) ஹஜ்ரத் உமர் (ரலி.) ஹஸ்ரத் உதுமான் (ரலி.) ஹஜரத் அலி (ரலி.) முதலானோர்கள் தயாராக விருந்தார்கள். இந்நிலைமையில் நாயகம்(ஸல்.) அவர்கள் பெரிதும் துக்கித்தார்கள் எனக் கூறுவது பொய்க்கூற்றேயாகும்.

நாயகம் (ஸல்.) அவர்களின் சன்மார்க்க ஒழுக்கம்.

நாயகம் (ஸல்.) அவர்களுடைய சன்மார்க்க ஒழுக்கத்தைக் குறித்து பாதிரி இழிவுபடுத்திக் கேவலமாக கூறியுள்ளார். நாயகம் (ஸல்.) அவர்களுடைய சன்மார்க்க ஒழுக்கத்தைக்குறித்து கிறிஸ்துவ நூலாசிரியர் மிஸ்டர் லேன்பூல் என்ன கூறுகிறாரென்பதை பாதிரி கவனிப்பாராக. மிஸ்டர் லேன்பூல் கூறுவதாவது:—நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடைய நட்பு, தைரியம், தாராளம், அன்பு, பட்சம் முதலியவைகளெல்லாம் அவர்களைக் குறித்து சிறப்பாகவும், கௌரவமாகவும், கருதச் செய்கின்றது. எனவே அவர்கள்மீது கூறப்படும் கண்டனங்களெல்லாம் அவர்களது சற்குணங்களின் முன் சூரியனைக்கண்ட பனியைப்போல் மறைகின்றது.

ஒரு வேண்டுகோள்.

பாதிரியின் விஷம வியாசத்தையும், இந்த ஆப்பையும் பார்க்க நேரும் சகோதரர்களுக்கு ஒரு வார்த்தைகூற விரும்புகிறேன்: கிறிஸ்துவப்பாதிரிஎழுதியுள்ள கூற்றுக்களுக்காதாரமாகதிருக்குர் ஆனிலிருந்தும், ஹதீதுகளிலிருந்தும் எவ்வித ஆதாரத்தையும் எடுத்துக் காட்டபடவில்லை. இஸ்லாமிய போதனைகளிலுஞ் சரி, நாயகம்(ஸல்.) அவர்களுடைய வாழ்க்கைகளிலுஞ் சரி காணப்படாத பல விஷயங்களை பாதிரியார் கூறுகிறார். உண்மையைக் கூறுமிடங்களில்கூட பாதிரி உண்மையை திரித்துக் கூறியிருக்கிறார். அதாவது:—"நாயகம் (ஸல்.) பலமான மதுபானக் குடியைக் கண்டித்தார்" எனக் கூறுகிறார். அப்படியாயின் சாமான்ய மதுபானக் குடியை ஆதரித்தார் என்று ஏற்படுகிறதல்லவா? எவ்வளவு திறமையாக இப்பொய்யை அமைத்துள்ளார் பாருங்கள்! எவ்வித மதுபானக்குடியுங் கூடாதெனக் கண்டித்து உலகின் மக்களில் நான்கிலொரு பகுதியினரை குடிப்பழக்கத்திலிருந்து விடுத்து மானிடவர்க்கத்தினரைக் காப்பாற்றினார்களென்பதை உலகம் நன்கறிந்திருக்கிறது. ஹாங்காங்கு பாதிரியின் விஷமக் கூற்றுக்கள் போன்றவைகளுக்கு மூர், இர்விங் போன்ற கிறிஸ்துவர்களே தக்க ஆப்பு அறைந்து வந்துள்ளனர். "உலகம் முழுவதும் இஸ்லாத்தை ஏற்கும்" என்பதாக ஜார்ஜ் பர்னுடுஷா கூறிய ஜோஸ்யம் வெகு சீக்கிரம் பலிக்குமென்னுஞ் சின்னங்கள் நன்கு புலனாகின்றன.

சாலஞ்சு.

ஹாங்காங்கு பாதிரியோ அல்லது வேறெந்தக் கிறிஸ்துவப் பாதிரியோ கிறிஸ்துமத கொள்கைகளின் உண்மை, இயேசு அவர்கள் கடவுளின் குமாரர் என்பது, பாவமன்னிப்புக்கொள்கை, மனிதன் பிறப்பாலேயே பாவியென்பது பைபிளின் உண்மை, இவைகளை ருசு செய்ய முடியுமா வென்றுக் கேட்கிறேன். ருசு செய்யும்படியாக சாலஞ்சும் செய்கிறேன்.

நமது சிங்கப்பூர் ஏஜெண்டான ஜனுப் மு. முஹம்மது ஷரீப் அவர்களிடம், அவ்விடமுள்ள நமது சந்தாநேயர்களில் 1766, 1569, 2329, 922, 937, 1246, 1244, 995, 1567, 917, 924, 925, 915 நம்பருள்ளவர்கள் தங்கள் சந்தாக்களைச் செலுத்தியிருக்கின்றார்கள். பாக்கியுள்ளவர்களும் அவ்வாறே செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம். மானேஜர்.

சன்மார்க்கம் நாகரீகத்துக்கு முரணானதா?

இப் பிரபஞ்சத்தில் இதுகாலேவரை எந்த சன்மார்க்கமும் நாகரீகத்தைச் சீர்திருத்தியது கிடையாதென்றும், இனியும் அந்நாகரீகத்தை விருத்திச்செய்ய முடியாதென்றும் இதுகாலே ஐரோப்பிய அறிஞர்கள் நிர்ணயங்கொண்டிருந்து வருகின்றனர். உதாரணமாய் 'மோஸயோ ராயமோன் கோல் ராய்ட்' என்பார் கிறிஸ்துவ மதத்துப் பிரபல அறிவாளி யாவர். இன்னவர் கிறிஸ்துவத்துடையவும் இஸ்லாத்துடையவும் நாகரீக முறையினை நோட்டமிட்டாராய்ந்து கூறுவதாவது:—

"இவ்வுலகினில் பொதுவாய் நாகரிகம் எனப்படுவது பலதிறப்பட வகுக்கப்பட முடியாததா யிருக்கிறது. ஏனெனின், அது ஒரே தன்மை யுடையதாகும். ஆகையால், அதனையொட்டி இஃது கிறிஸ்துவ நாகரிகம் என்று குறிப்பிட்டு சொந்தப்படுத்திக் கூறுவதும், இவ்வாறே அது இஸ்லாத்தின் நாகரிகம் என்று கட்டுப்படுத்திக் கூறுவதும் தவருனதாகும். எனவே, நாகரிகம் என்பதின் உட்கருத்து, "இணக்கமான வித்தைகளையறிவதும், பகுத்தறிவுக்குவந்த ஞானங்களை அடைவது"மேயாகும். இன்னமும் இப் பூப்பரப்பின்மீது சர்வ நாகரிகத்துக்கே உறைவிடமானதென்று நிர்ணயமான தனி மதம் எதுவுங் கிடையாது. ஏனென்ருல் (கிறிஸ்துவக் கோட்பாட்டின்படி) மதம்என்பதே யாதெனில், பகுத்தறிவினுல் உய்த்துணர்ந்து கொள்ளமுடியாத ஓர் அவசிய விஷயமாகும். மேலும் அத்தகைய மதத்தின் வேலே யாதெனில், புத்தியின் எல்லேயை விட்டும் அப்பால் கடந்திருக்கும்படியான ஓர் ஆழ்ந்த மர்மத்தின் பக்கல் நம் ஆன்மாவை ஈர்த்துச்செல்லும் சாதனமாக இருக்கின்றது. ஆகையால் அவ்விதமதமானது ஒருபோழ்தும் பகுத்தறிவுக்கு உடந்தையாக இருக்கமாட்டாதென்பது வெளிப்படையாம். மேலும் உண்மைச்சம்பவத்துக்கும் அனுபவங்கட்கும் எற்றமைந்த விஷயங்களை ஒப்புக்கொள்வதற்குரிய பகுத்தறிவின் போக்குக்கும் அத்தகைய (கிறிஸ்துவ) மதம் இடமளிப்பதில்லே.

இத்தியாதி காரணங்களை முன்னிட்டுத்தான் கிறிஸ்துவ மார்க்கமானது பகுத்தறிவுக்கும் விஞ்ஞானத்துக்கும் கொடும் விரோதியானதாய் பாவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கிறிஸ்துவ மதத்தைப்போல் கடுமையான துறவற வாழ்க்கையையும் சன்னியாசத்தையும் இடையருது வற்புறுத்திப் போதித்துள்ள மதம் இத்தாரணியில் வேறெதுவுங் கிடையாது. இதற்கு ஆதாரமாய், பண்டைக்காலத்திய கல்வி சம்பந்தமான சாதனங்களை அம்மதம் நிர்மூலப்படுத்தியிருப்பதையும், புராதனகாலத்து நாகரீகச் சின்னங்களை அம்மதம் தகர்த்துப் போட்டுவிட்டதையும் கொள்ளலாம்.

ஸெனட் பெத்ரஸ் என்பாரும், ஸெனட் போஸ் என்பாரும் கிறிஸ்துவ மார்க்கத்தின் மிகப் பெரும் பிரசாரகர்களாக இருந்தேகியுள்ளார்கள். அன்னோர்கள், கிறிஸ்துவ மதவெறியின் காரணத்தால் தங்கள் வாணாளையெல்லாம், பட்டினிப் பசியிலும் வறுமைக் கஷ்டங்களிலும் மாந்தர் உழலவேண்டுமென்று போதனை செய்து வந்ததில் வீணுளாக்கிவிட்ட தல்லாமல், லத்தீன் கிரேக் ஆகிய கல்விகளையும் அழியச்செய்து உலகத்துக்குப் பெருங்கேட்டை விளைவிப்பதிலும் அபரிமிதமாக முயற்சி யெடுத்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் புரிந்தது போன்ற மூர்க்க நீசத்தனத்துக்கு உதாரணத்தை உலகத்தின் மிகக் கேவலமான காட்டு மிருகாண்டிகளுடைய வாழ்க்கையில் தேடிப்பார்த்தாலும் கிடைப்பது அரிதாகும். மேலும் இன்னோர் தவ்ராத் வேதத்தையும் இன்ஜீல் வேதத்தையும், இவ்வகிலத்தின் மற்றெல்லா கிரந்த வேதங்களையும் நிராகரித்து அவற்றின்மீது தங்கள் குரோதத்தையே வெளியிட்டுப் போயிருக்கின்றனர். இத்தன்மையான செயலானது அன்னோரது கொலேக்குண மூர்க்க சுபாவத்தை விளக்குகின்றது."

இஸ்லாத்தின் நாகரிகம்.

மேற் கூறப்பட்ட வாசகத்தை நோட்டமிட்டுவிட்டு, இஸ்லாத்தின் மேன்மையை நோக்குங்கால், அறிவை விருத்திச்செய்து

விவேகத்தை வளர்க்கும்படியான நேர்மையில் பரிசுத்த தீனால் இஸ்லாத்தின் அமைப்புதான் மற்றெல்லா மதங்களைக் காட்டினும் மிகச் சிரேஷ்டமானதாயிருக்கிறதென்பது ஸ்திரமாகின்றது. பரிசுத்த இஸ்லாம்மதம் உதயமான இரண்டாவது நூற்றாண்டிலேயே பக்தாத் நகரத்தின்கண் என்றென்றும் இலங்கும்படியானதும், உலகம் போற்றத்தக்கதுமான நன்னாகரிகத்திற்குரிய முன்மாதிரியை ஸ்தாபித்து வைத்துவிட்டது. அதன் பரிசுத்தத்தன்மையை இன்றும் உலகம் வியந்து நோக்கிக்கொண்டிருக்கின்றது. மேலும், இஸ்லாம் மதம்தான் சர்வலோகத்துக்கும் ஏற்றமைந்த தனி பெரும் அரும் பிரகாசக்குன்றாய் விளங்கிவந்தது. எனவே, பிரபஞ்சத்தின் சிறந்த மனிதர்களும் அறிஞர்களும் அச்சத்திய இஸ்லாத்தின் பக்கமே வசீகரிக்கப்பட்டு வந்தார்கள். உதாரணமாய், இஸ்கந்திரிய்யா அரசாங்கத்தினர் தங்கள் தேயத்தில் இருக்கக்கூடாதென்று வெளியேற்றிவிட்ட அப்லாத்தூனின் சீடர் குழாத்தினர் அனைவரும், ஸர்தஷ்திய மதம், கிறிஸ்துவ மதம், யூதமதம் முதலிய தவறான மார்க்கங்களைப் பின்பற்றாமல் திரஸ்கரித்து விட்டு பின்னர் அவர்களெல்லோரும் இஸ்லாம்மதம்தான் நாகரிகமான சன்மார்க்கமெனத் தெளிந்து இஸ்லாத்தையே ஆதரித்துக் கொண்டார்கள். அஞ்ஞான்று வேறு கதியற்ற அன்னோர்க்கு இஸ்லாம் சரணாஸ்தலமாகவும் அமைதியை யளிக்கும் உறைவிடமாயும் தெரிந்தது. ஆகையால் ஐரோப்பா தேசமானது அரஸ்தூ, பலாத்தூன் முதலிய பண்டைப் பெரியோர்களை மறந்து விடுவது முடியாது. மேலும் அவர்கள் பொருட்டாலும் இஸ்லாத்தின் கல்வியாசார நாகரிகமானது ஐரோப்பிய நாட்டின் கண் நிலவி நின்று இலங்கி வருவதை இற்றைக்கும் காண்கின்றோம்.

நிற்க, எவ்வாற்றாலும் நாகரிகமானது மானுஷ்ய அறிவுக்கு இணங்கியுள்ள அநுஷ்டான முன்னேற்றங்கட்குரிய பெயராகும். மேலும் இது கிறிஸ்துவ மதத்தின் உபகாரமாகாதென்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. தவிர நாகரிகத்தின் முக்கிய கருத்து, வாழ்க்கை சம்பந்தமான ஏதேனுமொரு நிர்வாகத்தை மட்டுந்தான் சார்ந்ததாகுமெனப் படுமாயின், அப்படிப்பட்ட நாகரிகத்துக்கும் மதத்துக்கு மிடையே எத்தகைய சம்பந்தமும் பேச்சு மிருத்தல் கூடாது. ஆகையால் நாகரிகமென்பது மதாசாரத்துக்கு சற்றும் முரண்பாடில்லாத வழியாகும். ஆகையால் மதாசாரத்தை மட்டும் ஒட்டிய நாகரிகப் பேச்சை விட்டு பொதுவான நாகரிகத்தையே ஏற்றுக் கொள்ளல் வேண்டும். எனவேதான், நாகரிகம் கிறிஸ்துவ மதத்துடையதுதான் என்று கூறுவது தகாததாயிருக்கின்றது. ஆனால் மேனாட்டு நாகரிகம், கீழ்நாட்டு நாகரிகம் என்றுமட்டும் பிரித்துப் பாகுபடுத்திக் கூறலாம். இப்படி வகுந்த இருவித நாகரிகங்களிலுமுள்ள மலைக்கும் கடுகுக்குமுள்ளதுபோன்ற வித்தியாசத்தை ஆராய்ந்துணர வேண்டும். இந்த மேனாட்டு நாகரிகமும் கீழ்நாட்டு நாகரிகமும் ஒருபோதும் ஒன்றாய் விடமாட்டாது. நிற்க, இங்ஙனம் கூறும் ஐரோப்பிய அறிவாளிகளுடைய இக்கூற்றுகளில் உண்மை எம்மட்டும் நின்றிலங்குகிறதென்பதை உற்றுணர்ந்து பார்த்து அதினின்று நாம் தக்க படிப்பினையைப் பெறுவோமாக!

உண்மையான விதத்தில் மானுஷ்ய கோடிகட்கு அத்தியாவசியமானதும் திவ்வியமான கண்ணியத்தை அளிக்க வல்லதுமான நாகரிகம் சர்வ லோகத்தாருக்கும் ஒரே விதமானதாகவே அமைந்து கிடக்கின்றது. தேசவாரியாகவோ சமூகவாரியாகவோ இந்நாகரிகம் பிரிவினைப் படுத்தப்படமாட்டாது. அவ்வித உத்தமமான ஏகநாகரிகத்தை உள்ளுணர்ந்து பார்க்குமிடத்து, அது நிலவியுள்ள சன்மார்க்கங் கூட சர்வ லோகத்தாருக்குமென ஒரே வித மதமாயிருப்பது புலனாகும். ஆகையால் அவ்வித நாகரிக மதத்தை இரண்டாகப் பிரிவினைப் படுத்துவதாகக் கூறுவது தகாச் செயலேயாகும்.

பொதுவாய் சன்மார்க்கமென்பது, மானிட இனத்தினர்கள் ஒழுகிக் கொள்ளவேண்டிய நடைமுறைக்கும், அம்மானிடன் இதர உயிரினங்களுடன் நடந்துகொள்ளவேண்டிய ஒழுக்க முறைக்குமுரிய பெயராகும். இன்னும் குறிப்பாக சன்மார்க்கமென்பது மானுஷ்ய இனத்தினர் தன்னைவிட மகா மகா மேன்மையான ஒரு பரம்பொருளுடன் வணக்கமுறையெனும் தூய சம்பந்தங் கொள்ளும் முறைமைக்கும் பெயராகும். அப்பரம்பொ

றானை மானுஷ்யன் புறத்தைக் கொண்டு அறிந்துகொள்ள முடியாது. ஆனால் அகத்தின் மூலமாகவே அறிந்துகொள்ளுதல் சாலும். எந்த ஒரு மதம் மேற்கூறிய அம்சங்கள் அமையப்பெற்றதாயிருக்குமோ அது ஒருபோதும் உலக நாகரிகத்துக்கு சிறிதும் முரண்பட்டதா யிருக்கமாட்டாது. மேலும் அந்த மதமே மேற்படி நாகரிகத்தை விருத்திச்செய்யக் கூடியதாகவும் ஸ்திரப்படுத்தி நிலைநிறுத்த வல்லதாயுமிருக்கும். அவ்விதமாகிய நாகரிகத்தை போதித்து, மனித சமூகத்தை பரம்பொருளின் வணக்க சம்பந்தத்தில் பரிபக்குவப் படுத்திவைக்கும் வழியே நேர்மையான மதமாகும். இக்கருத்தை யொட்டி குர்ஆன் ஷரீப் கூறுவதாவது:—

நிச்சயமாய் அல்லாஹ்வினிடத்தில் உண்மையான சன்மார்க்கமாயிருப்பது இஸ்லாம் தான். இஸ்லாத்தின் நபியவர்கள், ஜனங்கட்கு வேதத்தையும் விவேகத்தையும் கற்பித்துக் கொடுக்கின்றார்.

அறிவுள்ளவர்களும், அறியாதவர்களும் சமமாய் விடுவார்களோ? (இல்லை) நிச்சயமாக அறிவுடையவர்கள்தான் இறைவனை அதிகம் தியானிக்கின்றார்கள்.

எவர்கள் ஆராய்ந்துப் பிரயாசைப்படுவரோ அவர்கள் கோரியதைப் பெற்றுக்கொள்வர்.

ஆகையால் கல்வி ஞானத்தை விருத்திச் செய்யக் கூடியதும் பகுத்தறிவின் பாங்கை ஆதரித்து நிற்பதும், கலாபயிற்சியின் பக்கல் மக்களை ஊக்கப்படுத்திவைப்பதும், வித்தைகளின் முன்னேற்றத்தை தன்னகத்தே கொண்டதுமான சன்மார்க்கமானது எங்கேனும் நாகரிகத்துக்கு எதிரிடை.யானதாகுமா? ஒருபோதுமில்லை. அப்படிப்பட்ட மேன்மையும் மகாத்மியமு மிக்க பரிசுத்த இஸ்லாம் மதமானது, மதாசாரக் கோட்பாடுகளை கண்மூடித்தனமாக உற்றுணர்ந்து பாராமல் ஒப்புக்கொள்ளுங்கள் என்று ஒரு சிறிதும் கூறவில்லை. அதற்குப் பதிலாய் அவ்விஸ்லாம் மதமானது தன்கொள்கை கோட்பாடுகளை எடுத்துக் கூறிவிட்டு" ஏ நபியே! இந்த இஸ்லாம் தான் எனது சன்மார்க்கமாகும். யான் உங்களை ஆண்டவன்பக்கல் உங்கள் பகுத்தறிவுக்கேற்றவாறே அழைக்கின்றேன். ஆகையால் என்னைப் பின்பற்றியொழுகுங்கள் என்று கூறிவிடுங்கள் என்று தன் வேதத்தில் எடுத்தோதுகின்றான் என அறிவிக்கின்றது.

இவ்விஷயம் பெரிதும் ஆராய்ந்துணரத் தக்கதாகும். அதாவது, மார்க்கத்துக்கும் நாகரிகத்துக்கு மிடையில் என்னென்ன விசேஷாம்சங்கள் இருக்கின்றன? இன்னும் அவற்றின் குணாகுணங்கள் எந்த விஷயங்களைச் சார்ந்து பலாபலனளிக்கின்றனவென்பதையும் யோசித்துணரவேண்டும்.

நாகரிகமென்பது நமது புலன்கள் சம்பந்தப்பட்ட காரியாதிகளைச் சார்ந்ததாக இருக்கின்றது. இன்னும் அது அபரிமிதமான அறிவு சம்பந்தப்பட்ட விஷயங்களைச்சார்ந்ததாகவு மிருக்கின்றது. இஃதிங்ஙனமிருக்க மதம் போதிக்கும் சில அம்சங்கள் நம் புலன்களையும் அறிவியலையும் விட்டு அப்புறப்பட்டனவாய் காணப்படுகின்றது.

மானுஷ்ய இனத்தினர் இயற்கை அம்சத்துடன் விளங்குபவராவர். எனவே அவர்கள், இயற்கை முறைப்படியே இவ்வுலகினில் வாழ்ந்து ஜீவிக்க வேண்டியவர்களாயுளர். ஆகையால் இயற்கை வாழ்வின் முறைகள் மானிட கோடிகட்கு மிகவும் அத்தியாவசியமாயிருக்கின்றது. மேலும் அம்மானிடன் அனுபவத்தில் நித்தம் உபயோகிக்கின்ற அறிவுணர்ச்சி, புலன் உணர்ச்சி யாவும் இயற்கை அம்சத்தைச் 'சார்ந்ததாகவே இருக்கின்றது. நிற்க மதப்போக்கானது இப்போதனை விஷயத்தில் வியப்புண்டாக்கி வைப்பதாகவுமிருக்கின்றது.

ஆகையால் சிருஷ்டிக்கப்படாததும், மறைவானதும், அத்தியாவசியமாய் இருந்தே ஆகவேண்டியதுமான ஓர் பரம்பொருள் ஆதி அந்தமென்ற வரம்பைக் கடந்த மகாத்மியத்துடன் நிலைத்திருக்கிறதென்பதை நிச்சயமாய் நிர்ணயங்கொள்ள வேண்டுமென்று சன்மார்க்கம் போதிக்கின்றது. மனுஷ்யனானவன் எத்தகைய குண சுபாவமுள்ளவனாகை யிருக்கின்றானெனின், எது அவனது அனுபவ ரீதிக்கும் பகுத்தறிவின் பாங்கிற்கும் நேர்மையானதாய் அமைந்து காணப்படுகின்றதோ அதைத்தான் அவன் உறுதியாய் நிர்ணயங் கொள்ளக்கூடியவனா யிருக்கின்றான். அதாவது, அவனது அறிவு எதை

வாஸ்தவமானதென்று ஒப்புக்கொள்ளுமோ அதை சத்தியமென்றும், எதைப்பொய்யானதென்று நிராகரிக்குமோ அதையே அசத்தியமானதென்றும் நிர்ணயங் கொள்ளுகின்ருன். அங்ஙனமிருக்க, இவ்வுலக சராசரத்தின் போக்கிற்கும் தன்மைக்கும் ஒத்தமைந்தில்லாது எல்லாவற்றைவிட தனிச் சிறப்புடையதாயும் விசித்திரமானதாயு முள்ள ஓர் பரமான்மாவை ஒப்புக்கொண்டு வந்திருக்க வேண்டு மென்று மதம் கட்டளையிடுவதை மாந்தர் ஏற்றுக்கொண்டு தீரவேண்டியதே நேர்மையானதா யிருக்கின்றது. அதாவது, அங்கிங்கெணுதபடி எங்கும் நிராமயமாய் நிறைந்திருப்பவனுன ஏக இறைவன் மீது மன உறுதியான நன்னம்பிக்கை (ஈமான்) கொள்ளவேண்டியதாம். மேலும் அவ்விறைவனது அமைப்புத்தன்மையானது இணையற்றதாயும் சர்வ சக்தியினும் மிகைத்ததாகவும் விளங்குகின்றது. மேலும் சர்வ சிருஷ்டித்துவங்களையும் அவனே உண்டாக்குபவனுக இருக்கின்ருன். இப்படிப்பட்டவன் வெளிப்புலனுகிய கண்கட்கு மறைந்தவனுகயிருப்பினும் அறிவின் மூலம் அறிந்து அவன்பால் நம்பிக்கை கொள்ளுதல் வேண்டும். இஃது இஸ்லாம் மதம் போதிக்கும் நாகரிக அம்சங்களி லொன்ருகும்.

பொதுவாக ஒரு விஷயத்தைப்பற்றி நிர்ணயங் கொள்ள வேண்டுமாயின் அதற்காக சரியான அத்தாக்ஷி கட்டாயமாய் வேண்டியிருக்கிறது. நாகரிக முறைப்படி ஒப்புக்கொள்ள வேண்டுமாயின் அதற்கான அத்தாக்ஷியானது மிக மிக அத்தியாவசியமாய் வேண்டி இருக்கின்றது. அத்தகைய அத்தாக்ஷியை புலன்களாலும் அறிவிஞலும் அறிந்துணர்ந்துகொள்ள வேண்டும். மேலும் அப்படிப்பட்ட பரமவிஷயத்தை நிர்ணயங் கொள்வதற்கு அகப்பார்வை பயன்படமாட்டாது. ஆகவேதான் "கண் பார்வையைக் கொண்டு அப்பரமான்மாவை அடையப்பெற முடியாது" என்று கூறப்பட்டிருக்கின்றது.

இக்காரணம் பற்றியே, தகுந்த அத்தாக்ஷியில்லாமல் அவ்விஷயத்தின்மீது நிர்ணயங் கொள்வது முடியாததாகயிருக்கிறது. அங்ஙனம் ஒப்புக்கொள்ளாவிடின் மார்க்கமுமில்லாது போகின்றது. இதனுல் வெளி அறிவு வேறென்பதும் மார்க்க நிர்ணயம் வேறென்பதும் நன்கு விளங்குகின்றது. இன்னமும் வெளி நாகரிகமென்பது கல்வியறிவைப்பற்றி நெருங்கிய சம்பந்தங் கொண்டிருக்கிறதே அல்லாமல் அது வெறும் மத விஷயத்தைப் பற்றிமட்டும் சம்பந்தமுள்ளதாயில்லை.

இவ்விவாதப் பிரச்சினை இக்காலை எங்கும் வியாபித்துக் காணப்படுகின்றது. எனவே, சரியான விதப்படி ஆராய்ந்துணராத ஒரு சில மக்கள் மத ஸ்தாபனமானது முற்றும் கற்பனையாகவே இருக்கின்றது; இதற்கும் பகுத்தறிவின் போக்குக்கும் சிறிதும் ஐக்கிய பாவனையே கிடையாதென்று செப்பித் திரிகின்றனர். இவ்வித குறுகியமதியுள்ள மதியீனர்களின் இத்தகைய விவாதங்களை யுன்னி வியப்படைந்து சிரிக்கவேண்டியிருக்கின்றது. அன்னேர் நம்மவர்மீது சாற்றும் அபவாதங்களைவிட்டும் அவர்களும் நீங்காது உழன்று கொண்டேதா னிருக்கின்றனர். அவர்களுடைய நடப்புகளும் கூற்றுகளுங்கூட அவ்விதமாகிய கற்பனைகளால் நிறைந்தனவாகவே இருக்கின்றன. அங்ஙனம் அவர்களுடைய நடப்பும் பேச்சும் முரண்பாடானவையாகயிருப்பதே, அவர்கள் அசத்தியமானவர்களென்பதற்குரிய யோதிய அத்தாக்ஷியாக இருக்கின்றது. ஆகையால் அப்படிப்பட்டவர்கள் முதன் முதலாக தங்கள் அறிவு ஞானச் சூன்னியத்தை யொட்டியும் நடப்பின் ஊழலை யொட்டியுமே வருந்தியுணரக்கக் கடவர்களாக! மேலும் அவர்களுடைய சைன்ஸ் வாதமே கற்பனையாக இருப்பதை யாம் ஈண்டு ஓர் உதாரணத்தைக் கொண்டு ஸ்திரப்படுத்தி விடுகிருேம்:—

யாரேனுமொரு விஞ்ஞான நிபுணரிடம் சென்று "ஜலம் என்பது என்ன?" என்று கேட்டுப்பாருங்கள். அதற்கவர், "ஜலமானது ஒரு மென்மையான திரவப்பொருள்; ஆக்ஸஜன், ஹைட்ரோஜின் எனக்கூடிய இரண்டு வஸ்துக்களும் சேர்வதனுல் உண்டாகின்றது" என்று பதில் சொல்லுவார். அவ்விரு பொருட்களின் அந்தரங்கம் தானென்னவென்று மீண்டும் கேட்டுப்பாருங்கள். அவர் என்ன சொல்வாரானுல், "ஆக்ஸஜன் என்பது காஸ் (சக்தி) என்னும் ஒருவித திரவ இனத்தைச் சேர்ந்த பொருளாகும். அந்த ஆக்ஸஜன் தன்னில் மட்டும் எத்த

கையருசியும் எவ்விதவாசனையுமுடையதல்ல. அதன் நிறையானது 11056 இன இடையாகும். மேனும் ஹைட்ரோஜன் என்பதும் ஒருவிதமான ருசியற்ற திரவப்பொருளாகும்; அதனுடைய நிறையானது 692-இன இடையாகும்.'' என்று சொல்லுவார். அதன்பின்னரும் அந்த சைன்ஸுக்காரரை நோக்கி அந்தப் பொருளின் ஆதி அசல் அம்சமென்ன? அதன் குண சுபாவமென்னவென்று கேட்டுப்பாருங்கள். அதற்குமேலவர் என்ன சொல்வாரானல்:—இதனுடையவும் மற்றப்பண்டங்களுடையவும் அசல் அம்சமானது இயற்கை சக்தியாம்சமாகும். அதன் இயற்கை அம்சமாகிறது சிறுசிறு நுண்ணிய துணுக்குகளால் உண்டாகின்றது. அந்த நுண்ணிய பொருட்கட்குப் பெயர் ஜவ்ஹர் (அசல் சத்து) என்பதாகும். அதனலாகும் இயங்குதலுக்குப் பெயர் பொருட்சக்தி என்பதாகும். இதை மற்ெருருவிதத்திலும் சொல்லலாம். அதாவது, ஒவ்வொரு பண்டமும் அசலில் உபப்பொருளும் சத்துப்பொருளும் சேர்ந்தே உண்டாவதாகும். ஆகையால், இதேவிதமாகவே உலகத்தின் சர்வப் பொருட்களும் உபப்பொருளாலும் சத்துப் பொருளாலுமே உண்டாகின்றது என்று உங்கள் அறிவுக்கே பிடிக்காதவண்ணம் ஏதேதையோ உளறிக் கொட்டுவார்.

இதற்குத் தான் சைன்ஸ் என்னும் விஞ்ஞான அறிவாராய்ச்சி யென்பதாம். இஃதிங்ஙன மிருக்க, அந்த விஞ்ஞான நிபுணரின் கூற்றின்படி இப்பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பொருளும் இயற்கையாய் இறைவனது சக்தியால் உண்டாகாமல்-சுயமே ஒரு பண்டமும் இன்னெரு பண்டமும் ஐக்கியப்படுவதனல் தான் உண்டாகின்றது என்ற விபரீத விஷயம் விளக்கமாகின்றது. இதை உத்தேசிக்குமிடத்து, சைன்ஸ் முறைமையில் எத்தனையோ இட்டுக் கட்டான பேச்சுகளை கற்பனை செய்து கூறவேண்டி யிருக்கிறது.

(1) ஜவ்ஹரெபர்து (மூலப்பண்டம்). இதினின்றுதான் ஒரு பொருளின் அசலானது உருவமாகின்றதாம். இதை எவ்வாறு அறிந்துணர்வதோ தெரியவில்லை.

(2) 'ஜவ்ஹரெபர்து' என்பது ஒருவித ஜடப்பொருள் என்றும் சைன்ஸ்களில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனல் குணம் சம் நிறைந்தபின் காணப்படும் தண்ணீரைப் பார்த்தாலல்லாமல் வேறு விதமாய் அதன் மூலப் பண்டம் எனப்படுகிற ஜவ்ஹரினல் அது ஜடப்பொருள் என்பதை ஒரு போதும் நீங்கள் உணர்ந்து கொள்ளவே முடியாது.

(3) மாத்தயெ கஹ்ருபாயீ என்பதும் மேற்கூறிய (அறிவிக்கு விளங்காத) ஆராய்ச்சிப்படியே அறியப்பட வேண்டியதாயிருக்கின்றது.

பொதுவாக சைன்ஸுக்காரர்களிடம் சென்று உலகத்தின் எந்த வஸ்துவைப் பற்றிக் கேட்டபோதிலும் எல்லாம் ஒன்றுடன் வேெறென்று ஐக்கியப்படுவதனல் உண்டாகின்றது என்று கற்பனைப் பண்ணி கூறுவார்களே யல்லாமல் மனம் நிம்மதியடையும் வண்ணம் இறைவனது மகத்தான சக்தியையும் இயற்கைத் தத்துவத்தையும் அனுசரித்துக் கூறமாட்டார்கள். ஏனெனின், அந்த ஸைன்ஸுக்காரர்கள் கடவுள் உண்டென்பதையே நம்பாமல் நிராகரித்து 'தஹ்ரியத்' என்னும் உலோகாயதக் கொள்கையைப் பேசுபவர்களாவர். ஆகையால் அவர்கள் கடவுளின் சிருஷ்டித்துவத்தை சிலாகித்துக் கூறமாட்டார்கள். மேலும் தங்கள் கூற்றும் போக்கும் வீணன பேச்சுகளிலும் கற்பனைகளிலும் உழல்வதைப்பற்றி நாணமுமடையமாட்டார்கள்.

சுருங்கக் கூறுமிடத்து, நமது சத்திய இஸ்லாம் மார்க்கத்தில் பழிப்புக்கும் அவதூறுக்கும் இடம் பாடான விஷயம் ஒன்றும் கிடையாது. இன்னும் சீரான நாகரீகத்துக்கு எதிரிடையான விஷயமும் யாதொன்றுங் கிடையாது. ஆகவே, மக்களை சீரான மார்க்கத்திலாக்கி, இறைவனது வணக்கத்தில் பரிபக்குவப் படுத்தி வைக்கும்படியான நாகரிகம் மேனட்டுடையதாயிருப்பினும் கீழ்நாட்டுடையதாயிருப்பினும் ஒன்றேயாகும்.

இஃதிங்ஙனமிருக்க, ஆங்கிலக்கல்வி அபிவிருத்தியாகும் ஊர்களிலுள்ள முஸ்லிம் இளைஞர்களிற் சிலர், நாளுக்குநாள் மேனட்டு நவநாகரிகத்தைப் பின்பற்றி வருவதைக் கண்ட ஐரோப்பியர்களிற் சிலர் மேனட்டு நாகரிகந் தான் சிறந்ததென்று கூறுகின்றனர். இக்கூற்று உண்மைக்கு மாறுனதாகும். ஏனெனின், இதுகாலை மேனட்டாரின் பழக்க வழக்கமாகிய நவீன நவநாகரிகமானது எத்

துணைதான் விருத்தி யடைந்திருந்தபோதிலும் கூடிய சீக்கிரத்தில் அந்நாகரிகம் யாவும் சூரியன்முன் அந்தகாரம்போல் மறைந்தொழிந்துபோய் இஸ்லாத்தின் நல்லாசாரமே உலகமெங்கும் பரவிவிடுமென்பதில் சந்தேகமில்லை. அக்காலை மேனாட்டார்கூட நம் கீழ்நாட்டு (இஸ்லாமிய) நாகரிகத்தையே பின்பற்றி நடந்து வாழ்க்கை சுத்தம் பெறுவார்களென்பது திண்ணம். அக்காலை மேனாட்டு நவநாகரிகம் மேனாட்டிலேயே குழிதோண்டிப் புதைக்கப்பட்டுப் போய்விடும். உலக முழுமையும் ஏகமயமாய் ஒரே இஸ்லாமிய நாகரிகம்தான் நிலவி இலங்கிக்கொண்டிருக்கும். (தொடரும்)

காதியானிப் பிரசாரத்திற்குத் தடை.

விருதுநகர் சுன்னத்வல்ஜமாஅத்து முஸ்லிம்களின் வெற்றி!

ஜனாப் P. N. A. முஹம்மது இப்ருஹிம்சாஹிப் அவர்களின் மார்க்க பக்தி!!

போலீஸாரின் வீர தீரச் செயல் பாராட்டப்படுகிறது!!!

(ஜனாப் எம். செய்யிது உமர் பாஷா வரைவது)

நந் தென்னாட்டில் சில நாட்களுக்கு முன் தோன்றி, சிறிது காலம் திறை மறைவிலும் சிறிது காலம்—சமயம் வாய்க்கும் பொழுது பஹிரங்கமாகவும் காதியானிக் கொள்கையைப் பரத்திவரும், காதியானிகளின் தென்னாட்டு ஏஜண்டான பா. தாவுதுசா என்பார் எங்களின் விருது நகரையும் விட்டாரில்லை. சென்ற சில வருடங்களாக இவ்வூரிலுள்ள சிற்சில இளைஞர்கள், மார்க்கப்புறட்டராகிய அப்பிரசாரகரைப் பின்பற்றி வருவதன் பயனாய், சென்ற வருடத்தில் இவ்வூர் கமாலிய்யா முஸ்லிம் சங்கத்தின் ஆதரவின் கீழ் இங்கு அவர் தருவிக்கப் பட்டார். அதுவிஷயம் இவ்வூரிலுள்ள மார்க்க பக்தி வாய்ந்த முஸ்லிம்களிற் பெரும்பாலோருக்கு திருப்திக் குறைவையும், மனக் கசப்பையும், மக்களிடையே பெரும் பரபரப்பையும் ஏற்படுத்தி விட்ட தென்பது யாவரு மறிந்ததே. இவ்வாண்டிலும் அக்கமாலிய்யா முஸ்லிம் சங்கத்தார் பா. தா. வை இந்நகருக்குத் தருவித்து மீலாத்ஷரீப் கொண்டாட்டம் நடத்த வேண்டுமென்று முயற்சிசெய்து வருவதை அறிந்த இவ்வூர்மார்க்க பக்தி பூண்டொழுகும்பொது ஜனங்களுக்கிடையே பெரும் பரபரப்பும் கிளர்ச்சியும் ஏற்பட்டு, அம் மார்க்கப் புறட்டனை ஒருக்காலும் இங்கு வரவிட மாட்டோம் என்று கூறினர் சிலர். வேறு சிலர் ஈஸா (அலை.) அவர்கள் சிலுவையில் அறைபட்டு மரணமடைந்துவிட்டார்களென்று ஜவாஹிருல் புர்கான் என்னும் நூலில் எழுதி, மானிடர்களை வழிகெடுக்கும் துர்மார்க்கப் பிரசாரஞ் செய்பவரை இங்கு வரவிடமாட்டோமென்றனர். வேறு சிலரோ, நமது உலக ரட்சகர் காத்தமுந்நபிய்யீன் (ஸல்.) அவர்களுக்குப்பின் தாம் நபியாகயிருக்குமென்று கூறிப் போந்த மிர்ஸாவின் மார்க்கத்தை நம் நாட்டில் பிரசாரஞ் செய்து வரும் ஒருவர் திருநபிக் கொண்டாட்ட மகா சபையில் எவ்வாறு பிரசங்கம் புரிவதென்று கூறினர். வேறு சிலர் இவர் தம்முடைய நூற்களிலும் பிரசுரங்களிலும் நமது நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் பெருமை பொருந்திய மாட்சிமைக்குப் பங்கம் விளைவிக்கும் தோரணையில் எழுதிவிட்டு, இதுபொழுது திருநபி தினக்கொண்டாட்ட விஷயமாகப் பிரசாரம் புரிவதற்கு வெளிப் புறப்படுவதின் இரகசியம் இன்னதென்று தெரியவில்லையே என வெகு ஆத்திரத்தோடு பலவாறாகப் பேசிக்கொண்டு எவ்வகையிலும் அவரை இவ்வூருக்கு வரவிடலாகாதெனக் கூறிக் கொண்டிருந்தனர். சுருங்கக் கூறுமிடத்து, நகரின் ஒவ்வொரு பகுதிகளிலும் சந்து வீதிகள், பள்ளிவாசல் வீடு முதலியவைகளிலும் இதே பேச்சாகத்தானிருந்தது.

இவ்வூர் சுன்னத்வல்ஜமாஅத்து முஸ்லிம்களைச் சீர்குலைக்க வேண்டுமென்னும் நோக்கத்துடனும், ஊரில் கட்சிப்பிளவை உண்டு பண்ண வேண்டுமென்னும் அபிப்பிராயத்துடனும் வரும் பா. தா-வை பஹிஷ்கரித்துவிட்டு தக்க மேதாவிகளான மௌல்விகளைக் கொண்டு மீலாத்ஷரீப் கொண்டாட்டத்தை சிறப்பாக நடத்த வேண்டுமென்னும் நோக்கத்துடனும், கமாலிய்யா முஸ்லிம் சங்கத்தினரில் பா. தா-வைப் பின்பற்றும் கோஷ்டியினர் தீய பிரசாரத்தில் சிக்குண்டு போகாமலிருக்கும் நோக்கத்துடனும், முஸ்லிம் சமுகத்தாருக் கிடையே எவ்விதப் பிளவும் ஏற்படக்கூடா தென்னும் நன்னோக்கங் கொண்டும் இந்நகரின்பிரபல முஸ்லிம் தலைவராகிய ஆலீ ஜனாப் பெ. நா. அ. முஹம்மது இப்ருஹீம் சாஹிப் பஹாதுர் அவர்கள் 21-7-33 வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகைக்குபின் பள்ளி வாசலில் மகாஜனங்களின் முன்னிலையில் "நம்தேச முஸ்லிம்களின் ஒற்றுமையும், பா. தா-வின் முரண்பாடான மார்க்கக் கொள்கைகளும்" என்பனபற்றி மிகவும் உருக்கமாக நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்துகையில் சபையோர்களை நோக்கி பா. தா-வை இவ்வைபவத்திற்கு வரவழைப்பதைத் தவிர்த்து கண்ணியமிக்க உலமாக்களில் யாரையேனும் தருவித்து எல்லோரும் ஒற்றுமையாக வைபவத்தை அழகான முறையில் நடத்தி முடிக்கலாமென்றும், பா. தா. பிரசங்கம் செய்வதாகயிருந்தால் அவர் எழுதியும் இயம்பியும் வரும் தவறான கொள்கைகளைப்பற்றி இவ்விடம் வந்திருக்கும் உலமாக்கள் கேட்குங் கேள்விகளுக்கு அவர் தக்க பதில் அளித்துவிட்டால், எல்லோரும் சேர்ந்து ஒற்றுமையாக அவரைப் பிரசங்கம் புரியச் செய்யலாமென்றும் குறிப்பிட்டார்கள். அவர்களினது அருமை பொருந்திய அரும்மொழிகளை அன்போடு செவியுற்ற முஸ்லிம்களிற் பெரும்பான்மையோர் பா. தா-வை இவ்விடம் வரவிடலாகாது; மதபோதகர்களான உலமாக்களைக் கொண்டே மீலாத்ஷரீப் கொண்டாட்டத்தைச்சிறப்பிக்க வேண்டுமென்னும் தீர்மானத்திற்கு வந்தனராகையால், சிறுபான்மையினரான தாவூதிய்யாகோஷ்டியினர் பா.தா. வைத்தான் தருவிப்போமென்று விதண்டாவாதம்புரிந்துகொண்டு வெளியேறிவிட்டனர்.

ஏற்கனவே, இவ்வூருக்கு வரவழைக்கப்பட்டிருந்த காதியானி சம்ஹாரிகளான காயல் பட்டணம் ஆலீஜனாப்களான மௌலானா மௌலவீ ஹாபிஸ் அ. ச. முஹம்மது அப்துல்காதிர் ஆலிம், மௌலவீ ஹாபிஸ் அ. ச. முஹம்மது லெப்பை ஆலிம், மௌலவீ ஹாபிஸ் மி. சு. முஹம்மது அப்துல்காதிர் ஆலிம் ஆகியவர்களால் 22, 23உ களில் முறையே "இஸ்லாமிய சீர்திருத்தம், இஸ்லாத்தின் பாதுகாப்பு, இஸ்லாத்தின் தற்காலநிலைமை தாவூதிய்யாக்களின் மாறுபாடான கொள்கைகள்" என்பனபற்றி மிக தெளிவாகவும் விளக்கமாகவும் அறிய சொற்பொழிவுகள் நிகழ்பெற்றன. அவ்வமயம் அப்பிரசங்கங்களில் காதியானிக் கொள்கையுடையோர் இஸ்லாத்தை விட்டுப் புரம்பான காபிர்களென்றும் அக்கொள்கையை தென்னாட்டில் பிரசாரஞ் செய்துவரும் பா. தாவூத்சாவும் அவரது சகாக்களும் காதியானிகளைப் பின்பற்றியவர்களென்றும் தக்க ஆதாரத்துடன் விளக்கிக் காண்பித்தார்கள். இவ்வூர் மகாஜனங்கள் யாவரும் 'வஅஜ்' மஜ்லிசுகளுக்கு சமுகம்கொடுத்து நஸீஹத்துகளை இன்புறக் கேட்டு மகிழடைந்து சென்றது குறிப்பிடத்தக்க விசேஷமேயாகும்.

இந்நிலைமையிலும் பா. தா. 23-7-33 பகல் 12-30-க்கு தன் சகாக்களுடன் வந்து இரவு 9-30-க்குப் பிரசங்கம் செய்யப்போவதாக கமாலிய்யா சங்கத்தாரால் பற்பல துண்டு பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருந்தன. இந்நிலைமையில் பா. தா-வின் கோஷ்டியினர் பல ஆரவாரங்களுடன் ஊர்வலமாக அவரை அழைத்துவர ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றிருந்தார்கள். பா. தா. குறிப்பிடப்பட்டுள்ள வண்டியில் வராததுகண்டு ஏமாந்து மன சஞ்சலமடைந்தவர்களாய் $1\frac{1}{4}$, $4\frac{1}{2}$, $5\frac{1}{4}$, $8\frac{1}{2}$ மணிக்கு முறையே இவ்வூருக்கு வரும் வண்டிகளுக்கெல்லாம் காத்திருந்து பா. தா. வரக்காணாது "இலவுகாத்த கிளியே போல்" ஏமாற்றங்கொண்டு மிக்க மனக் கிலேசத்துடன் வீடு திரும்பினார்கள். அந்தோ பரிதாபம்! பரிதாபம்!! பரிதாபம்!!!

பா. தா. சகாக்களுடன் சிலோனிலிருந்து மதுரை ஸ்டேஷன் வந்திறங்கியவுடன், காதியானி சம்ஹாரிகளான காயல்பட்டணம் மௌலவிகள் விருதுநகர் வந்திருப்பதாகக்

கேள்விப்பட்டதும், அங்கேயே தங்கிவிட்
டார். அடுத்தாப்போல் ஒரு அடிகூட எடுத்து
வைக்க முடியாது கால் பின்னிக் கொண்டது
போல் திகைத்தார், திடுக்கிட்டார், பதட்ட
மடைந்தார். என்ன செய்வது? உலமாக்
களின் பெயர் கேட்டவுடன் விரண்டோடுவ
தையே தொழிலாகக்கொண்டவர் இது
பொழுது வேறு என்ன செய்யப்போகிறார்!
விஷயமிவ்வாறிருக்க, விருது நகரிலுள்ள
தாவூதிய்யாக் குஞ்சுகள் பா. தா. குறிப்
பிட்ட நேரத்திற்கு வரவில்லையே என்ற பீதி
யால் மனக்கிலேசமுற்று அவர்களிற் சிலர்
மதுரைக்கு விரைந்தடித்து ஓடிப் பார்க்கும்
பொழுது, அங்கு பா. தா. வும் அவரது
சகாக்களும், விழித்துக் கொண்டிருக்கக்
கண்டு "ஐயோகோ தாங்கள் குறிப்பிட்ட
நேரத்தில் வரவில்லையே! தங்களை வரவேற்று
ஊர்வலத்துடன் அழைத்துச் செல்ல நமது
கோஷ்டியார் யாவரும் ஸ்டேஷனுக்கு வந்து
காத்திருந்து விட்டுத் தங்களைக் காணாது
வருத்தமுற்றுவீடு திரும்பினரே; தாங்கள்
குறிப்பிட்ட நேரத்தில் விஜயஞ் செய்யாத
தற்குக் காரணமென்னவென்று வினவினர்
கள். அதற்கு பா. தா. "வைதீகக் கோட்
டைப் புலிகள் உங்களூருக்கு வந்திருப்ப
தாகத் தெரிந்து சற்று யோசித்து அங்குள்ள
நிலைமையைத் தெரிந்துகொண்டு தான் போக
வேண்டுமென்று இவ்விடம் தங்கி விட்டோ"
மென்று பதிலிறுத்தார். உடனே பா. தா.
விடம் விருதுநகர் வாசிகள் அந்நகரில் ஏற்
பட்டிருக்கும் பரபரப்பையும், முஸ்லிம் சமு
கத்தாரின் எதிர்ப்பையும், காதியானி சம்
ஹாரிகளாகிய உலமாக்களின் வீரமொழி
களையும் எடுத்துரைக்கவே, பா. தா. நடுக்கங்
கொண்டு விருதுநகர் வரமுடியாது; சென்
னையில் தன் தாயாருக்கு பெரும் அபாய
நிலைமை ஏற்பட்டிருக்கிறது எனக் கூறிமறுத்
தார்; மழுப்பினார். அந்தோ! பரிதாபம்!
"பெரியார்களின் வார்த்தையையுங் கே
ளாது அவர்களினது மனதைப் புண்படுத்தி
அவர்களுக்கு விரோதமாக தங்களைக்கொண்டு
எவ்வளவோ விமரிசையாக கூட்டத்தை
நடத்தவேண்டுமென்று யாங்கள் கஷ்டத்
துடன் எடுத்துக் கொண்ட பிரயாசையெல்
லாம் வீணாகப்போகிறதே" என்று உள்ளம்
பதைபதைக்க மனம் துடித்து எண்ணான
எண்ணங்களை எல்லாம் மனதிலெண்ணி பா.
தா. விடம் மிகவும் வணக்கத்துடன் "தாங்கள்
வருவதாக ஒப்புக்கொண்டதால், யாங்கள்
எவ்வளவோ பிரயாசையோடு கஷ்டப்பட்டுக்
கொண்டிருக்குங்கால் மௌலவிகளுக்கு பய
ந்துகொண்டு தாங்கள் வராமற்போவது அவ
மானமல்லவா" எனக்கூறி, எவ்விதமாகிலும்
தாங்கள் அங்குவந்து இரண்டு விநாடியாகி
லும் மேடைமீதேறி இரங்கினால் போது
மென்று கேட்டுக்கொண்டார்கள். இது விஷய
மாக பா. தா. ஆழ்ந்த சிந்தனைபூண்டு கவலைக்
கடலில் மூழ்கி தன்கோஷ்டியாரை எவ்வகை
யிலும் திருப்திசெய்வதற்கு எவ்விதமான
தந்திரத்தைக் கைகொள்வது என்னும் கவலை
யிலேயே அநேக நேரங்களைக் கழித்த பின்
னர், 10 மணிக்கு மதுரையை விட்டுப்புறப்
பட்டு ஊர் அடங்கியபின் இரகசியமாக
விருதுநகர் வந்து மேடை ஏறி இறங்கி தன்
கோஷ்டியாரைத் திருப்திசெய்து விடலா
மென்னும் எண்ணத்துடன் தன்னை பயந்த
நிலைமையில் இவ்விடம் இரவு 11 மணிக்கு
வந்து சேர்ந்தார்.

ஊர் அடங்கியிருந்த மக்களுக்கு பா. தா.
சகாக்களின் வருகை தெரிந்து விடவே,
பெரும் பரபரப்பும் பெரும் கலகத்திற்குள்ள
அறிகுறிகளும் காணப்பட்டது. எனவே பா.
தா. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து தாவூதிய்
யாக்கோஷ்டியினரின்ஜாகைக்குவரும்போது
முன்ஸிபல் சத்திரத்துக்கு முன்பாக கனம்
சப்இனிஸ்பெக்டர் அவர்கள் மோட்டாரை
நிறுத்தி, பா. தா. வையும் அவரது சகாக்களை
யும்கனம் ஸர்க்கிள் இனிஸ்பெக்டர் அவர்கள்
அழைத்துவரச்சொல்வதாகக்கூறவே, அவர்
கள் மறுத்தார்கள். உடனே சர்க்கிள் இனிஸ்
பெக்டர் அவர்கள் கார் முன் வந்து பா. தா.
வை அழைக்க, பா. தா. சத்திரத்திற்குச்
சென்றார். அங்கு இருகோஷ்டியினர்களும்
பெரும் பரப்பரப்புடன் கூடி விட்டார்கள்.
கனம் சர்க்கிள் அவர்கள், வெகு சாமர்த்திய
மாக, நாளை மாலை 5 மணிக்கு மீட்டிங் வைத்
துக் கொள்ளுங்கள்; இவ்வளவு நேரத்திற்குப்
பின் யாதொரு காரியமும் செய்யாதீர்க
ளென வெகு சாதுர்யமாகச் சொல்லி அது
பொழுது காரியத்தை சமரசத்திற்கு
கொண்டுவந்தார்கள். அவ்வாறு செய்யாது
ஏதாகிலும் அந்தநேரத்தில் பிரசங்கம் நடை
பெற ஆரம்பமாகி யிருக்குமானால், பெரும்
கலகங்களும் அநேகக்கொலைகளும் ஏற்பட்

டிருக்கும். அதுசமயம் சர்க்கிள் கனம் ஸ்ரீமான் பத்மனுபராவ் அவர்கள் சாமர்த்தியமாகவும் சமாதான நோக்கத்துடனும் நடந்து சமரஸம் செய்து வைத்தது பெரும் போற்றத்தக்க காரியமேயாகும். அது விஷயமாக விருதுநகர் வாசிகள் யாவரும் ஏகமாய் நன்றி செலுத்திப் பாராட்டுகின்ருர்கள்.

கனம் சர்க்கிள் இனிஸ்பெக்டர் அவர்கள் 24-7-33 காலேயில், இவ்வூர் இருக்கும் நிலைமையை மேல் அதிகாரிகளான சிவகாசி டிப்டி சூப்ரெண்டு அவர்களுக்கும், டிவிஷனல் ஆபீஸர் அவர்களுக்கும் தெரியப்படுத்தி அவர்களை விருதுநகருக்கு பகல் 2-30-க்கு வரும்படிசெய்துவிட்டார்கள். அதுபொழுது டிப்டி கலெக்டர் முன்னிலேயில். பா. தா. இஸ்லாம் மார்க்கத்தின் உண்மையான கொள்கைக்கு மாருன காதியானிப் பிரசாரம் செய்கிறவரென்றும், அவருடைய கொள்கைகள் சன்மார்க்கத்தின் உண்மை கொள்கைகளுக்கு முற்ற முற்ற மாருனதென்றும், அவரது தவருன கொள்கையில் மார்க்கமறியா இள வாலிபர்களைச் சேர்ப்பதற்காகவே பிரசாரம் புரிந்து வருகிருரென்றும், அவர் இங்கு பிரசங்கம் புரிவதால் பெரும் விபரீதங்கள் ஏற்படுமென்றும் தக்க ஆதாரங்களோடு எடுத்துக் கூறி தடை உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க மேன்மை தங்கிய கலெக்டர் அவர்கள் தடை உத்திரவு (வாய்ப்பூட்டு) பிறப்பித்துவிட்டார். மேலும் இங்கு ஏதாகிலும் கலவரம் நிகழ்ந்துவிடாமல் பார்த்துக் கொள்வதற்காக 10-1 அண்டு 20-2 ரிஸர்வ் படை ஆயுதந்தாங்கியதாக வந்திருந்தது. அனேக ஜனங்கள் பெரும் கலகம் நடைபெறுமென்று பீதியடைந்திருந்தும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களின் அரிய பெரிய முயற்சியால் நகர் நிம்மதியடைந்தது.

பின்னர் 24-7-33 மாலே 5-மணிக்கு பா. தா. மீலாத்ஷரீப் கொண்டாட்டத்தை நடத்தப்போவதாக தாவூதிய்யா கோஷ்டியாரால் துண்டு பிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டன. இது விஷயமாய் ஊருக்குள் காணப்பட்ட பரபரப்பைப் பார்த்து, பா. தா. இஸ்லாமிய மார்க்கத்தில் பிளவும் பெரும் கேடும் உண்டுபண்ணக் கூடியவர் என்பதை மாட்சிமை தங்கிய கவர்ன்மெண்டார் உணர்ந்து இந்நகர் சுன்னத்வல்ஜமாஅத்து முஸ்லிம்களின் வேண்டுகோளின்படி பா. தா-வும் அவரது சகாக்களும் விருதுநகர் எல்லேக்குள் எவ்விதப் பிரசங்கமும் கூட்டமும் நிகழ்த்தக் கூடாதென்று 144 ஆர்டர் போடப்பட்டு சரியாக $4\frac{3}{4}$-மணிக்கு பா. தா-வும் அவரது கோஷ்டியாரும் பந்தலுக்குச் சமீபமாக வரவே அத்தடை உத்திரவு சாதரா செய்யப்பட்டது. அவ்வார்டரை கையில் வாங்கிக் கொண்டவுடன் எடுத்தார் ரயிலுக்கு ஓட்டம் பா. தா. அந்தோ! வெட்கம்!! வெட்கம்!!! அதன்பின் கூட்டம் கலேந்து நகர் நிம்மதியடைந்தது.

இஸ்லாத்தின் உண்மை சுன்னத்வல்ஜமாஅத்துக் கொள்கையை சின்னுபின்னப்படுத்த கங்கணங்கட்டிக் கொண்டு பிரசாரஞ் செய்து திரியும் கோஷ்டியாரின் விஷமப் பிரசாரம் விருதுநகரில் தலைகாட்டாது, மார்க்கப் புறட்டர்களை விரட்டிய மார்க்காபிமானிகளாய விருதுநகர் ஸுன்னத்வல்ஜமாஅத்து முஸ்லிம்களை பொதுவாகவும், இப்புனித காரியத்திற்கு தலேமை வகித்து தைரியமாகவும் புத்திசாலித்தனமாகவும் முன்னின்றுழைத்த மாஜீ முன்சிபல் சேர்மென் ஆலீ ஜனுப் பி. என். ஏ. முஹம்மது இப்ருஹீம் சாஹிப் பஹதூர் அவர்களை சிறப்பாகவும் பாராட்டி நம் தென்னிந்தியாவிலுள்ள பற்பல சங்கங்களிலிருந்தும் பொதுஜமாஅத்தார்களிடமிருந்தும் வாழ்த்துத் தந்திகள் ஏராளமாக வந்து குவிந்த வண்ணமாகவே யிருக்கின்றது. சுன்னத்து வல்ஜமாஅத்துக்கொள்கை வாழ்க. காதியானியத்து வீழ்க.

தடையுத்தரவு.

சிவகாசி ஜாயிண்டு மாஜிஸ்டிரேட் கோர்ட்டு

1. இன்றைய தினம் என் முன்பாக சாத்தூர் சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், சிவகாசி போலீஸ் டெப்டி சூப்ரின்டென்டெண்டும் சமர்ப்பித்த விண்ணப்பத்திலிருந்தும், பிரமாணப் பத்திரத்திலிருந்தும், நீங்களும் இன்னும் பலரும் சேர்ந்து மதசம்பந்தமான ஒரு கூட்டம் நடத்தப்போவதாக எனக்குத் தெரிய வருகிறபடியாலும், போலீஸ் அறிக்கையிலிருந்தும் பிமாணப் பத்திரத்திலிருந்தும் அப்படிப்பட்ட கூட்டங்களும் அங்கு செய்யப்படும் பிரசங்கங்களும் இதரஆரவாரங்களும் பொதுஜன அமைதிக்குப் பங்க

மும் ஜனங்களுக்கு மனத்தாங்கலும் துன்பமும் ஏற்படுமென்றும், கலகங்கள் அல்லது கொடுஞ் சண்டைகள் சம்பவிக்குமென்றும் நான் நம்புகிறபடியாலும், இந்த நிலைமை உடனே தோன்றக்கூடிய நெருக்கடியாயிருப்பதன் காரணமாக, இதில் கண்ட நபர்களுக்கு நோட்டிஸ் அனுப்ப நேரமில்லாமையாலும், நான் டி. எஸ். மணி இதன் மூலமாய் ஒரு அவசர ஒருதலைப்பக்ஷமான உத்தரவை 144 கி. பி. கோ. பிரிவின்கீழ் பிறப்பித்து, பொது ஜனங்கள் எல்லோருமாவது, அல்லது ஒரு சிலராவது பொதுவாகவும் சிறப்பாக கீழேக் குறிப்பிட்ட நபர்களாவது மத சம்பந்தமானதும் அதுபோன்றதுமான கூட்டத்தையோ அன்றி ஆரவாரங்களையோ விருதுநகர் முனிஸிபாலிடியின் எல்லைக்குள் கூட்டவும், நடத்தவும், அதில் சம்பந்தப்படவுங்கூடாது என்று தடையுத்தரவு பிறப்பிக்கிறேன்.

2. இந்த உத்தரவு இன்றுமுதல் ஒரு மாதம் வரையில் அமுலிலிருக்கும்.

3. கீழ்க்கண்ட நபர்களுக்கு இந்த உத்தரவு சாதரா செய்யப்படவேண்டும்.

(1) பி. தாவூத்சா சாஹிப், பி.ஏ., நாச்சியார்கோயில், ஆசிரியர் "தாருல் இஸ்லாம்," சென்னை.

(2) எம். கே. எம். காதிர் மொஹிய்யித்தீன் மரைக்காயர், மதுரை.

(3) என். தண்டபாணிப் பிள்ளை, மதுரை.

(4) ஏ. இ. ஏ. இப்ராஹிம்ஸா ராவுத்தர், அப்துல் காதிர் ராவுத்தரின் குமாரர், விருதுநகர்,

(5) ஏ. இ. எம். முகம்மத் ஹனீபா ராவுத்தர், விருதுநகர்.

(6) வி. எம். முகம்மத் ராவுத்தர், விருதுநகர்.

(கையொப்பம்)
டி. எம். எஸ். மணி,
ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்.

மேற்கண்ட தடையுத்தரவைப் பிறப்பித்து பா. தாவூத்ஷாவின் பிரசங்கத்தையும் கூட்டத்தையும் தடுத்திராவிடில், விருதுநகர் முஸ்லிம்களுக்குள் பெருத்த கலகங்களும் கொலையும் ஏற்பட்டிருக்குமென்பதிலையமில்லை. இவ்வித அபாயகரமான சம்பவத்தை வெகு திறமையாகவும், புத்திசாலித் தனமாகவும் தடுத்து எவ்வித கலவரமும் உண்டாகாமல் அமைதியை நிலைநாட்டிய இந்நகர் போலீஸ் அதிகாரிகளுக்கும், சப்டிவிஷன் ஆபீஸரவர்களுக்கும் இந்நகர் முஸ்லிம்கள் மட்டுமல்லாமல் நம் தென்னிந்திய முஸ்லிம்களனைவர்களும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளார்களென்பதிலையமில்லை. நான் மனப்பூர்வமாக மேற்கண்ட சர்க்கார் அதிகாரிகளைப் பாராட்டுகிறேன்.

மத உரிமை பாதிக்கப்பட்டதா?

(ஜமால் ஜோலிப்பது.)

நங் தென்னாட்டின் காதியானிப் பிரசாரக ஏஜண்டான நறையூர் பா. தாவூத்சா, விருதுநகரில் பெற்ற தடையுத்தரவு விஷயமாய் தாருல் இஸ்லாம் பத்திரிகையில் பிரமாதமாக ஏதேதையோ எழுதி வருகிறார். இவ்விதம் எழுதும் வியாசங்களில் விருதுநகர் போலிஸ் முதல், தாருல் இஸ்லாம் பத்திராதிபர்களால் முல்லாக்கள் என்று தூற்றப்பட்டு வருகிற மௌலவிமார்கள்வரை யாவரையும் வரிசைக்கிரமமாகத் தாக்கப்பட்டு வருகிறது. இதன் மத்தியில் வெற்றியா தோல்வியா என்றும், ஒட்டமா பயமா என்றும், மத உரிமை பாதிக்கப்படுகிறது என்றும் உபதலையங்கமிட்டு வரையப்பட்டிருக்கிறது. தாருல் இஸ்லாம் பத்திராதிபர் வெற்றியடைவதையோ தோல்வி யடைவதையோ பற்றி எமக்கொரு கவலையுமில்லை. அவர் ஒட்டமெடுப்பதைப் பற்றியோ பயங்கொள்ளியாக இருப்பதைப்பற்றியோ யாருக்கும் அக்கரை இல்லை. என்றாலும், மத உரிமை பாதிக்கப்படுகிறது எனப் பிரமாதமாகக்கூறி பொது ஜனங்களைக் குழப்புவதுதான் எமக்கு வருத்

தமாக இருக்கிறது. எனவே, மத உரிமை
பாதிக்கப்பட்டதா இல்லையா ? என்பதுபற்றி
சற்று இங்கு கவனிப்போம்:

அரசாங்கத்தாருக்கு மத உரிமையில்
பிரவேசிக்க வேண்டுமென்ற எண்ணமோ
நோக்கமோ கிடையாதென்பதற்கு, அரசாங்
கத்தாரின் ஆட்சி முறையே போதிய அத்
தாட்சியாக இருக்கிறது. அன்றியும் எவ்
வகையிலும் அவரவர் மத உரிமையில் தலை
யிடுவதில்லை என்று மாக்ஷிமை தங்கிய சக்கி
ரவர்த்தினியாரான விக்டோரியா மகாராணி
யாரும், மாக்ஷிமை தங்கிய ஏழாம் எட்வர்ட்
சக்கிரவர்த்தி அவர்களும் இந்தியாவின் ஆட்
சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுங்கால்
ஸ்ரீமுகம் விடுத்துள்ளனர். தற்போது நம்மை
யாளும் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும் இதை
உறுதிப்படுத்தியுள்ளார். அவ்வாறே இது
வரை அரசாங்கத்தாரும் மத விஷயங்களில்
தலையிடவேயில்லை. ஆனால் சாரதா சட்டம்
போன்ற சில சட்டங்களை இயற்றி இருக்கிறார்
களென்றால், அது நமது பிரதிநிதிகளாய்
சட்டசபையில் வீற்றிருப்பவர்களிலுள்ள ஒரு
சிலரின் தவறேயன்றி கவர்ன்மெண்டாரின்
தவறன்று. எனவே, இவ்விதச் சட்டங்க
ளியற்றுவதற்கு அரசாங்கத்தார் பொறுப்
பாளிகளன்றி நமது பிரதிநிதிகளே பொறுப்
பாளிகளாக இருக்கின்றனர்.

அன்றியும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்க
ளின் ஜனனவிழாவைக் கொண்டாடும் விஷ
யத்தில், இந்தியாவிலுள்ள அறிவாளிகள்
ஜாதி மதபேதமின்றியும் அரசியல்கக்ஷி பேத
மின்றியும் கலந்துகொண் டிருக்கின்றனர்.
இவ்விழாவைக் கொண்டாடும் சங்கத்தினர்க
ளும் எவ்விதப் பாகுபாட்டையும் கவனி
யாது தக்கவர்களைப் பொறுக்கியெடுத்து அவர்
களைக் கொண்டு ஜெனனவிழாவை நடப்பிக்
கின்றனர். இவ்விழாக் கூட்டங்களில் காலஞ்
சென்ற பனகல்ராஜா அவர்கள் சென்னை
மாகாணமுதல் மந்திரியாக இருந்தகாலத்தி
லும், ஸர். சி. பி. ராமசாமி அய்யர் - இவர்
சென்னை அரசாங்கச் சட்டமெம்பராக இருந்த
காலத்திலும் தலைமை வகித்து நபிகள் நாய
கம் (ஸல்.) அவர்கள் சரிதையைப் பிரசங்கித்
திருக்கின்றனர். அகில இந்தியா திஸாபிகல்
சொஸைட்டித் தலைவரான மிஸ்டர் ஜீனராஜ
தாஸா, டாக்டர் அன்னிபெஸன்ட், ஸர் சிவ
ஞானம், வெங்கடரத்னம் நாயடு போன்றவர்
களும் இத்தகைய விழாக்களில் சொற்பெருக்
காற்றி யிருக்கின்றனர். இவ்வாண்டிலும்
கூட கம்பத்தில் நடைபெற்ற நபிஜயந்தி
விழாவில் உசிலம்பட்டி டிப்டி கலெக்டர்
தலைமை வகித்திருக்கிறார். தஞ்சை ஜில்லா
வழுத்தூரில் நடைபெற்ற திருநபி விழாவில்
கவுன்சில் செக்ரிடரி கான்சாஹிப் சையித்
தாஜுத்தின் சாஹிப் பகதூர். M. L. C.
தலைமை வகித்திருக்கிறார். திருச்சியில் நடை
பெற்ற விழாவில் ஸி. ஐ. டி. இலாகாவைச்
சேர்ந்த ஜனாப் கான்பஹதூர் அப்துல் கரீம்
சாஹிப் தலைமை வகித்து நடத்தியிருக்கிறார்.
மன்னார் குடியில் நடைபெற்ற மகாநாட்டில்
ஒரு டிப்டி கலெக்டர் தலைமைவகிக்க காலேஜ்
புரப்ஸர்களும், டாக்டர்களும், பண்டிதர்
களும் பிரசங்கம் புரிந்திருக்கின்றனர். நபி
ஜயந்தியைக் கொண்டாடுவது கூடாதென
அரசாங்கம் தடைசெய்திருக்குமாயின், அர
சாங்க உத்தியோகஸ்தர்கள் தலைமை வகிக்க
முன் வந்திருப்பரோ? அன்றியும், இதுவரை
நம் நாட்டில் நடைபெற்றுள்ள நபிஜயந்தியில்
எவருக்காவது தடையுத்தரவு பிறந்திருக்
கின்றதா? அவ்வாறு ஒன்றும் நடைபெற்ற
தாக நாம் இதுவரை கேள்விப்பட்டது கிடை
யாது. எனவே நறையூராருக்கு 144 வந்தால்
அது நபிஜயந்திக்கல்ல நறையூராருக்குத்
தான் என்பதை அவர் நன்குணர்ந்து கொள்
ளட்டும். தவிர, நபிஜயந்தியைக் கொண்டா
டிய இதர கனவான்களில் எவரும் தமது
கக்ஷிக்கு வெற்றி எனப்பறை சாற்றவில்லை;
படாடோபம் செய்யவில்லை. ஒரு பெரும்
புருஷரை, மாநிலம் உய்யத் தோன்றிய மாம
கரை, நிகரற்ற சத்ய சந்தரைப் பற்றிய புக
ழையும், அப்பெருமகர் ஆற்றிய அரும்
பெரும் தொண்டுகளையும் மக்களுக்கு எடுத்
துக் காட்டி தங்களது கடமையைச் செய்வ
தாகவே நினைத்திருந்தனர். தங்கள் தங்க
ளின் மதக் கோட்பாட்டைப் பிரசாரம்
செய்யவோ, தங்கள் ராஜியக் கக்ஷியைப் பற்
றிப் பேசவோமுன் வரவில்லையாதலின் அவர்
கள் விஷயத்தில் அரசாங்கம் தலையிடவில்லை.

இந்த நறையூரார் அவ்வாறில்லாது அவர்
செல்லுமிடங்களிலெல்லாம் தமது விஷத்தை
யேகக்கியதால் அவ்வவ்விடங்களி லெல்லாம்
பிளவும் வேற்றுமையும் தற்சமயம் தாண்டவ
மாடுகின்றன. தவிரவும், தமது பத்திரிகை
யில் தாம் வெற்றிக் கொடி நாட்டியதாக

விளம்பரம் செய்தார். வந்தது சனியன், பிடித்தது 144.

தமது கூற்றுப்படி இவர் வெற்றிக் கொடி நாட்டியதாக விளம்பரம் செய்திராவிட்டால், இன்னும், தமது தீய காதியானிக் கொள்கையை மறைமுகமாகவேனும் அல்லது நேர்முகமாக வேனும் பரவச் செய்ய முயன்றிராவிட்டால் கட்சியும் பிளவும் எற்பட்டிருக்காது; 144 வந்துமிருக்காது; அரசாங்கத்தார் அமைதியைக் காக்க சிரமப்பட்டிருக்கவும் நேர்ந்திராது. எனவே அரசாங்கத்தார் அமைதியை நிலைநாட்டவே, கலகம் வாராமற்றடுக்கவே தலையிடவேண்டியது அவர்களின் கடமையாக ஆய்விட்டது. இதுவன்றி அவர்கள் ஒருக்காலும் நபிஜயந்தி விழாவில் தலையிடவேயில்லை. எனவே, அரசாங்கத்தார் மத உரிமையில் தலையிட்டதாகக் கூறுவதும், அது விஷயமாகக் கிளர்ச்சி செய்வதும் இதரர்களைக் கிளர்ச்சி செய்யும்படி தூண்டுவதும் வெறும் ஹம்பக்கே யன்றி வேறில்லை. முஸ்லிம்காள்! "துற்புத்தி மந்தியால் குலத்துக்கீனம்" என்றபடி இந்த துற்புத்தியின் துர் அபிப்பிராயத்தை நம்பி மோசம் போகாதீர்கள் எனப் பன்முறையும் வேண்டுகின்றேம்.

உஷார்! உஷார்!! உஷார்!!!

வெற்றியா ? தோல்வியா ? விளம்புவீரே !

(உண்மை விளம்பி)

சபாஷ் விருதுநகர் !

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் திருஜயந்தியை நவீன முறையில் சில்லாண்டுகளாய்க் கொண்டாடிவருவது உலகறிந்த விஷயம். இக்கொண்டாட்டங்களில் பற்பல அறிஞர்கள் சொற்பெருக்காற்றுகின்றனர். வெளியிடங்களிலிருந்தும் வரவழைக்கப்படுகின்றனர். இவ்வழக்கத்திற்கேற்ப இவ்வாண்டில் தஞ்சை ஜில்லாவின் சில ஊர்களிலும், மற்ற இரண்டொரு இடங்களிலும் சென்னை தா. இ. ஆசிரியர்கள் பிரசங்கத்திற்கழைக்கப் பெற்றனர். இதுபோலவே ஸை. இ. ஆசிரியரவர்களும் மற்ற மௌலவிகளும் ஆங்காங்கு பிரசங்கம் புரிந்திருக்கின்றனர். பல ஹிந்து அறிஞர்களுங்கூட அநேகம் இடங்களில் மாபெருங் கூட்டங்களில் நாயகம் (ஸல்) அவர்களின் சேவைகளை எடுத்துப் பாராட்டிப்பேசி இருக்கின்றனர். என்றாலும், எவரும் தாங்கள் வெற்றிக் கொடி நாட்டியதாகவோ ஜெயபேரிகை முழக்கியதாகவோ படாடோபமாய்ப் பத்திரிகைகளிற் பிரசுரித்துத் தற்புகழ்ச்சி செய்து கொள்ளவில்லை. இதற்கு மாறாக தா. இ. ஆசிரியர்களும் அவர் அபிமானிகளில் இரண்டொருவரும் பெரும் வெற்றி பெற்றுவிட்டதாக தா. இ.-வில் பத்தி பத்தியாக எழுதிநிறைத்தனர். போகட்டும், இதைப்பற்றி அக்கரையில்லை. ஆனால், இவருடைய பிரசசாரத்தைத் தடைசெய்வதற்கு அநேகர் பற்பலவிதமான சூழ்ச்சிகள் புரிந்து பார்த்தும் யாதொருபயனுமேற்படவில்லை என்று பலரையும் தாக்கி பற்பல விதமான வியாசம் வரைந்து வெளியிடுகிறார். தவிர இவரது கோஷ்டியினர் ஏதோ ஒரு மூலையில் நின்று தங்களுடைய சாமர்த்தியத்தை தாங்களே மெச்சிப் புகழ்ந்துகொண்டு சாலஞ்சுசெய்தனராம்! இவர்கள் இந்தச் சாலஞ்சில் உண்மையாளர்களாக இருந்தால், முன்னர் உலமாக்கள் எத்தனையோ முறை இவர்களை அரைகூவி அழைத்தபோது அவைகளில் ஏதேனுமொன்றுக்காயினும் சம்மதித்திருக்கக் கூடாதா? நல்லது அடியற்கை மங்கலத்தில் கூடிய நபீஜயந்தியின் பொழுது மகாநாடு நடைபெறுவதற்கு முன்னர் பிரசங்கியார் தாவூத்சாவிடத்திலும், நபிஜயந்தியைக் கூட்டிய கமிட்டியாரிடத்திலும் உலமாக்கள் அச்சிட்டு நோட்டீஸ் விடுத்தனரே அப்பொழுதேனும் சம்மதித்திருக்கலாமன்றோ? அவ்வாறு ஒன்றும்செய்யாது ஒரு மூலையிலிருந்து கொண்டு வெகு டாம்பீகமாக சாலன்சு செய்துவிட்டு பத்திரிகையில் பேடித்தனமாக வெற்றி என்று பிதற்றித் திரிகின்றனர். இவர்களின் அறியாமை தானென்னே!

இவ்விதம் இவர்கள் வீணகைப் பிதற்றிய மைக்குக் கைம்மாருக விருதுநகர் மார்க்காபிமானிகள் பரிசளித்துவிட்டனர். இவர்களின் கொட்டத்தை அடக்கி 144-வது தடை உத்திரவு பிரிஉபசாரஞ் செய்து வழியனுப்பி விட்டனர். எனவே, தாவூதிய்யாபார்ட்டியினரின் கொட்டத்தை அடக்கிய விருதுநகரையும், அங்குவதியும் மார்க்காபிமானிகளையும் நம் நாடு பாராட்டுகிறது.

இந்த தாவூதிய்யா பார்ட்டியார் செய்த சாலன்சு உண்மையாக இருந்திருப்பின், விருதுநகரில் இவர்கள் மௌலவிகளின் கேள்விக்குப் பதில் கூறச் சம்மதப்பட்டிருக்கலாமே! அவ்வாறு சம்மதப்பட்டிருந்தால் விருதுநகர் நபிஜயந்தி, இத்தென்னுட்டில் கொண்டாடப்பெற்ற ஜயந்திகள்யாவற்றிலும் மிக முக்கியமானதாய்—சிறந்ததாய் விளங்கியிருந்திருக்கும்; அவ்விழாவில் தாவூதிய்யா பார்ட்டியினரும், மார்க்கபக்தர்களும் ஒரு மேடையில் கூடி இருப்பர், இக்காட்சியைக் கண்டுகளிக்க முஸ்லிம் சமுகமே திரண்டுவந்திருக்கும்; விருதுநகரில் இதற்குமுன் நடைபெற்றிராத அவ்வளவு பெரிய மகாநாடுநடைபெற்றிருக்கும். இவைகளை எல்லாம் விட்டு விட்டு நபிஜயந்திக்கு 144 என்று தப்பருத்தங் கொள்ளும்படி பிரசாரம் செய்வதிலும், விருதுநகர் மார்க்காபிமானிகள்பால் வசைபுராணம் வீசுவதிலும் பிரயோசனமொன்றுமில்லை. எனவே, விருதுநகரில் உலமாக்களுடன் மதசம்பந்தமாகப் பேசி முடிவுக்குவர சம்மதியாமல் 144-வாங்கிக்கொண்டு ஓட்டம் பிடித்தது பேடித்தனமாகவும் தோல்வியாகவும் இல்லை என்ருல், தஞ்சை ஜில்லாவில் வெற்றியும் பெறவில்லை என்றுதான் ஏற்படுகிறது. இவர்கள் வாதத்தின்படி ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போராடினலன்றே வெற்றி தோல்வியை நிர்ணயிக்கவேண்டும் என்பதையாம் ஒப்புக்கொள்வதாயின், இவர்கள் முன்னர் வரைந்த வெற்றியானது வெறும் கட்டுரைதானே. எனவே, உலமாக்களும் மார்க்கபக்தர்களும் இந்தக்காதியானிப் பிரசாரகர்களுக்கு இடங்கொடாமல் விருதுநகரில் புத்திபுகட்டியது போற்றத்தக்க விஷயமாகும். ஒருவருடைய நன்மையும் தீமையும் இறுதியிலேயே நிர்த்தாரணம் செய்யவேண்டியதிருப்பதால், பா. தா. வின் வீரமொழிகளெல்லாம் எதிர்பார்ட்டியினரைக் கண்ட மாத்திரத்தில் அடங்கி ஒடுங்கிவிட்டன என்ருல், இதை வெற்றி என்று எழுதுவதா தோல்வி என்றெழுதுவதா என்பதைப் பொது ஜனங்கள்தாம் நிர்ணயிக்க வேண்டும், "தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் சண்டப்பிரசண்டம் என்றபடி இந்த பா. தா. வின் நிலை இருக்கிறது. போனதுபோகட்டும் இவர் குழாத்தினர் செய்த சாலன்சுப்படி இவர் மதவாதத்திற்கு வருகிருரா இல்லையா என்பதையேனும் இவர் அறிவிப்பாரா? அல்லது என் குழாத்தினர் கூற்றுக்கு யான் கட்டுப்படவில்லை ஆதலால் இதில் தமக்குச் சம்பந்தமில்லை என்று கூறுகிருரா என்பதையேனும் இவர்பகிரங்கமாகக்கூறிவிட விரும்புகின்றேன். ஆகவே, விருதுநகர்சுன்னத்துவல் ஜமாஅத்து முஸ்லிம்களின் வெற்றி மிகமிகப் போற்றப்படுகிறது. அவர்கள் வெற்றிபெற்றுவிட்டது தமக்கு பெரும் அவமானமாகயிருக்கிறதே என்று தா. இ. பலவாறு பிதற்றித் திரிவதைக் கண்டு விருதுநகர் வீரசிங்கங்கள் ஒருக்காலும் மனக்கிலேசமடைய மாட்டார்களென்று நம்புகிறேன். ஏனெனில், தோல்வியடைந்தவர்கள் மனவருத்த மேலீட்டால் பலவற்றையும், இல்லாது பொல்லாததையுந் தான் பிதற்றித் திரிவது வழக்கம். அதேபோல்தான் தா. இ. விலும் வரையப்பட்டு வருகிறதெனக்கருதி அதனை ஒதுக்கித் தள்ளிவிட்டு தாங்கள் பெற்ற ஜெயத்திற்காக அல்லாஹ்த ஆலாவைப் போற்றிப் புகழ்ந்து கொண்டு இனி ஆகவேண்டிய காரியாதிகளில் ஊக்கத்தோடு சேவை புரிவார்களென்று எதிர்பார்க்கிறேன்.

உபாத்தியாயர் தேவை

கீழக்கரை சதக்கதுன் ஜாரியா மத்ரஸாவுக்கு சகிண்டரி உபாத்தியாயர் தேவையிருக்கிறது. மெட்ரிக் பாஸ்செய்த டிரைனிங் உபாத்தியாயராக யிருக்கவேண்டும். உருது தெரிந்த முஸ்லிமாகயிருப்பது உத்தமம். மற்ற விஷயங்கள் கீழ்கண்ட அட்ரசுக்கு எழுதிக் கொள்ளவும்.

சே. மு. செய்யித் முஹம்மது ஆலிம்புலவர்

மதரஸா சதக்கத்துன் ஜாரியா, கீழக்கரை.

முஸ்லிம்களின் முன்னேற்றமும், அதற்குக் காரணமும்

தா. இ. ஹாபிஸ் என்பாரின் பிதற்றல்

(அன்பன் அறைவது)

'முஸ்லிம்களின் அழிவும் அதற்குக்காரணமும்' என்ற மகுடமிட்டு ஹாபிஸ் என்பார் தா. இ. வில் வியாசம் வரைந்து வருகிருர். அதில் தம்மால் இயன்றவரை அரபி மத்ரஸாக்களையும், அவைகளில் பயிலும் மாணவர்களையும், பயின்று வெளிவந்தவர்களையும் குறைகூறியும் இழிவுபடுத்தியும் எழுதி இருக்கிருர். ஆனல் ஒரு விஷயத்தை மாத்திரம் அவர் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள மறந்துவிட்டார் போலிருக்கிறது. அதாவது, அரபி மத்ரசாக்களையும், அதன் மாணவர்களையும் தூற்றும் இந்த மு. மு. அரபி மத்ரஸா அல்லாதயிடத்தில் பயின்று தாம் முன்னுக்கு வந்ததாக நினைத்துக் கொண்டிருக்கிருரா? என்பதை அவரே கூறட்டும். சிற்சில அரபி மத்ரஸாக்களில் குற்றங்குறைகள் இருக்கலாம். அவைகளைத் திருத்தவேண்டியது மிருக்கலாம். ஆகவே இவைகளைப்பற்றி எழுதப்புகு முன் அதன் சாதக பாதகம் ஆகிய இரண்டையும் கூறி அவைகளில் திருத்தவேண்டிய அம்சங்கள் இன்னின்னவை என்று விபரித்துக் கூற வேண்டியதிருக்க, அதைச்செய்யாமல் குற்றமிருப்பதாக மாத்திரம் குறைகூறி விட்டு வாழாதிருந்துவிட்டால் தன் கடமையை நிறைவேற்றிவிட்டதாக எவரும் கருதுவரோ? எனவே, அரபி மத்ரஸாக்களின் நன்மையைப்பற்றியும் அம்மத்ரஸாவில் பயின்றவர்களால் விளைந்த-விளைந்துவருகிற பலன்களைப்பற்றியும் இச்சிறு கட்டுரையில் எழுதத் துணிந்தனம்.

நந்தென்னுட்டில் சுமார் 700 வருஷங்களுக்கு முன்னிருந்தே இஸ்லாம் பரவி இருக்கிறதென்பது சரித்திரமறிந்த உண்மையாகும். இவ்வளவு நீண்டகாலமாக இஸ்லாம் இந்நாட்டிலிருந்து வருவதென்ருல், இவ் இஸ்லாத்தின் மக்களை—முஸ்லிம்களாகிய நம்மவரை மார்க்கநெறியினின்று வழுவாது காப்பாற்றி வந்தது—வருவது எது? என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நெடுங்காலத்திற்கு முன்னிருந்த சமாச்சாரங்களை எல்லாம் ஒன்றன்பின் ஒன்ருக எடுத்தோதாமல் சென்ற அரை நூற்றுண்டில் நடைபெற்றதை மாத்திரம் கவனிப்போம்:

இராயவேலூர் மத்ரஸே பாக்கியாத் ஸாலிஹாத்தைக் கவனிப்போம்: இம்மத்ரஸா ஷம்ஸுல் உலமா அஃலாஹஜ்றத் அல்ஹாஜ் ஷாஹ் அப்துல் வஹ்ஹாப் ஸாஹிப் காதிரி குத்திஸஸிர்ருஹு அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்றது. அப்பெரியார் இம்மத்ரஸாவைத் தன்னந்தனியே ஸ்தாபித்து நடத்தி பல பெரியார்களை உற்பவித்து அப்பால் அவர்களின் ஒத்துழைப்பால் மத்ரஸாவை எவ்வளவுமுன்னேற்றத்திற்குக்கொண்டு வந்திருக்கிருர்கள்! இம்மத்ரஸா ஏற்படுவதற்கு முன் நம்நாட்டில் எத்தனை மத்ரஸாக்கள், மௌலவிமார்கள் இருந்தனர்! முஸ்லிம்களின் மார்க்கபக்தியும், அனுஷ்டான முறைகளும் எவ்வாறிருந்தது என்பது உலகறிந்த விஷயமாகும். தவிர காயல்பட்டணம், மதுரை, கீழக்கரை, அதிராம் பட்டணம் முதலிய இடங்களைத் தவிர மற்ற உள்நாட்டுப் பிரதேசம் முழுதும் பெயருக்கு மாத்திரமே இஸ்லாம் என்றிருந்ததே அன்றி உண்மையில் ஒன்றுமில்லாமலே இருந்திருக்கிறது. இவ்வூர்வாசிகளை எல்லாம் திருத்தி இஸ்லாமியக்கலைகளைப் பரவச்செய்து ஆங்காங்கு மத்ரஸாக்களையும் மக்தபுகளையும் நிறுவச் செய்தவர்கள், உலமாக்களும் அவர்களிடம் கல்வி பயின்ற மௌலவிகளுமன்ருே? இவர்களின் பொருட்டாலல்லவோ இப்பொழுது நம் நாட்டு மக்கள் இஸ்லாமியச் சட்டதிட்டங்களையும் கொள்கைகளையும் தெரிந்து கொண்டிருக்கின்றனர். சுருங்கக் கூறுமிடத்து, உல

மாக்களின் ஒப்பற்ற ஊழியத்தையும் அவர்களால் இயற்றப் பெற்றுள்ள மத்ரஸாக்களின் அரும் ஊழியத்தையும் மறக்கமுடியுமோ?

தவிர நம் நாட்டில் தோன்றியுள்ள மத்ரஸாக்களில் கல்வி பயின்றுள்ள மௌலவிகள் பேஷ் இமாமாகவும், வாயிஸ்களாகவும், மத்ரஸாக்களின் ஆசிரியர்களாகவும் இருந்து உழைத்து வருவது ஒரு புறமிருக்க, இவர்களால் நம்நாட்டில் எத்தனை இஸ்லாமிய கிரந்தங்கள் எழுதப்பட்டிருக்கின்றன! அவைகளில் சுத்தத் தமிழாகவுள்ளவைகளையும் அறபுத் தமிழையும் சேர்த்துக் கவனித்து பார்ப்பது கொண்டு உண்மை நன்கு விளங்கும். இக்கிரந்தங்கள் இல்லாவிடில் பொது ஜனங்கள் சுலபமாக மார்க்கக் கொள்கைகளையும் அதன் சட்டதிட்டங்களையும் தெரிந்துகொள்வதியலுமோ? இவ்வாறு நூலாசிரியர்களாக மட்டும் இவர்கள் இருக்கிறார்கள் என்பதில்லை. தற்கால நவ நாகரீகத்தைப் பரப்புவதற்கும், ராஜிய சமுக சேவைகளுக்கும் முக்கிய கருவியாகக் கருதப்பட்டு வரும் பத்திரிகை தொழிலிலும் ஈடுபட்டே இருக்கின்றனர். இத் தென்னாட்டில் முஸ்லிம்களால் நடத்தப்பெற்று வரும் எல்லா பத்திரிகைகளுக்கும் ஆசிரியர்களாக இருப்பவர்களும்—இருந்தவர்களும் யார்? எல்லோரும் இந்த அரபி மத்ரஸாக்களில் பயின்றவர்களல்லவா? போகட்டும் இஸ்லாம் மதப் பிரசாரத்தில் ஈடுபட்டு மக்களுக்கு 'இஷா அத்துல் இஸ்லா'த்திலும் "ஹிபாஜத்துல் இஸ்லா"த்திலும் அக்கரை யுண்டு பண்ணியவர்கள் அரபிமத்ரஸாவில் பயின்ற மாணவர்கள் தானன்றோ? இவைகளை எவரேனும் மறுக்க முடியுமோ? இவைகளை நன்குணராது ஹாபிஸ் பிதற்றி வருவது பெரும் விந்தைக் குறியதல்லவா? குறை சொல்வதையே குணபோஷணமாகக் கொண்ட தா. இ. ஆசிரியர்களிடமிருந்து இதைத்தவிர வேறு எதைத்தான் எதிர்பார்க்க முடியும்? விஷயமிவ்வாறிருக்க, ஹாபிஸ் என்பார் இது சமயம் மத்ரஸாக்களின் மீது குறைகூற முன் வந்திருப்பதற்கு காரணம் யாதாகுமென்று கவனித்துப் பார்ப்போமானால், தம்முடைய தீய காதியானிப் பிரசாரத்திற்குத் தடையாகயிருப்பதும், அதனை எதிர்ப்பவர்களும் மௌலவிகளும், மத்ரஸாக்களில் கல்வி பயின்றவர்களுமாக யிருப்பதால், ஆரம்பத்தில் மௌலவிகளை தூற்றமுற்பட்டு தன்னுலியன்ற மட்டும் வசைமொழி புராணங்கள் பாடினார் பிறகு இதுபொழுது மத்ரஸாக்களைக் குறைகூறி அதன் நிருவாகங்கள்மீது பாணந் தொடுத்திருக்கிறார். இவ்வாறு செய்து மௌலவிகளுடையவும் மத்ரஸாக்களினுடையவும் மகிமைகளைப் பொதுமக்களின் மனதை விட்டுப் போக்கிவிட்டால், தமது தீய பிரசாரம் வெகு சுலுவில் பரவிவிடுமென்று வீண் கனவு கண்டு இவ்வாறெல்லாம் எழுதி வருவதாகத் தெரிகிறது. ஆனால் இந்த சூழ்ச்சிகளெல்லாம் ஒருக்காலும் பலிக்காதென்பதையும், மத்ரஸாக்களால் அநேக நற்பயன்கள் விளைந்து வருவதைக் கண்கூடாகப் பார்த்து வரும் பொதுமக்கள் இவருடைய கூற்றைப் பார்த்து ஏமாந்து மோசமாட்டார்களென்பதையும் ஹாபிஸ் என்பார் நன்குதெரிந்துக் கொள்வாராக.

இவ்வாறு குறைகூறுவது நன்றிகெட்ட தன்மையாகுமென்பதையும் ஹாபிஸ் என்பாருணரக்கடவர். 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றிகொன்ற மகர்க்கு' என்று வள்ளுவர் உரைத்திருப்பது அவருக்கு ஞாபகமில்லையா? மேலும், நமதிறைவன் தனது திருமறையின்கண் "நீங்கள் நன்றிசெலுத்தினால் நிச்சயமாக நான் உங்களுக்கு அதிகப்படுத்துவேன். இன்னும் நீங்கள் (நன்றி மறந்து) மாறுசெய்தால் என்னுடைய வதை மிகக் கடுமையானது" என்று கூறி இருப்பதை ஹாபிஸ் என்பார் ஞாபகத்தில் வைத்துக்கொள்வாராக.

ஆகவே வீணில் பழிசுமத்த முற்பட்டிருக்கும் தொழிலிருந்து ஹாபிஸ் என்பார் பின் வந்து தாம் குறைகூற முன்வந்திருப்பது சரியா தப்பா என்பதை தன் ஹிருதயத்தில் கைவைத்துப் பார்த்துச் செல்வாராக.

ஐரோப்பா மதத்தைவிட்டா முன்னேற்ற மடைந்தது?

கிழக்குப் பிரதேசத்தின் பிரதமத் தலைவராகிய அமீர் ஷகிப் அர்ஸலான் அவர்கள் கைப்பட எழுதப்பட்ட பின்வரும் விஷயம் அராபிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுளது அதாவது:—

புதிய ஜர்மனி யரசாங்கத்தின் தலைவராய ஸர் ஹிட்லர் என்பார், தமது புதிய மந்திரிச் சபையின் ஒரு ஜாபிதா—அறிக்கை வெளியிட்டு அதில் தங்கள் நோக்கம், கடமை முதலியவைகளைப் பற்றியும் விளக்கி யுள்ளார். அவர் வெளியிட்ட இந்த விஷயங்களைக் கண்டு ஜர்மனியர் எல்லோரும் மனமார்ந்த நன்றியை அவர்பால் தெரிவித்துள்ளார்கள். அப்படிப்பட்ட அறிக்கையில் அவர் சபையின் நோக்கங்களை எழுதுவதற்கு முகவுரையாக பின்வரும் வாக்கியங்களைக் கூறியுள்ளார்.

"ஜர்மனியக் குடியரசாங்கம் தனது முக்கிய முதற்பெரும் கடமையாகக் கொள்ள வேண்டியது யாதெனில், ஜர்மனியக் குடிமக்களுக்கிடையே சமுதாய ஒற்றுமையை நிலைநிறுத்தி வைக்க வேண்டும்; ஒற்றுமையே ஓர் சமூக வாழ்வுக்கு உயிர் போன்றதாகும், அப்படிப்பட்ட உயிரைப் பாதுகாப்பதற்காக அரசாங்கத்தாரும் எப்போதும் முயற்சி புரிந்துகொண்டே தானிருப்பார்கள். தவிர, கிறிஸ்துவ மார்க்கத்தை தற்காப்பு செய்து கொண்டிருப்பதை அரசாங்கத்தினர் எப்பொழுதும் தங்கள் முக்கிய கடமையாகக் கருதிக் கொண்டிருப்பார்கள். ஏனெனின், மார்க்க பக்திகுறைந்திருப்பது தான் நிர்வாக ஒழுங்கைக் குலைப்பதாயும் சகுணத்தின் இடையூறுயு மிருக்கின்றது. மேலும் அரசாங்கத்தார் தங்கள் கடந்தகால விசேஷங்களை கண்ணியமாய் மதித்தொழுகிக் கொள்ள வேண்டும். எனவே, பழங்கால வழக்காசாரங்களுடன் சம்பந்தங் கொண்டொழுகிக் கொள்ள வேண்டும். இவ்வித நோக்கங்களையே இந்நாட்டு இள வாலிபர்களின் முன்னேற்றத்துக்கும் மேன்மைக்கு முரிய அடிப்படையாகக் கொள்ளவேண்டும், என்பதாகும்'

மேலே எடுத்துக் கூறப்பட்ட பொழிப்புரையை ஸர் ஹிட்லர் அவர்கள், ஜர்மனிய வர்க்கத்தின் நபர்களில் ஒரு தனி நபராயிருக்கின்ற நிலைமையில் கூறவில்லை; ஆனால்! ஜர்மன் சமூகத்துக்கே பெருந் தலைவராகவும் சான்ஸலராகவு மிருக்கின்ற நிலைமையிலேயே எடுத்துக் கூறியுள்ளார். ஆகையால் தான் மந்திரிச் சபையின் எல்லாப் பிரதானிகளும் அவ்வுரையை ஆமோதித்து உண்மைப் பிரமாணஞ் செய்துள்ளார்கள். அந்த மந்திரிச் சபையிலும் எல்லா வகுப்பினரின் பிரதிநிதிகளும் சேர்ந்தே இருக்கின்றார்கள். ஆகையால், அந்த மொழியனைத்தும் முற்ற முற்ற உண்மையானதாகு மென்று கருதப்படுகின்றது. மேலும் இந்த பொழிப்புரையின் விஷயத்தை ஜர்மனிய வர்க்கத்தினின்று ஒருவரும் மறுத்தோ நிராகரித்தோ கூறவுமில்லை. ஆனால் பொதுவுடைமைக் கொள்கைக்காரர்கள் மட்டும் அதனை யறிந்து வெறுப்புற்றனர். எனினும் அத்தக் கூட்டத்தினர் ஜர்மன் தேசத்தில் ஒரு பொருட்டாக மதிக்கப் படாத அற்பக் குழுவாயிருக்கின்றனர். மேலும் அவர்கட்கு அந்நாட்டில் எத்தகைய செல்வாக்குங் கிடையாது. ஆகவே, அவ்வுரையை ஜர்மனிய சமூகத்தினர் அனைவரும் ஏகமாய் ஆதரித்து விட்டமையால் அதுவே நேர்மையானதென்று முடிவு செய்யப்பட்டுளது.

கிறிஸ்துவ மார்க்க ஆதரிப்பு

மேற்கூறிய விஷயங்களுடன் ஜர்மனியப் பத்திரிகைகள் பின்வரும் விஷயத்தையும் பிரசுரித்திருக்கின்றது :—

"ஜர்மனிப் புரோடஸ்டாண்டுக் கிறிஸ்துவர்கள் தங்கள் ஏசுநாதருடைய மார்க்கத்தின் கொள்கைகளை ஆதரிப்பதற்காகவும், அதைப் பாதுகாப்பதற்காகவு மென்று ஒரு சங்கத்தை ஸ்தாபிதஞ் செய்துள்ளார்கள். அவ்விஸ்தாபனத்தில் பெரும் பெரும் அறிவாளிகளும், டாக்டர்களும், இன்ஜீனியர்களும், இராஜீயத் தலைவர்களும், ஜனப்பெரியார்களும், அரசாங்கத்தின் அங்கத்தினர்களும் சேர்ந்திருக்கின்றார்கள்."

கீழ் நாட்டுப் பிரதேசங்களிலுள்ள ஒரு சில நாஸ்திகக் கொள்கைக்காரர்கள், கிறிஸ்துமதக் கொள்கைகளும் அன்னவர்களைப் பின்பற்றி நடப்பதும் சதாகாலத்துக்கும் நன்மையே விளைவித்துக் கொண்டிருக்குமென்றும், அதற்கு மாற்றமாய் இஸ்லாமியக் கொள்கைகளும் அதன் குணபோதனை விசேஷங்களும் தற்கால முன்னேற்ற நாகரிகத்தை அளிப்பனவாயில்லையென்று தவறாய்க் கருதிக்கொண்டிருக்கின்றனரா? ஆகவே ஜர்மனியிலுள்ள ஒரு சார்பார் தங்கள் உலக வாழ்க்கைக்கு கிறிஸ்துவக் கொள்கைகளையும் நடப்புக்களையும் துணையாகக்கொண்டு சமயத்துக் கேற்றவாறு நடந்து வருங்கால், நம் கீழ் நாடுகளாகிய அரேபியா, துருக்கி, ஈரான், ஹிந்துஸ்தான், மலேயா முதலிய இடங்களின் முஸ்லிம்கள் மட்டும் இஸ்லாம் மார்க்கத்தை தற்கால நாகரீகத்துக் கேற்ற துணை சாதனமாய்க் கொள்ளாமலிருந்து வருவதுதான் பெரிதும் வெறுக்கத்தக்க விஷயமாயிருந்து வருகின்றது. இப்படிப்பட்ட நம்பிக்கை ஈனர்களின் அந்தரங்க நோக்கம் தான் இன்னதென்பதை நமக்கு அறிவித்து வைப்பார்களாயின், அவர்களுடைய நோக்கத்துக்கேற்பவே சரியான பதில் கூறி அவர்கள் எண்ணத்தை ஒழுங்கு படுத்தல் சாலும்.

இங்கிலாந்தின் மதாபிமானம்.

மேற்கூறப்பட்ட அறிக்கையின் விஷயங்கள், நம் அரேபியா, எகிப்து, துருக்கி முதலிய நாடுகளில் வதியும் சில நாஸ்திகக் கொள்கைக்காரர்களின் தீய நோக்கங்களையும் கிளர்ச்சிகளையும் தகர்த்து, அவை நாஸமும் அசத்தியமுமாகுமென்று பட்டப் பகலிலும் வெட்ட வெளிச்சமாய் வெளிப்படுத்திவிட்டது. இன்னும் அவ்வறிக்கை விஷயமானது, பலதிறப்பட்ட நாடுகளில் வதியும் கல்வி யறிவிலா பாமர முஸ்லிம்களையும் தட்டி எழுப்பிவிட்டது. மேலும் "முஸ்லிம்கள் எதுவரை தங்கள் புராதனக் கொள்கைகளை பின்பற்றி நடந்து வருவரோ அதுவரை அன்னோர் முன்னேற்றமும் நாகரிகமு மடைந்த சமூகத்தில் கணிக்கப்பட மாட்டார்கள்" என்பதாக அந்நாஸ்திக வாதிகள் செய்துவந்த எதிர்ப்பிரசாரமானது சீர்குலைந்து போய்விட்டது. தவிர, இக்காலை ஐரோப்பா தேசங்கூட தன் மதக் கொள்கைகளை திரஸ்கரித்துவிட்டு தற்கால நவ நாகரிகமும் முன்னேற்றமும் அடைந்து விளங்குகிறதென்று அந்நாஸ்திக நோக்கக்காரர்கள் செப்பித் திரிகிறார்கள். இவைகளெல்லாம் தவறான கூற்றும் அபாண்டப்பழியுமாகுமென்பதில் ஐயமில்லை.

இஸ்லாத்தின் திவ்விய கோட்பாடுகளுக்கு விரோதமாக எதிர்ப்பிரசாரம் செய்து வருகின்ற அந்நாஸ்திக நோக்காளர்களைப் பார்த்து ஒரு விஷயம் கூறவேண்டி யுள்ளோம். அதாவது; 'ஏ நாஸ்திக நோக்காளர்களே! ஜர்மானிய அறிக்கை வெளியிட்டிருப்பதில், உங்களைப்போலதான் மதக்கொள்கைகளையெல்லாம் திரஸ்கரித்துவிட்டு அவர்கள் முன்னேற்றமடையத் துணிந்துள்ளார்கள்? ஏ! இராஜீயத்தையும் மார்க்கத்தையும் பிரிவினைப் படுத்திக் காட்டுபவர்களே! மதம் வேறு இராஜீயம் வேறு என்று நீங்கள் எண்ணிக்கொண்டிருப்பதற்கு அர்த்தம் தற்போது ஜர்மனியில் நிகழ்வுற்றுக் கொண்டிருக்கும் நிலைமைதானே? நிற்க, கிறிஸ்துவ மார்க்கத்தைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் முக்கிய கடமைகளிலொன்றாகும் என்றும், இதுதான் சன்மார்க்க சற்குண பரிபக்குவத்துக்கும் இராஜாங்க முன்னேற்றத்துக்குமுள்ள அடிப்படையாகுமென்றும் ஜர்மன் அரசாங்கத்தார் அறிக்கை வெளியிட்டிருப்பதற்கு உட்பொருள் இது தானே? ஆகையால் அரசாங்க முன்னேற்றத்திற்கும் சன்மார்க்க விசிராந்திக்கும் நெருங்கிய சம்பந்த முண்டென்பதை உணர்வீர்களாக!

ஹாலண்டு அரசியலும் கிறிஸ்துவமும்.

தம் நாட்டுக் கடுத்துள்ள நபிர் என்னுமிடத்து ஹபஷிகளை யெல்லாம் கிறிஸ்துவராக்கப்பட்டதென்று கூறி, மதம் வேறு அரசியல் வேறென்று ஹாலண்டின் பென்ஜித் அதிகார வர்க்கத்தினர் அறிக்கை வெளியிட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. இது உண்மையென்பதற்கு தக்க ஆதாரங் கிடையாது.

கி. பி. 1931-ம் வருடம் டிசம்பர் மீ 5-ந் தேதி ஹாலண்டில் கூடிய கீழ்ப்பிர தேசவாசிகளின் பெரியதொரு மகா நாட்டில் ஹாலண்டின் நிர்வாக அதிகாரி யானவர் சில அரிய விஷயங்களை எடுத்துக் கூறினர். அவர் கூறியதின் சாரமாவது:— ஹாலண்டு அரசாங்கத்தினர் மஷ்ரிகெ அக்ஸா பிர

தேசத்தை அதன் நன்மையை கருதி தம் ஆதிக்கத்திலாக்கிக் கொள்ளல் வேண்டும். இன்னும் அந்நாட்டை நம் ஆதீனத்திலாக்கிக் கொள்வதின் முக்கிய நோக்கமானது அங்குள்ள பிரஜைகள் பால் நம் கிறிஸ்துவமார்க்கத்தின் பிரயோஜனங்களையும் மேன்மைகளையும் எடுத்தோதுவதும்; அவர்களை ஏகமாய் கிறிஸ்துவர்களாக்கிவிடுவதுமேயாகும்'' என்பதாம்.

மேற்கூறிய விஷயங்கட்கு நேர் மாற்றமாக அவ்விடத்திலேயே எகிப்தியப் பிரதிநிதியின் தலைவரான முஸ்தபா அப்துர்ரஜாக் என்பாரும், ஷெய்கு தாஹாஹுஸைன் என்பாரும் அவர்களுடைய துணைவர்களும் கூறியிருக்கும் பிரசங்கங்களின் கருத்துகளையும் படித்தாராய்ந்து பாருங்கள். அத்துடன் நம்முடைய அசிரத்தையான ஊக்கமற்ற நிலைமையையும் உற்றுணர்ந்து வருந்தியழுது நேர்மை பெறுங்கள்.

நிரீஸ் வாதத்தின் நோக்கம்

இது சம்பந்தமான பெரியதொரு தர்க்கவாதத்தின் சாராம்சம் யாதெனில், "ஐரோப்பிய வர்க்கத்தினர் தங்கள்மதக் கொள்கைகளை யெல்லாம் கைவிட்டுப் போட்டார்கள். மேலும் அவர்கள் தங்கள் பூர்வகால வழக்கத்தையோ, தங்கள் மார்க்கக் கோட்பாடு, மதாசாரம் முதலியனவற்றையோ தங்கள் நாகரீகம் முன்னேற்றம் ஆகியவைகட்கு ஆதரவானதாய்க் கருதுவதுங் கிடையாது. மதாபி விருத்திக்கும் கல்வியபிவிருத்திக்கும் எவ்வாறான சம்பந்தமுமில்லை என அவர்கள் நன்கறிந் திருக்கின்றார்கள். இதன் கருத்து, மதத்துக்கும் இராஜரீகத்துக்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது என்பதாம்.

இவ்வித விஷயங்களைப்பற்றி அதிகம் விவாதம் புரிய நமக்கு விருப்பமில்லை. ஆனால் நம் முஸ்லிம்களில் ஒருசார்பார் மதபக்தியற்றவர்களாகவும், நாஸ்திகப் புத்தி யுடையவர்களாகவும் விளங்குவதற்காகத்தான் நாம் அதிகம் வருந்தவேண்டியிருக்கிறது. இன்னோர் தான் இதர முஸ்லிம்களிடையேயும் நாஸ்திக வாதத்தையும், நிரீஸ்வாதத்தையும் பரப்பி வைப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். இன்னமும் இப்படிப்பட்ட நபர்களின் போக்கானது நாஸ்திகத்தையும் மதாபிமானமின்மையையும் பரத்துவதா யிருப்பதோடல்லாமல், மேனாட்டாரின் ஆபாச அனுச்சார நவநாகரிகத்தை மக்களிடையே பரத்திவைப்பதாகவு மிருக்கின்றதென்பதற்காகத்தான் நாம் அளவற்றுத் துக்கிக்கவேண்டியவர்களா யுள்ளோம். அதாவது, நாம் இஸ்லாமிய நாட்டையும் மக்களையும் மேனாட்டு நவநாகரிகமென்னும் நாஸ்திகப் படுகுழியில் தள்ளி முஸ்லிம் உலகத்தின் வீரதீர சக்தியையே குலைத்துப் போட வேண்டுமென்பதாயிருக்கின்றது.

வாசகர்காள்! இப்போது நீங்கள் மேனாட்டு நாகரிக அரசாங்கத்தின் போக்கை அறிந்துகொண்டீர்கள். மேலும் ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்தை எவ்வாறு பரத்துவதற்கு முயல்கின்றனரென்பதையும் அறிந்துகொண்டீர்கள். அந்தரங்கத்தில் மேனாட்டு நாகரிகத்தில் வயப்பட்டோர் தம் மதத்தை கைவிட்டவர்களேயாவர். ஆகையால், நாமும் அவ்வாறு மேனாட்டு அநாகரிகத்தை பின்பற்றுவது நமக்குரிய மோசமும் நாசமுமேயா மென்பதில் ஐயமில்லை!

இஸ்லாம் உலகத்துக்கோர் பேரருளாம்.

ஓர் கிறிஸ்துவப் பாதிரியின் உண்மை சாக்ஷியம்

ரெவரெண்டு ஆயிஸிக் டெய்லர் என்னும் பிரபலப் பாதிரியார் சமீபத்தில் இங்கிலாந்தில் கூடிய சர்ச் மகாநாட்டில், தலைப்பில் கண்ட விஷயத்தை யொட்டி தலைமைப் பிரசங்கமொன்று வாசித்தார். அதில் அவர், இஸ்லாம் மதமானது இதர மதங்களைவிட எவ்வகையில் சிறப்புடையதாய் விளங்குகிறதென்பதைப்பற்றியும், அதன் சற்குணார்த்தப் போதனைகள், ஆன்மார்த்த தத்துவங்கள் முதலியனவற்றைப் பற்றியும் மிகமிக விளக்கமாக எடுத்தோதினார். அப்பிரசங்கத்தின் சாராம்சம் பின்வருமாறு:—

"இப்பிரபஞ்சத்தின் பலதிறப்பட்ட பிரதேசப் பகுதிகளிலெல்லாம் நடைபெறும் கிறிஸ்துமதப் பிரசாரத்தை கவனிக்குமிடத்து, முஸ்லிம்களுக்கு அபரிமிதமான வெற்றிகள் உண்டாயிருக்கின்றன; ஆங்காங்குள்ள ஜனங்கள் கிறிஸ்துவ மார்க்கத்தை திரஸ்கரித்துவிட்டு இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்டு அதற்கு அதிக பலத்தை அளித்து வருவதின் பயனாய், அநேக இடங்களில் கிறிஸ்துவப் பிரசாரமே வீழ்ச்சி யடைந்தொழிந்து விடும்படியாகவுஞ் செய்து வருகின்றன என்பதைத் தெரிந்துகொள்கிறோம்.

"மேலும் முஸ்லிம் வகுப்பினர்களை நாம் கிறிஸ்துவர்களாக்கி விடுவதற்காகப் புரியும் நமது பெரும் பெரும் பிரயத்தனங்களெல்லாம் முற்றும் வியர்த்தமாகவே முடிந்துவிடுகின்றது. ஆகையால் கிறிஸ்துவப் பிரசாரகர்களாகிய நாம், இனி நமது கைங்கரியங்களில் ஸ்திரமாயிருந்து தொண்டாற்றுவது ஒரு பக்கல் கிடக்கட்டும். அதனை அழிந்து போகாமல் பாதுகாத்து நன்னிலையில் வைத்துக்கொள்வதற்கே இதுபொழுது முயற்சிப்போம்.

"இற்றை நாளில் இஸ்லாம் மதமானது மொராக்கோ, ஸன்ஜிபார் முதலிய நாடுகள் தொடுத்து சீனத்தேசம் வரைக்கும் வியாபித்து விளங்குகின்றது; ஆப்ரிக்கா மகா கண்டப் பிரதேசங்களிலும் இஸ்லாம் மதமானது மிகவுந்தீவிரமாய் முன்னேற்றமடைந்து வருகின்றது; முஸ்லிம் பிரசாரகர்கள் அக்கண்டத்தின் கோங்கோ, ஜேம்ஸீ ஆகிய பிரதேசங்களிலும் ஆதீனம் பெற்று பிரசார வேலை செய்துவருகின்றார்கள்; இப்பொழுது தான் சமீப காலத்திற்கு முன் ஆங்குங்குள்ள ஹபஷிகளின் அகாண்டா ராஜ்யத்தின் பிரபல மன்னரே இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்டு முஸ்லிமாகியுள்ளார்.

நிற்க, இந்துஸ்தானத்தின்கண் நம் மேனாட்டு நவநாகரிகமானது ஹிந்து மதங்களுடைய ஆசாரத்துறையில் பெருங் கேட்டை விளைவித்து வந்தபோதிலும், இஸ்லாத்தின் நல்லாசாரமானது நம் நவநாகரிக வேகத்தையும் மீறித் தள்ளிக்கொண்டு நாளுக்கு நாள் முன்னேற்றமே அடைந்துவருகின்றது. இந்தியாவின் ஜனத் தொகையானது 32½ கோடி என்று கணக்கிடப்பட்டதில் 8 கோடி பேர்கள் முஸ்லிம்களாய் விளங்கி வருகின்றனர். மேலும் ஆப்ரிக்கா தேசத்திலும் முஸ்லிம்களின் தொகையானது, அந்நாட்டு மொத்த ஜனத் தொகையில் பேர்பகுதியை விட அதிகமானவர்கள் முஸ்லிம்களாயிருந்து வருகின்றார்கள்.

"முக்கியமாய் கவனிக்கத்தக்க விஷயம் யாதெனில், ஒருமுறை இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிமாகிவிட்டவர் தமது ஆயுட்கால பரியந்தம் அந்த இஸ்லாத்தின் தாஸராகவே ஆகிவிடுகின்றார். பிறகு அவர் இதர வேறெந்த மதத்தின்மீதும் சிந்தனை செலுத்திக்கூட பார்ப்பதில்லை. ஒருமுறை முஸ்லிமாகிவிட்டுப் பிறகு அதை திரஸ்கரித்து வேறு மதத்துக்கு மாறிவிட்ட முஸ்லிம் ஒருவரைக் கண்டு பிடிப்பதே முடியாத விஷயமாயிருக்கின்றது. கிறிஸ்துவர்களின் வசீகரணப் பிரசார வேகமெல்லாம் இஸ்லாத்தின் வேகத்தின் முன் அற்பமாகவே இருக்கின்றது. ஆகவே, கிறிஸ்துவ மார்க்கத்தைக் காட்டினும் இஸ்லாம் மதம்தான் இத்தரணியின் பொது மக்கட்கு (பேரருளாய்) அபரிமிதமான பேருழியங்கள் புரிந்திருக்கின்றது.

"இன்னொரு மிகப்பிரதான விஷயத்தை யொட்டி நாம் ஒரு விநாடிமட்டும் சிந்தனை செலுத்திப் பார்ப்போம்: அதாவது, மிகவும் கோரக் காட்டு மிராண்டியாயிருக்கும் ஹபஷி (நிக்ரோவன்) ஒருவன் இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்டானானால் உடனே அவனுடைய பழைய காட்டு மிராண்டித் தனமெல்லாம் எடுபட்டுப் போய் அவன் தூய்மை யடைந்து விடுகிறான்; அன்று தொடுத்தே அவன் பிசாசு வணக்கம், விக்கிரகப் பூசை, நரமாமிச பட்சணம் முதலிய அநாகரிகச் செயல்களை யெல்லாம் விட்டுத் தொலைத்து விடுகிறான்; அதற்கு முன் அவன் முக்கால் நிர்வாணக் கோலமாயிருந்த வழக்கத்தையும் விட்டு இஸ்லாத்தின் கட்டளைப் படி தன் மானத்தைப் பூர்த்தியாக மூடிக் கொள்ளும்படியான வஸ்திரம் அணிந்து கொள்ளுகிறான்; அசுத்தமாய் உழன்று கொண்டிருக்கும் அவனுடைய கெட்ட சுபாவமும் முற்றும் எடுபட்டுப் போகின்றது; அவன் தன் மதம் இன்னதென்பதையும், பெருந்தன்மை இன்னதென்பதையும் அறிந்தொழுகிக் கொள்கிறான்; பரோபகாரம், தான தருமம் ஆகியவை தனது சன்மார்க்கக் கடமையென்பதை கண்டுணர்ந்தொழு

கிக் கொள்கிறான்; மதுபானப் பழக்கத்தை விட்டொதுங்கிக் கொள்கிறான்; சூது முதலிய கெட்ட விளையாட்டுகளை விட்டும் பேணிக் கொள்கிறான்; நல்லொழுக்க நற்குணத்தைப் பாதிக்கும்படியான எல்லா விதத் தீயகாரியங்களையும் விட்டொழித்து பரிசுத்தப் புருஷனாகி விடுகிறான்.

"இன்னமும் அந்த நீக்ரோவரின் பெண்பாலர் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டதும் தங்கள் உடலை நல்ல விதமாக மூடும் ஆடைகளை உடுத்திக்கொண்டு, தங்கள் கற்பை பத்திரமாய்ப் பாதுகாத்துக் கொண்டு பத்தினிகளாய் விளங்கி விடுகிறார்கள். பொதுவாக அந்த வர்க்கத்தார் இஸ்லாத்தை தழுவிக் கொண்டதும் தங்கள் பழைய மூர்க்கத்தனங்கள், போர்க்குணங்கள், வீணான சண்டை சச்சரவுகள் யாவையும்விட்டு சாந்த சுசீலர்களாகி விடுகின்றனர். சுருங்கக் கூறுங்கால், இஸ்லாத்தின் இலக்ஷணங்களெல்லாம் அவர்களில் அமையப் பெற்று அவர்கள் மெய்யான மனுஷ்யத் தன்மை நிலவியவர்களாய் விடுகின்றனர். அதற்குமுன் அவர்கள் நித்த நித்தம் பல்வித பாபங்கள் இழைக்கக்கூடிய பழக்க முடையவர்களாயிருந்த போதிலும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதும் தங்கள் தீய இச்சையின்மீது பெரிய கல்லைப் போட்டதுபோல் அவர்களது பாபக் கிருத்திய பழக்கமெல்லாம் தொலைந்து போகின்றது.

"இவற்றை யெல்லாம் உற்றுணர்ந்து பார்க்குமிடத்து, இஸ்லாம் மதமானது உலக மனைத்தையும் சீரான வழியிலாக்கிவைத்து மேன்மையுறச்செய்து விடுகின்றது. மேலும் இதுகாலை ஐரோப்பியர்களாகிய நாம் அத்தகைய நாடுகளில் சென்று வியாபாரத்தை விருத்தி செய்ய முயலுவோமாயின் அது நாளுக்கு நாள் க்ஷீணித்தே போகின்றது. இதற்குக் காரணம் நம்மவர் மத விஷயமானது ஜனங்கட்கு பிடியாததேயாம். ஆனால் இஸ்லாம் மதம் எங்கு தலைதூக்கியபோதிலும் அங்குள்ள ஜனங்கள் வியாபாரத் துறையிலுங்கூட நாளுக்கு நாள் மேன்மையுற்று முன்னேற்றமடைந்து விளங்குகின்றனர். அந்த ஜனங்கள், உலகத்தை க்ஷேமமுறச் செய்து நன்னாகரிகத்துடன் விளங்கச் செய்வதற்குரிய விசித்திர வழிகளையெல்லாம் நன்கறிந்தவர்களாயிருக்கின்றனர். அவர்களது நிலை அங்ஙனம் திருப்திகரமாயிருக்க, கிறிஸ்துவப் பிரசாரகர்களாகிய நமது நிலையாதெனில், ஆப்ரிக்காவிலுள்ள நீக்ரோக்களிடையே நாம் நமது கிறிஸ்துவ மார்க்கத்தைப் பரத்த முற்பட்டு, அக்காட்டு மிராண்டிகளைகிறிஸ்துவர்களாக்க ஏராளமான ரூபாய்களை செலவழித்து விரயஞ்செய்தாலும், நம் உடற் பொருள் ஆவி யாவையும் அதற்காக அர்ப்பணஞ் செய்தாலுங்கூட வெற்றியென்பது நம்மவர்க்கு ஒரு சிறிதுங் கிடைக்காமல் நாம் அபஜயமேஅடைந்து திரும்புகிறோம். இம்மட்டுப் பிரயத்தினங்களினூடே நம் கிறிஸ்துவப் பிரசாரக இயக்கத்தால் அந்நாட்டில் கிறிஸ்துவராக மாறச் செய்த ஜனங்களின் ஜனத்தொகையானது விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய அளவுதான் வந்திருக்கிறது. இங்ஙனமிருக்க, இஸ்லாமியப் பிரசாரகர்களோ நம்கண் முன்னரேயே அந்த நீக்ரோக்களினின்று கணக்கற்ற பேர்களை முஸ்லிம்களாக்கி வருகின்றனர். அங்ஙனம் முஸ்லிமானவர்களின் ஜனத்தொகை அளவற்றதா யிருக்கின்றது.

"மேலே யான் எடுத்துக் கூறிவந்த விஷயங்களெல்லாம் உங்களுக்கு அதிருப்தியை உண்டாக்குபவனவாக இருக்கலாம். ஆயினும் அதை நாம் கவனிக்காமல் உதாசீனமாய்விட்டுப் போடுவோமானல் அது நமது முட்டாள்தனமாகவே கருதப்படும். நிற்க, நாம் கிறிஸ்துவப் பிரசாரத்தில் இறங்குவதற்கு முன்னால், 'இஸ்லாம்மதமானது நம் கிறிஸ்துவ மார்க்கத்துக்கு விரோதமான தல்லவென்பதை ஐயமற அறிந்து நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இன்னும் அந்த இஸ்லாம் மதமானது நம் கிறிஸ்தவமார்க்கத்தை ஆதரிக்கக்கூடிய சமரஸ மதமாகவே இருக்கின்றது. மேலும் யூதமதமானது ஒரு குறிப்பிட்ட வகுப்பாரிடையே மட்டும் பரவி இருந்துவருவதைப்போல் இஸ்லாம் மதமானது எந்த குறிப்பிட்ட வகுப்பாரிடையே குறுகி இருந்துவிடாமல் உலக முற்றும் எல்லா ஜாதியாரிடத்திலும் எல்லா தேசத்தாரிடையில் வேற்றுமையின்றி பரவி வியாபித்திருந்து வருகிறது. ஆகவே உலமுற்றும் இஸ்லாத்தின் பேரருளைப் பெற்று விளங்கிவருகின்றது. இதை கவனிக்குமிடத்து உலகமுற்றிலும் இறுதிகால ராஜ்ஜியம் இஸ்லாம் ராஜ்ஜியமாகவே விளங்குமென்பதில் வியப்பொன்றுமில்லை.

"இன்னும் இஸ்லாம் மதத்தின் போதனைகள் ஒரு சிறிதும் நம் கிறிஸ்துவ மார்க்கத்துக்கு முரணானதாயில்லை யென்பது உண்மை. ஏனெனின் இஸ்லாம் மதமானது இப்ராஹீம் நபி (அலை.) அவர்களுடைய தீர்க்க தரிசனத்தையும், நம் ஈஸா (நபி.) அவர்களுடைய அற்புதங்களையும் ஆக்ஷேபிக்காமல் ஒப்புக்கொண்டு ஆதரிக்கின்றது. கிறிஸ்துவ மதத்துக்கும் யூத மதத்துக்கு மிடையில் இடையிட்ட பிரிவினையு மிருக்கின்றது. கிறிஸ்துவ மதத்திலுள்ள பெரியதொரு குறை யாதெனில் அது உலகபாசத்தை விட்டு சன்னியாஸத் தன்மையை மேற்கொள்ளவேண்டு மென்று வற்புறுத்திப் போதிக்கின்றது. ஆனால் இஸ்லாம்மதமோ சன்னியாஸித் தன்மையைக் கண்டித்து இலௌகிகம் வைதிகம் இரண்டையும் ஆதரித்து ஜனங்களின் க்ஷேமத்தையே போதிக்கின்றது.

"மேலும் இஸ்லாம் மதமானது அடிமைகளுக்கு பேராதரவு அளித்து அவர்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்திசெய்துளது. பாமர மக்களிடையே ஒருவர்க்கொருவர் அன்னியோன்னியமாயும் நேசமாயும் இருக்கும்படி ஐக்கியம், சமரஸம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றைப் போதிக்கின்றது. மேலும் அனுஷ்டான விஷயங்களில் பாமர மக்கள் எம்மட்டும் சகித்துக்கொண்டு இலகுவாய் செய்ய முடியுமோ அவ்வளவு கட்டளைகளையே ஏற்படுத்தி இருக்கின்றது. இஸ்லாம்மதத்தில் அனுஷ்டிக்கக் கஷ்டமான கட்டளைகள் எதும் கிடையாது.

"கிறிஸ்துவ மார்க்கத்தில் சகோதரத்துவ விஷயமாக போதித்திருப்பதைக் காட்டினும் இஸ்லாம் மதம் போதித்திருக்கும்படியான சகோதரத்துவமாகிறது பன்மடங்கு மேன்மையும் சிரேஷ்டமும் உடையதா யிருக்கின்றது. கிறிஸ்துவ மதத்தின் சகோதர நேய சம்பந்த கட்டளையானது அனுஷ்டிக்க இயலாததாயும், அசாத்தியமானதாயு மிருக்கின்றது. இன்றே ஒரு அன்னியன் நம் கிறிஸ்துவ மார்க்கத்தில் சேர்ந்துகொள்வானானால் இதர கிறிஸ்துவர்கள் அந்தப் புதியமனிதனுடன் நடந்துகொள்ளும் சகோதரத்துவ முறையை காட்டினும், ஓர் அன்னியன் இஸ்லாம் மதத்தில் சேர்ந்துகொள்வானானால் அந்த க்ஷணமே அவனுடன் இதர முஸ்லிம்கள் நடந்துகொள்ளும் அன்னியோன்னிய சமத்துவ முறையானது பன்மடங்கு மேன்மையானதாகும். புதிய முஸ்லிம்கட்கு இஸ்லாம் மதத்தில் இருப்பதுபோன்ற கௌரவம், புதிய கிறிஸ்துவர்கட்கு கிறிஸ்துவ மார்க்கத்தில் கிடையவே கிடையாது. ஒருவன் எத்தகைய நீச ஜாதியானென கருதப்பட்டு வந்தபோதிலும் அவன் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டவுடன் முஸ்லிம்கள் அவனுடன் சமபந்தி போஜனம் புரியவும் தங்கள் இனத்தில் சேர்த்துக்கொள்ளவும் சம்மதித்து விடுகின்றனர். அப்படிப்பட்ட பாக்கியம் அன்னியர்கட்கு நம் கிறிஸ்துவ மார்க்கத்தில் அளிக்கப்படுவதே கிடையாது. கிறிஸ்துவனாகிவிட்ட பின்னருங்கூட அவனுடன் வேற்றுமையும் ஜாதிப் பூசலும் அனுஷ்டிக்கப்பட்டே வருகின்றது. நம்மவர்களில் வாய் வேதாந்தமட்டும் நெடுகப் பேசுபவர்கள் வெகுபேர்கள் இருக்கின்றனர். ஆனால் காரியாம்சத்தில் அவர்கள் முழுதும் பூஜ்ஜியமாய்த்தான் காணப்படுகின்றனர்.

"ஆப்ரிக்காவிலுள்ள நீக்ரோ ஜனங்கள் இதர மதங்களை ஏற்றுக்கொள்வதில் அவர்கட்கு சிற்சில ஆக்ஷேபங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று, அன்னோர் பல தாரங்களை மணந்துகொண்டு வாழும் வழக்கமும், இரண்டாவது அடிமைகளை வைத்துக்கொள்ளும் வழக்கமும் முக்கியமானவைகளாகும். இவற்றிற்கு இஸ்லாம் மதத்தில் சௌகரிய மிருக்கின்றது.

ஆகையால் கிறிஸ்துவர்களாகிய நாம் பிற மதத்துடைய குறைகளையே ஆராய்ந்து பேசிக்கொண்டிருப்பதை காட்டினும் நம்முடைய மார்க்கத்தில் என்னென்ன குறைகளிருக்கின்றனவென்பதை தெரிந்துணர்ந்து அதை நிவர்த்தித்துக்கொள்வதற்கான முயற்சி செய்தல் வேண்டும்.

இறுதியாய் முஸ்லிம்கள் நம்மவர்களைக் காட்டினும் அநேக அம்சங்களில் சிரேஷ்டமானவர்களென்பதை மறந்துவிடக்கூடாது. மேலும் அவர்கள் நமக்கு அநேக விஷயங்களை கற்பித்துக் கொடுக்கின்றார்கள். நாம் அதை நிராகரிக்காமல் பின்பற்றி நடந்தால் பரிபக்குவமும் க்ஷேமமு மடைவோமென்பதில் ஐயமில்லை" என்பதே.

திருவருள் தூது

எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்களால் அறிவிக்கப்பட்ட திருதூதுகள் மக்கட்கோடிகளுக்குப் பெரும்பயன் அளிக்க வல்லதென்பது ஒரு தலை. இத்தூதுகளை மக்கள் கோடிகள் தக்க முறையில் அறிந்துகொள்வான் வேண்டி வீரத் கமிட்டியாரின் அரும் பெரும் முயற்சியால் உலகமெங்கணும் பலமொழிகளிலும் அஃது வெளியிடப்பட்டு வருகிறது.

இன்னன்னோக்கோடு நமது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கமானது ஒவ்வொரு ஆண்டிலும் வீரத் பிரசங்கத்தின் பல ஆயிரப் பிரதிகளை வெளிப்படுத்தி வருகிறது. இவ்வாண்டிலும் 30,000 பிரதிகள் தயாரித்து சைகோன், சிங்கப்பூர், கிள்ளான், பினாங், ரெங்கூன், சிலோன் இந்தியாவின் பல பகுதிகளிலும் வழங்கியிருக்கிறது. 30 ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டும் அவை போதியனவாய்க் காணப்படவில்லை. ஆகவே அநேக ஆடர்களுக்குப் பிரதிகள் அனுப்பமுடியாது போனது வருந்தத் தக்கதேயாகும். ஆனால் அனுப்ப முடியாத்ததற்குக் காரணம் அவர்கள் நெறுக்கமாக ஆடர் அனுப்பியதேயாகும். இவ்விடமிருந்து பினாங், சிங்கப்பூர், ரெங்கூன் முதலிய ஊர்களுக்கு கப்பல் வசதிக் குறைவால் அனுப்பிவைக்க முடியாது போயிற்று. சிலோன் பகுதிகளுக்குப் பார்சல் கிடைப்பதற்கு குறைந்த பக்ஷம் ஒரு வாரம் செல்லுமாகையால் அப்பகுதிகளிலிருந்து நெறுக்கமாக வந்த ஆர்டர்களுக்குப் பிரதிகள் அனுப்பி வைக்க முடியாது போனமைக்கு மிகமிக வருந்தும்படி நேர்ந்தது. அடுத்த ஆண்டுகளில் கனவான்கள் ஆரம்பத்திலேயே தங்கள் ஆர்டர்களைப் பதிவு செய்து பிரதிகளைப் பெற்று தக்க முறையில் யவ்முன் நபிவிழாவைக் கொண்டாடுவார்களாக.

பிரதிகள் வாங்கி வினியோகித்தவர்கள்.

வாக்குமா M. S. முஹம்மது களஞ்சியம் மரைக்காயர் அவர்கள் சார்பாக வினியோகிக்கதயாரித்தது	4000
கூத்தனல்லூர் ஈதமீலாத நபவீ சபை	2000
தஞ்சாவூர் வீரத் கமிட்டியார்	1000
சிங்கப்பூர்நைனா முஹம்மது & ஸன்ஸ்,	1000
சிங்கப்பூர் இந்திய நாணய வியாபார சங்கத்தார்	1000
கொளும்பு தப்லீகுல் இஸ்லாம் சமாஜம்	1000
ரெங்கூன்சோலிய முஸ்லிம் அஸோஸியேஷன்	1000
ஆம்பூர் மத்ரஸா மஜ்ஹருல் உலூம்	1000
கம்பளை டவுன் மஸ்ஜித் முஸ்லிம் சொசைட்டி	500
கோலாலம்பூர் K. இஸ்மாயில் கனி ராவுத்தர் & Co.,	500
கிள்ளான் M. M. அப்துல் காதிர் மரைக்காயர்	500
நாகை ஜமா அத்துல் முஸ்லிமீன் தீனிய்யா நஜ்மு	500
பேட்டை தர்பியத்துல் இஸ்லாம் பாலியர் முஸ்லிம் சங்கம்	500
புதுப்பேட்டை அ. பி. மு. செய்யித் இப்ராஹீம் & பிரதர்	500
கம்பம் திருநபி பிறந்த நாள் கொண்டாடும் குழுவினர்	500
காயல்பட்டணம் முஸ்லிம் மகாஜன சபை	500
காயல் பட்டணம் முஸ்லிம் ஜன நாயக சபை மீலாத் ஷரீப் கமிட்டி கௌதிய்யா சங்கம்	500
சேம்பியன் ரிப்ஸ் T. K. அப்துற்றஹ்மான் சாஹிப் & ஸன்ஸ்	500
கிள்ளான் R. E. M. & Co,. கடை பிள்ளைகள்	350
பினாங் முஸ்லிம் மர்ஸண்டு சொசைட்டி	300
சித்தார்க் கோட்டை முஸ்லிம் தர்ம பரிபாலன சபை	300
ஏரல் லத்தீபிய்யா முஸ்லிம் பொது நன்மை வாலிபர் சங்கம்	275
ஹட்டன் செண்ட்ரல் இஸ்லாமிக் அஸோஸியேஷன்	250
சாலையூர் எங் முஸ்லிம் அசோஸியேஷன்	250
நல்லூர் தர்பியத்துல் இஸ்லாம் பால்ய முஸ்லிம் சங்கம்	250
பேட்டை இஷா அத்துல்இஸ்லாம்நிலையம்	250
நாகூர் கவ்தியா பைத்சபா	250
தலவாக்கொல்லை E. K. பகிர் முஹம்மது & Co,	250
காத்தாங்குடி அ. ம. சின்னலெப்பை மரைக்காயர்	250
ராஜகிரி இஸ்லாமிய்யா இளைஞர் நிலையம்	250
கண்ணமங்கலம் வாலிபர் சங்கம் K. அஜீமுத்தீன்	250

பண்டார வாடை K.A. பகீர் முஹம்மது சாஹிப் 250
கோலாலம்பூர் பெடரல் பேக்கரி 250
சைகோன் ஹாஜி. ஐ. மு. முஹம்மது இஸ்மாயில் ராவுத்தர் பிரதர்ஸ் 250
தனுஷ்கோடி K. O. N. மீரா 200
வடகரை அன்வாருல் இஸ்லாம் சங்கம் 200
அத்திக்கடை ஜவாஹிருல் முஸ்லிம் ருத்திப் சங்கம் 200
புத்தன் தருவை முஸ்லிம் வாலிபர் சமாதான சங்கம் 200
தொண்டி மு. ரு. மு. முஹம்மது அப்துல் காதிர் 200
சென்னை O. S. சதக்தம்பி மரைக்காயர் 200
சென்னை மா. மு. முஹையித்தீன் தம்பி & Co. 200
அரங்குடி ருத்திபத்துல் ஜன்னு 200
மதுரை மௌலவி முஹம்மது கனி ஆலிம் சாஹிப் 200
விளாச்சேரி K. சிக்கந்தர் சாஹிப் 150
சின்னதாராபுரம் ரபீகுல் இஸ்லாம்சங்கம் 150
மண்டபம் P. A. M. முஹையித்தீன் குப்பை மரைக்காயர் 150
கூனூர் C. H. ஷேக்ஹைதர் & Co. 150
மாத்தளை சவாதுல் அஃலம் சங்கம் 150
ரவணசமுத்திரம் ம. மீருபிள்ளை ருவுத்தர் 150
சின்னமனூர் பாலிய முஸ்லிம்சங்கம் 150
அம்பகரத்தூர் இ. கா. அப்துல் அஜீஜ் ஆலிம் 150
கோயமுத்தூர் முஸ்லிம் அபிவிர்த்தி வாலிபர் சங்கம் 125
வழுத்தூர் முஸ்லிம் கல்வி அபி விருத்தி சங்கம் 125
பூதமங்கலம் மஹ்ருமிய்யா முஸ்லிம்சபை 125
நீர்கொழும்பு ரவ்ஹுல் ஒனிமா சங்கம் 100
கொழும்பு வி. ஆர். முஹம்மதுகனி 100
புத்தளம் M. N. K. ஹமீது ஹுசைன் மரைக்காயர் 100
கொழும்புபொரவளை C. M. M. ஹனீபா 100
வியாங்கொடை M. A. B. & Co. சுலைமான் 100
ரெங்கூன் K. S. காதர் இப்ருஹிம் Co. 100
மலாக்கா R. K. Y. இஸ்மாயில் 100
பாண்டுசேரி குத்தாமுல்இஸ்லாம் சங்கம் 100
திருவங்துரம் திருவிதாங்கோடு முஸ்லிம் சமாஜம் 100
அய்யம்பேட்டை எங் முஸ்லிம் அசோஸியேஷன் 100
அய்யம்பேட்டை A. K. முஹம்மது சுல்தான் சாஹிப் 100
குலசேகரம்பட்டணம் K. P. முஹையித்தீன் அப்துல் காதிர் 100
பாண்டுசேரி ஹாஜீ M. A. முஹம்மது ஹனீப் 100
மட்டஞ்சேரி மலபார் இஸ்லாம் 100
மதுரை க. சி. மு. முஹம்மது இப்ருஹீம் 100
முதுகுளத்தூர் ஹிம்மதுல் இஸ்லாம் எங்மேன் சொசைட்டி 100
காயாமொழி றஹ்மானிய்யா எங்மேன் அசோஸியேஷன் 100
திட்டச்சேரி ருத்திபத்துல் காதிரிய்யா பீ உம்மத்துல் முஹம்மதிய்யா 100
சென்னை அ. ம. அப்துல்லா சாஹிப் ஸன்ஸ் 100
ருஜகிரி நெ. அ. பகீர் முஹம்மது சாஹிப் 100
சென்னை ஹாஜீ M. M. காதிர் பகீர் ருவுத்தர் & Co 100
நிரவி அல்காதரிய்யத்துஸ்ஸயீதிய்யா 100
கிளியனூர்ஹிதாயத்துல்இஸ்லாம்சங்கம் 100
தங்கச்சிமடம் நெ. இப்ருஹீம்லெப்பை 100
திருக்கோணமலை S. E. அப்துற் றசூல் 100
புங்கனூர் அஞ்சுமன் முனீருல் இஸ்லாம் 100
அதிராம் பட்டணம் ஷம்ஸுல் இஸ்லாம் சங்கம் 100
வாசுதேவநல்லூர் ப. முஹம்மது ஹுசைன் சாஹிப் 100
டெலுக் அன்ஸன் V. O. ஹஸன் முஹம்மது 100
டிரங்பார் கமருல் இஸ்லாம் சங்கம் 100
மண்டலகோட்டை மலாஹிருல் இஸ்லாம் சங்கம் 100
டிக்கோயா K. முஹையித்தீன் பாக்ஷா சாஹிப் 100
நீடூர் S. E. அப்துல் காதிர் 100
மன்னார் A. O. ஹபீப் முஹம்மது 100
திருக்கோவிலூர் சந்தைபேட்டை வெ. உ. மம்மு சாஹிப் 100
கொளக்குடி கா. முஹம்மது யூசுப் சாஹிப் 100
பெரியாங்குப்பம் P. S. அப்துல் கப்பார் சாஹிப் 100
வடகரை மளிகை அ. முஹம்மது ஹுஸைன் 100
50, 25, 12 ஆக பலயிடங்களுக்கும் 1600

ஆக 30,000

பா. தா. அவர்களுக்குப் பகிரங்கக் கடிதம்

சென்னை தாருல் இஸ்லாம் ஆசிரியர்களும், ஜவாஹிருல் புர்கான், இயேசுவின் இரகசியம், இஸ்லாமிய ஞானபோதம் முதலிய கிரந்தங்களின் கர்த்தாக்களுமாகிய பா. தாவூத்ஷா பி. ஏ. அவர்களுக்கும், ஹாபிஸ் யூசுப் சாகிப் அவர்களுக்கும் அறிவிப்பதாவது :—

தங்களால் வெளியிடப்பட்டிருக்கும் கிரந்தங்களிலும், பத்திரிகைகளிலும் ஈஸா (அலை) சிலுவையில் அறையப்பட்டார்களென்றும், அவர்களுக்கு தந்தை உண்டு என்றும், மறுமையில் மானிடர் சரீரத்துடன் எழுப்பப்படுவதில்லையென்றும், நரகம், சுவர்க்கம் இல்லையென்றும் எழுதியும் இயம்பியும் வருகிறீர்கள். இவைபோலொத்த குப்ரிய்யத்தான— சன்மார்க்கத்திற்கு முரணான அநேக கொள்கைகள் தங்கள் நூல்களில் மலிந்து கிடக்கின்றன. இக்கொள்கைகளை யாரேனும் ஒப்புக்கொள்வாராயின் நிச்சயமாய் அவர் சபிக்கப்பட்ட காபிரும் முர்தத்தும் ஆய்விடுவர் என்பதில் ஐயமில்லை. தாமே வழிதவறியிருக்கையில் மற்றவர்களுக்கு வழி காட்டுவதென்பது எங்ஙனம் பொருந்தும்? எனவே இக்கெட்ட கொள்கைகளைப்பற்றி தங்களிடம் சமரஸமாய் விவாதித்து சத்தியமான கொள்கையைத் தெரிந்துகொள்ள முஸ்லிம்கள் பல சந்தர்ப்பங்களிலும் முயற்சித்து வந்தனர். என்றாலும் தாங்கள் தப்பு சால்ஜாப்புக்களைச் சொல்லிக்கொண்டு புறங்காட்டி வந்துள்ளீர்கள். அதிர்ஷ்டவசமாய் தாங்கள் அடியக்கமங்கலம் விஜயம் செய்யப்போகின்றீர்கள் அவ்விடத்திலாவது அல்லது கூத்தாநல்லூர், புதக்குடி, பூதமங்கலம் முதலிய நகரங்களிலாவது, அல்லது தங்களால் குறிப்பிடப்படும் இதர விடங்களிலாவது மேற்கண்ட விஷயமாய் விவாதத்தை நடத்த நாங்கள் தயாராக இருக்கின்றோம். தாங்கள் உண்மையில் முஸ்லிம்களுக்காக உழைப்பவர்களாக யிருப்பீர்களேல், இந்த நேர்மையும் நியதியுமான சாலெஞ்சை ஒப்புக்கொண்டு விவாதித்து நேர்வழியைப் பின்பற்றுவீர்களாக.

இங்ஙனம்

மௌலவி அம்ஜத் இபுராகீம் சாஹிப் வாயிஜ், மாயவரம்.

மௌலவி அ. அபூபக்ர் சாஹிப், நாஸிர், மத்ரஸா மத்லஉல் உலூம், வடகரை.

மௌலவி முகம்மது முஸ்தபா சாஹிப், ஷை மத்ரஸா உஸ்தாது.

மௌலவி அப்துல்கரீம் சாஹிப், மத்ரஸா ஹஸனாத்துல் ஜாரியாத் உஸ்தாது, அய்யம்பேட்டை.

மௌலவி அப்துர் ரஜ்ஜாக் சாஹிப், திருநாகேஸ்வரம் மத்ரஸா உஸ்தாது.

மௌலவி முகம்மது மியான் சாஹிப் வாயிஜ், திண்டுக்கல்.

மௌலவி அப்துல் ஹமீது சாஹிப் (பாகவி) அய்யம்பேட்டை.

மௌலவி அப்துல் லதீப் சாஹிப் (பாகவி) மேற்படியூர்.

மௌலவி ரூஹுல் குத்தூஸ் சாஹிப் மத்ரஸா முதர்ரீஸ், நடுக்கடை.

N. B. இக்கடிதத்திற்கு பதில் அடியில் குறிப்பிடும் அட்ரஸுக்கு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அட்ரஸ் :—மௌலவி நா. அப்துல் வஹ்ஹாப் சாஹிப், மத்ரஸா மன்பஉல் ஹஸனாத், பூதமங்கலம்.

மேற்கண்ட பஹிரங்கக் கடிதத்தை அச்சிட்டு போஸ்ட் மூலம் பா. தாவூத்ஷாவுக்கு நேர்முகமாகவும், அவர் விஜயஞ்செய்த அடியக்கமங்கலம் வீரத் கமிட்டியார் மூலமாகவும் அக்கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது. எல்லாப் பொதுஜனங்களுக்குக் கடிதம் வழங்கப்பட்டது. அங்ஙனமிருக்க, பா. தாவூத்ஷா அவரது வழக்கம்போல் புறங்காட்டி மௌனஞ் சாதித்துப்போய்விட்டார்.

ஸன்மார்க்கத்திற்கு முரணானதும், குப்ரியத்தை வருத்தக்கூடியதுமான கொள்கைகளை ஸ்தாபிக்க முயலும் இவர், இவ்வாறு புறங்காட்டிச்சென்றுவிடுவது கோழைத்தனமான வேலையாகுமென்பதுயாவருமறிந்ததே.

இவருடைய கொள்கைகள் குப்ரை உண்டாக்கக் கூடியதாகயிருக்கிறதென்று சேலஞ்சு பண்ணியிருக்கும் நிலைமையில் அதற்கு பதிலிறுக்க வேண்டியது இவருடைய கடைமையாய் விடுகின்றதன்றோ? அதனை விடுத்து மௌனம் சாதித்து விடுவதால் அவருடைய கொள்கைகள் தவறானதென்பதை ஜனங்கள் நன்கறிந்துகொள்ளலாம். இவருடையகெட்ட கொள்கைகள் அறவே, தென்னாட்டில் பரவாதிருப்பதற்கு முஸ்லிம்கள் மென்மேலும் முயற்சித்து அதற்கு தக்க பந்தோபஸ்து செய்ய முன் வருவார்களாக!

அப்துல் ஹாதீ, தஞ்சை ஜில்லா வாசி.

இஷாஅத்துல் ஹஸனாத்

பீதர்ஜுமத்தில் பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்

வேலூர் மத்ரஸயே பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் அராபிக் கலாசாலையின் ஸ்தாபகரும், ஷம்ஸுல் உலமாவுமாகிய அஃலா ஹஸ்ரத் கிப்லா மர்ஹூம் வ மக்பூர் அல்ஹாஜ் ஷாஹ் அப்துல் வஹ்ஹாப் சாஹிப் கிப்லா, அவர்களினது கட்டளைக்கேற்ப, ஷை கலாசாலையின் ஆசிரியரும், கியாதிவாய்ந்த வாயிஜுமாகிய மௌலானா மௌலவீ அல்ஹாஜ் அப்துல் காதிர்பாதுஷா சாஹிப், மர்ஹூம் வ மக்பூர் அவர்களால் உர்துவிலியற்றப் பெற்றுள்ள "அல்பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்" என்னும் அரும் நூலின் மகிமையை இவ்வுலகு நன்கறிந்திருக்கின்றது. ஆனால் அதன் அரும்பெரும் பிரயோசனங்களை உர்து பாஷை மட்டுங் கற்றுள்ள ஒரு சாரார் மட்டும் அடைந்து வருவதைக் கண்ட, அக் கலாசாலையின் நாஜிர் மௌலானா மௌலவீ அல்ஹாஜ் ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹிப் கிப்லா அவர்கள், இவ்வரும் நூல் நந்தென்னாட்டில் மிகுதமாயுள்ள முஸ்லிம்களின் பழக்கத்திலுள்ள தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்படுமாயின், அளவற்ற பிரயோசனமேற்படுமெனக் கருதியதாலும், அதனைத் தமிழில் மொழி பெயர்த்து அச்சிடுமாறு பன்முறையும் பல கனவான்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்கவும் மொழி பெயர்த்து அச்சிடப் பட்டிருக்கின்றது.

இவ்வரும் நூலில், நம்மவரின் நித்திய அலுவல்களாகிய உணவு, உடை, கைத்தொழில், வர்த்தகம் முதலிய விஷயங்கள் சம்மந்தமாக நம் சன்மார்க்கம் என்ன சட்ட திட்டங்களை ஏற்படுத்தி யிருக்கிற தென்பதையும் அவைகளிலெது வஸ்த்து சன்மார்க்கத்திற்கு முரண்பட்டிருக்கிறதென்பதையும் நன்கு விளக்கப் பட்டிருக்கிறது. எனவே, இஃது நம்மவர்களுக்குத் தக்கப் பிரயோசன மளிக்கவல்ல நூல் எனத் தைரியமாய்க் கூறலாம். இதில் 2000-க்கு அதிகமான "மஸ் அலாக்கள்" அடங்கியிருக்கின்றன. இதனை ஒவ்வொருவரும் வாங்கிப் பார்த்து பயனடைவார்களென மிக மிக எதிர் பார்க்கின்றோம்.

கிரயம் ரூ. 1—8—0

கிடைக்குமிடம் :—

மானேஜர்,
மத்ரஸா பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்,
அரபிக் காலேஜ், வேலூர்.

F. M. S. & S. S. ஏஜெண்டு,
மெஸர்ஸ். K. A. பகீர் முஹம்மது சாஹிப் & Co.,
27, ரம்பா ஸ்டீட், கிள்ளான்.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.